என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்




G for h
GOLD WINNER FOR HEALTH
Gold Winner
G இருந்தால்
பக்கம் H இருக்கும்.
கோல்டுவின்னர்
இருந்தால்
ஆரோக்கியம்
இருக்கும்!
(EFA)
E

ஜெயஸ்ரீ ராஜ் நினைவு சிறுகதைப் போட்டி-2006 முடிவுகள்



'சிறுகதைப் போட்டி' என அறிவித்தாலும் அறிவித்தோம்... பொறுப்பாசிரியர் அறையில் கால் வைக்க இடமில்லாமல் போய் விட்டது. ஆயிரக்கணக்கான கதைகள் வந்து குவிந்து விட்டன. கடைசி நாளான ஜூன் 1ம் தேதி அன்று மட்டும் ஐந்நூறு கதைகள் பதிவுசெய்யப்பட்டன.

இரண்டாம் சுற்றுக்கான கதைகளைத் தேர்ந்தெடுக்க உதவிய சுப்ர.பாலன், சாருகேசி, ஜி.எஸ்.எஸ்., நந்தகுமார், ஜி. ஸ்வாமிநாதன், வி. கௌரி, எஸ். சுஜாதா, கருணா ஸ்ரீனிவாஸன், லக்ஷ்மி ஸ்ரீனிவாஸன், ராஜேஸ்வரி வெங்கட், மாலதி சந்திரசேகரன், ஆகியோருக்கு மனமார்ந்த நன்றி!

டி.வி. புகழ் கடபுஸ்ரீ தணிகாசலம், கவிஞர் நா. முத்துக்குமார், கவிஞர். அ. வெண்ணிலா ஆகியோர் நடுவர்களாக இருந்தனர். இவர்களுடன் 'மங்கையர் மலர்' பொறுப்பாசிரியர் அனுராதா சேகரும், விற்பனை மேலாளர். எஸ். தனபாலனும் பங்கேற்று இறுதிச் சுற்று கதைகளைப் பரிசீலித்ததில், கீழ்க்கண்ட சிறுகதைகள் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

முதல் பரிசு - ரூ. **10,000**
விடியல் - பானு குமார், மும்பை - 80.

இரண்டாம் பரிசு - ரூ. **7,500**
கூட்டாஞ்சோறு - சிபி, பட்டிவீரன்பட்டி.

மூன்றாம் பரிசு - ரூ. **5,000**
மஞ்சள் பூப்போட்ட பச்சைப் புடைவை
- வள்ளி ராமகிருஷ்ணன், திருநெல்வேலி.

முதல் பரிசு பெற்ற கதை இந்த இதழில்...
பிரசுரத்துக்குத் தேர்வான கதைகள் விவரம் அடுத்த இதழில்...
பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்து! ஆர்வமுடன் கலந்து கொண்ட வாசகிகளுக்கு நன்றி!

(ஆர்)

படம் : ஸ்ரீஹரி



முதலில் படிக்க...

சமையல்

சிறுகதைகள்

மருத்துவம்

வசீகரத் தொடர்கள்

அழகு

குழந்தை நலம்





ஆஹா பரிசு!

இந்த இதழில்
'ஆஹா 50!' என்ற தலைப்பில்
இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப்
படியுங்கள். மிகச் சிறந்த
ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து,
எழுதி அனுப்புங்கள். உங்கள்
தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும்
பொருந்தினால்
குலுக்கல் முறையில் ப்ரீமியர் 3 டயர்
ஸ்டீமர் பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு
மட்டுமல்ல, அந்தக் குறிப்பை
எழுதியவருக்கும் ஸ்டீமர் பரிசு!
'ஜூலை - ஆஹா பரிசு!' என்று
மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண்,
வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில்
மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.7.2006



அட்டையில் : ஆரு
படம் : ஜி. வெங்கட்ராம்



* ரூ. **10,000/-**
பரிசு பெறும் சிறுகதை - 146

* பிருந்தா ஜெயராமனின்
'அம்மாவுக்கு' -
அடுத்த இதழில்...

* ஆஹா பரிசு (ஜூன்)
யாருக்கு? - 157

...ளிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 26 இதழ் : 6 ஜூலை 2006

திருக்கயிலாய யாத்திரை

ரயில் வழியாக	விமானம் வழியாக
ரூ. 53,000/- மட்டுமே	ரூ. 57,000/- மட்டுமே

03.07.06; 02.08.06; 02.09.06

(18 யாத்திரைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளோம்)

பஞ்சதுவாரகை யாத்திரை
09.08.06 12 நாட்கள்
ரூ. 8,900/-

முக்திநாத் - காட்மாண்டு - போக்ரா
23.08.06 11 நாட்கள்
ரூ. 17,500/-

டில்லி - ஜம்மு வைஷ்ணவி - அமிர்தசரஸ் - மணாலி - டில்லி
23.08.06 ரூ. 7,900/-

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும்

சென்னை - பூரி - புவனேஷ்வர் - கல்கத்தா கயா - புத்த கயா - காசி - அயோத்தியா - நைமிசாரண்யம் அலகாபாத் - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - ஜம்மு வைஷ்ணவி டில்லி - ஆக்ரா - மதுரா - பிருந்தாவன் - சென்னை
15.09.06 ரூ. 9,900/-

அனைத்து சுற்றுலாக்களுக்கும் ரயில் டிக்கெட், சைவ உணவு, பஸ் வசதி மற்றும் தங்கும் அறைகள் உட்பட

ஸ்ரீ டிராவல்ஸ்

சென்னை: 044 - 55345081; 082; 083

sritrave@satyam.net.in கோவை: 0422 - 3250482; 938103634

உடல் எடை குறைக்க சுகர் - மூலிகை சிகிச்சை

உடல் எடை குறைக்க: வீட்டில் இருந்தால் ஒரு மாதத்தில் 15 கிலோ வரை / இங்கு தங்கினால் 12-நாளில் 10 கிலோ வரை குறைகிறது. உடலில் உள்ள அழுக்குகள், துர்நீர் வெளியேறுவதால் உடல் எடை குறைகிறது. அப்போது அல்சர்,பிரசர், மூழங்கால் வலி, தலைவலி, மாதவிடாய் பிரச்சனைகள் போன்ற மற்ற நோய்களும் தொந்தரவுகளும் இயற்கை முறையில் பாதுகாப்பாக பெருமளவு குணமாகின்றன. பலருக்கு ஒரே வாரத்தில் எடை குறைவது நன்கு தெரியும் இரண்டாம் மாதத்திலிருந்து மேலும் மேலும் எடை குறைவதோடு உடல் அளவும் (SIZE) வேகமாக குறைந்து உடல் நன்கு இறுகும், பலமும் அழகும் அதிகரிக்கும்.

உடலிலுள்ள கொழுப்பு , ஊளைச் சதை போன்றவை நீங்குவதால் பெண்களுக்கு கருத்தரிக்கும் வாய்ப்பு மிகவும் பிரகாசமடையும். ஆண்களுக்கு நேரம், பலம் திறன், உறுதி ஆகியவை நன்கு மேம்பட்டு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தாம்பத்திய உறவு சிறப்படையும்.

உடலின் இயற்கையான இயக்கத்தின் மூலம் அழுக்குகள் வெளியேற்றப்படுவதால் எவ்வித பின்/பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. ஒரு மாத மருந்து ரூ.1100/- முதல் ஐந்து விலைகளில் கிடைக்கும் போனில் முகவரி தெரிவித்து V.P.P.மூலமாகவும், நேரிலும் மருந்துகளைப் பெறலாம்.

சுகர்: உடல்நிலையைப் பொறுத்து நிறையப் பேருக்கு ஒரு மாதத்திற்குள் நார்மலாகிவிடும் வாய்ப்புள்ளது பின்பு எமது மூலிகை மருந்துடன் எளிய உணவுமுறையில் வாழ்நாள் முழுவதும் பக்க / பின் விளைவுகளின்றி சுகரை நன்கு கட்டுப்படுத்தலாம். பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப்பெறலாம்.

எமது மூலிகை மருத்துவத்தில் எந்த தொந்தரவுக்காக சிகிச்சை பெற்றாலும் மொத்த உடல் ஆரோக்கியமே மேம்படும் பசி, தூக்கம் ஒழுங்காகும். அல்சர், கேஸ்ட்ரபுள் போன்றவை நீங்கும். முடி உதிர்வது , முகப்பருக்கள் குணமாகும் இரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மேலும் மூழங்கால் நீர்க்கட்டு, உடல் வலிகள், வயிற்று கோளாறுகள் ஆண்மைக் குறைவு கேன்சர் உட்பட, உணவு சாப்பிட்டு நடமாடும் நிலையில் உள்ளவர்களின் எல்லா நோய்களுக்கும் **Dr.M.முத்துக்குமார்** B.Sc., DNYS, DEMS, இயற்கை மருத்துவ இல்லம் (பதிவு) 40-அனுமன் கோவில் வீதி, கோபிசெட்டிபாளையம் - 638 452, ஈரோடு (Dt) போன்: (04285) 22895 வீடு: (04285) 240650 செல் : 93 6020 9393 . www.natureclinic.net *e-mail* : natureclinic@gmail.com



ஒரு வார்த்தை!

சாஃப்ட்வேர் இன்ஜினியர் அவன். பல் மருத்துவ மாணவி அவள். இருவருக்கும் பள்ளி நாட்களிலிருந்தே காதல். இரு வீட்டிலும் சம்மதமே! "பெண்ணின் படிப்பு முடிந்ததும், கல்யாணம் செய்து வைக்கிறோம்" என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

நடுவே என்ன நடந்ததோ... யார் மீது தப்போ... காதலிக்குத் தெரியாமல், வேறொரு பணக்கார இடத்துப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள ஒப்புக் கொள்கிறான். கல்யாண நாளன்றுதான் காதலிக்கே விஷயம் தெரிகிறது. முதலில் நம்பவே மறுத்தவள், பெற்றோருடன் நேரில் போய்ப் பார்த்த பிறகு அதிர்ந்து போகிறாள்.

"ச்சீ! இவ்வளவுதானா நீ?" என்று சாடி விட்டு, ஆவேசமாகத் திரும்புகிறாள். இதோடு, கதை முடியவில்லை.

"பணத்துக்காக, இவ்வளவு வருஷம் காதலித்த பெண்ணையே ஏமாற்றிய நீ, நாளைக்கு இதைவிட வசதியான இடம் கிடைத்தால் எனக்குக் கடுக்காய்க் கொடுக்க மாட்டாய் என என்ன நிச்சயம்? கெட் அவுட்!" என்று மணப்பெண்ணும், கொதித்துப் போய் துரத்தி விட... மணமகன் அவமானத்தோடு வெளியேறியிருக்கிறான்.

அந்த இளைஞன், காதலித்த பெண்ணை மணக்க ஏன் மறுத்தான்? கல்யாண விஷயத்தை ஏன் மறைத்தான்? அவன் பக்க நியாயம் என்ன? எதுவும் தெரியவில்லை. ஆனால் இந்தச் சம்பவம் நடந்தது என்னவோ நிஜம்! இரண்டு பெண்களும் புறக்கணித்ததும் உண்மை! சமீபத்தில் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

தோழியரே... இதுபோன்ற நிகழ்ச்சி, சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் நடந்திருந்தால்...

"அய்யோ... அத்தான்... இந்த ஏழையை ஏன் வெறுத்தீர்கள்? உங்கள் வீட்டில் ஒரு வேலைக்காரியாகவாவது பணிவிடை செய்யும் பாக்கியம் தாருங்கள்"

மங்கையர் மலர்

இந்தியாவின் நெ.1 மகளிர் இதழ்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
பி.ஆர். ராஜன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 -22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

என்று காதலி அழ... ''ஆயிரம் கனவுகளோடு மண மேடை வரை வந்து விட்ட இந்த அபாக்கியவதியை கைவிட்டு விடாதீர்கள்'' என்று மணப்பெண் அழ...

எத்தனை கறுப்பு - வெள்ளை தமிழ் சினிமா பார்த்திருக்கிறோம்?

இந்த அளவுக்கு சினிமாத்தனமாக வசனம் பேசா விட்டாலும், ஆணாதிக்க உலகில், இரு பெண்களும் செய்வதறியாது துக்கித்து நின்றிருப்பார்கள்.

''ஆம்பளைன்னா ஆயிரம் செய்வான்! நீதான் அனுசரிக்கப் போகணும். இல்லன்னா குடும்ப மானம் போயிடும்'' போன்ற மிரட்டல்களுக்கு அடிபணிந்து, ஏதாவது ஒரு பெண் விட்டுக் கொடுக்க... மாப்பிள்ளை 'ஜாம் ஜாம்' என்று மணமேடை ஏறுவான்!

இந்தக் கூத்தெல்லாம் இனி நடக்காது. பெண்கள் 'சென்டிமென்ட்ஸ்' விலங்குகளை உடைத்துக் கொண்டு வெளியே வந்து விட்டார்கள். அவர்கள் அப்படி, துணிச்சலாக வெளிவர உதவியது கல்வி, வேலை, சம்பாத்தியம்... அவைதரும் தன்னம்பிக்கை!

'சபாஷ் பொண்ணுங்களா!' என்று தட்டிக் கொடுக்கும் அதே வேளையில், சின்னதொரு எச்சரிக்கை மணியும் அடிக்க வேண்டியுள்ளது. அதே தன்னம்பிக்கையும், துணிச்சலும் ரொம்பவும் அதிகமாகி, அகங்காரமாகவும், போக்கிரித்தனமாகவும் மாறும் அபாயமுள்ளது.

பெரியவர்களை, குறிப்பாக மாமனார் மாமியாரைத் துச்சமாக மதிப்பது, கணவனைத் தூக்கி எறிந்து பேசுவது, பணம் இருக்கும் தைரியத்தில் மனம் போனபோக்கில் வாழ்வது, குடும்ப உறவுகளில் கசப்பை உருவாக்கி, தானும் அதில் அழிந்து போவது... சொல்லவே வேண்டாம்... பெருகி வரும் விவாகரத்துகளே சாட்சி!

நம்முடைய கல்வியும், வருவாயும், சுயமேன்மைக்கும் குடும்பத்தாருடைய நன்மைக்கும் பயன்பட வேண்டுமே தவிர, அழிவுக்கு அல்ல!

எதற்குப் பணிந்து போக வேண்டும், எதற்குப் பொங்கி எழ வேண்டும் என்ற பட்டறிவை ஏட்டுக் கல்வியும் பதவியும் நமக்குத் தரமாட்டா. மனம் பக்குவப்பட்டு அறிவோடு கைகோத்தால் மட்டுமே அந்தத் தெளிவு பிறக்கும். ஓடிக் கொண்டேயிராமல் சற்று நின்று மனசாட்சி பேசுவதையும் கவனமாகக் கேட்போமே!

அனுஜா நடராஜன்

சென்னையில் பிடித்த இடம்?

கலா மூர்த்தி,
சென்னை - 4.

புடைவை, நகைக்கடை விளம்பரங்களில், ஆடிப்பாடும் பெண்கள், உடுத்திக் கொள்ளும் ஆடைகளை, அணியும் நகைகளை, மீண்டும் கடைகளில் விற்பனைக்கு வைத்து விடுவார்களா? அல்லது அந்தப் பெண்களுக்கே கொடுத்து விடுவார்களா? என் நெடுநாளைய சந்தேகத்தைத் தீர்த்து வைப்பீர்களா?

'ஐயோ! இவ்வளவு விலையுயர்ந்த புடைவையைக் கட்டிக் கொண்டு, வைர நகையெல்லாம் அள்ளிப் போட்டுக்கிட்டு 'ஜிங்ஜிங்'னு ஆடறாங்களே! ஏதாவது தொலைஞ்சு போனால் என்னாகும்?'னு தேவையில்லாத கவலை கூட எனக்கு உண்டு. ஆனால் அதுக்கெல்லாம் சான்ஸே

-அனுஷா நடராஜன்

இல்லைன்னு சமீபத்துலதான் தெரிஞ்சுகிட்டேன்.



• சுனிதா


தாங்கள் உடுத்திக் கொள்ளும் புடைவை, ரவிக்கையை மாடல்கள் மீண்டும் ஜவுளிக்கடைக்காரரிடமே ஒப்படைத்து விட வேண்டும். கடைக்காரர்கள், அந்த ரவிக்கையை கடை பொம்மைக்கு அணிவிப்பார்கள். புடைவையை வாடிக்கையாளர்களின் பார்வைக்கு வைத்து விடுவார்கள். கொஞ்ச நாள் போனதும், அந்தப் புடைவையை செகன்ட்ஸ் சேல்ஸில் விற்று விடுவார்கள். அல்லது தெரிந்தவர்களுக்குப் பரிசளிப்பார்கள். நிச்சயம் கவுண்டர் சேல்ஸுக்கு வராது!

நகை விளம்பரம் என்றால், கிலோ கணக்கில் நகைகளை பட்டியல் போட்டு, ஒரு பெரிய பெட்டியில் எடுத்துச் செல்வார்கள். நகைக்கடை பணியாளர்களும், தனியார் நிறுவன பாதுகாப்பு அதிகாரிகளும் துணைக்கு வர, ஷூட்டிங் நடக்கும்.

யார், யார் என்னென்ன அணிகலன் என்று குறிப்பிட்டு, அதில் சம்பந்தப்பட்டவர்களின் கையெழுத்தும் வாங்கிக் கொள்வார்கள். படப்பிடிப்பு முடிந்ததும் திருகாணி முதல், எல்லாமே சோதனை செய்த பின்புதான் வெளியே அனுப்புவார்கள்.



சமீபத்தில் ஒரு கோல்டு பேலஸ் நகைக்கடைக்கான விளம்பரப் படமெடுக்க, இரும்புப் பெட்டி ஒன்று



• ஐஸ்வர்யாராய்

சென்னையிலிருந்து, திருச்சிக்கு பயங்கர பந்தோபஸ்துடன் சென்றது. அதில் அடக்கமாய் இருந்தது அறுபது கிலோ நகை! அழகாய் அணிந்து நடித்தவர் நவ்யா நாயர்!

எஸ்.அருணா,

வால்பாறை.

சென்னையில் உங்



களுக்கு மிகவும் பிடித்த இடம் எது?

என்னுடைய வீடுதான்! அதுதான் நேர்மையான பதிலும் கூட!

அதைத் தவிர ஒரு இடத்தை நான் சொல்ல வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்த்தால், என்னுடைய விருப்பம் மெரீனா கடற்கரை!

கண்கள் வழிய வழிய நிரப்பிக் கொண்டாலும், சலிக்கவே சலிக்காதது அந்த வங்கக் கடலின் தோற்றம்! கரிப்பு அதன் சிறப்பு; ஓசை அதன் பாஷை; அலைகள் அதன் அழகு; ஆழம் அதன் ரகசியம்!

நாம் பார்க்கும்போது ஒரு பெரிய ஆரஞ்சு நிறப் பந்தும் அதன் மேல் ஜ்வலிப்பாகத் தெரிந்தால்... அது நம் அதிர்ஷ்டம்!

கி. பாரதி, சென்னை - 38.

சாதனைப் பெண் என்று நீங்கள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் அது யாராக இருக்கும்?

ரொம்ப கஷ்டமான கேள்வி! சினிமாவிலா, மருத்துவத்திலா, விளையாட்டிலா... இறந்தவர்களா... இருக்கிறவங்களா... என எதுவுமே தெரிவிக்காமல், ஒரே ஒருவரைத் தேர்ந்தெடுக்கச் சொல்வது நியாயமில்லை!

இருந்தாலும், இந்தக் கேள்வியைப் படித்ததுமே என் மனத்திரையில் ஒளிர்ந்த சில பெண்களைச் சொல்கிறேன்.

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி (பாரத ரத்னா), மேதா பட்கர் (போராளி) அருணா ராய் (மனிதநேயர்), சுதாமூர்த்தி (நற்பணிகள்), இலாபட் (உதவும் கரம்) டாக்டர் சாந்தா (மருத்துவ சேவை), பச்சேந்திரி பால் (எவரெஸ்ட் பெண்), கிரண்பேடி (முதல் ஐ.பி.எஸ்.), பி.டி. உஷா (தங்க மங்கை), கர்ணம்



புளிக்கரைசலை, களைந்த அவலில் விட்டு சிறிது நேரம் வைக்கவும். பின்னர் எண்ணெய், கடுகு, உ. பருப்பு, ப. மிளகாய், வற்றல் மிளகாய் தாளித்து அவலைக் கொட்டிக் கிளற, புளி அவல் தயார்!

- ஆனந்தவல்லி,
சாலிகிராமம்.

மல்லேஸ்வரி (ஒலிம்பிக் ஒளி), ருக்மணி அருண்டேல் (கலா க்ஷேத்ரா), குந்தளா ஜெயராமன் (விஞ்ஞானி), ஐஸ்வர்யாராய் (உலக அழகி) என அழகிய முகங்கள் நிறையவே தோன்றினாலும், கடைசியாகத் தோன்றுவது யார் தெரியுமா?

நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் மூலம் விண்வெளியில் பறக்கவிருக்கும் இந்திய மங்கை சுனிதா தான்! டிசம்பரில் பறக்கவிருக்கும் அவரை இப்போதே அட்வான்ஸாக வாழ்த்தி விடுவோம்! (இதுக்கும் மேலே ஒரு உண்மையைச் சொல்லணும்னா, உலகில் உள்ள ஒவ்வொரு பெண்ணுமே சாதனையாளர்தான்! ஏன் நீங்களும் கூடத்தான் பாரதி!)

எச். அஜீரா, கீழக்கரை.

கோடை விடுமுறைக்கு எங்கு சென்றீர்கள்?

போன வாரம் மதுரைப் பக்கமா போயிருந்தேனுங்களா? அங்கிட்டு, நம்ம வாசகிகளை எல்லாம் பார்த்து நாலு வார்த்தை பேசினனா... மண்டைக் காயுற வெயிலையும் மனசு ரொம்ப குளுர்ந்துருச்சு; அவுக காட்டுன பிரியமிருக்கே... ஆத்தாடி!

பார்க்கறவுக எல்லாம், "நாங்க எழுதி அனுப்புனா, பத்திரிகையில போடுவீயளா?"னு சொல்லி வெச்ச மாதிரி கேட்டாக!

"யம்மா... நம்ம மங்கையர் மலருக்குன்னு தனியா நிருபர்கன்னு யாரும் கிடையாது. ஆண்டிப்பட்டியானாலும் அமெரிக்காவே ஆனாலும், உங்கள மாதிரி வாசகிகள்தான் எங்களுக்கு ரிப்போர்ட்டருங்க. உங்க ஊருல சாதனை செஞ்ச பொண்ணுங்கன்னு நீங்க யாரையாவது நினைச்சீங்கன்னா, இல்ல, நம்ப வாசகிகளோட பகிர்ந்துக்குற நல்ல சங்கதின்னு தோணுச்சுன்னா, உடனே எழுதிப் போடுங்க! அடடுத கட்டுரைன்னு எந்த ஒரு ஜோரான விஷயத்தையும் எழுதலாம்ல! இல்லையா ஆபீஸுக்கு ஒரு ஃபோன் போட்டுத் தெரிவியுங்க! நாங்க அங்கனயே வந்து விஷயத்தைத் திரட்டிருவோம். மறந்துராதிக தாயி"னு கேட்டுக்கிட்டோம்!

இந்தச் சேதி, மருதக்காரங்களுக்கு மட்டுமில்ல; எல்லா ஊரு வாசகிகளுக்கும் பொதுதேன்.' பூந்து கலக்குங்க அம்மணியளா! அப்பால, மீட் ஆயிக்குவோம்!

பசுமையான கறிவேப்பிலையை பால் விட்டு அரைத்து, பேக் போட்டு, ஒரு மணி நேரம் கழித்து, தலையைக் கழுவி வர, முடி நன்றாக செழித்து வளரும். மழை நீரை சேகரித்து, அதில் தலையை அலசினால் கூந்தல் தனி மினுமினுப்பு பெறும்.

- ஆர். லலிதா நாகராஜன், வந்தவாசி

ஆஹா 50!



என்ன படிக்கலாம்?

பத்தாம் வகுப்பிலும் பிளஸ் டூவிலும் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்த மாண வர்களுக்கு மட்டும்தான் 'ஸ்டேட் ரேங்க்' வழங்கப்படுகிறது. இது மிகவும் பாரபட்சமான முறையாகப்படுகிறது. வெளிநாட்டு மொழியான ஆங்கிலத்தையே முதற்பாடமாக படிக்கும் பொழுது இரண்டாம் மொழி எதுவாக இருந் தால் என்ன? பிற மொழிகளைக் கற்பது பெரிய குற்றமா?

எம். முத்துலக்ஷ்மி, கோயமுத்தூர்.

ஃப்ரென்ச், சமஸ்கிருதம் போன்ற மொழிப் பாடங்களில் தேர்வுக் கேள்விகளும், திருத்தும் முறையும், தமிழ்ப் பாடத் தேர்வில் உள்ளது போல அவ்வளவு கடினமாகவோ, திருத்தமான தாகவோ இல்லை என்று ஒரு கருத்து நிலவு வதும் இந்நிலைக்கு ஒரு காரணமாக இருக்க லாம்.

ஆனாலும், இரண்டாம் பாடமாக, வேறு மொழிகள் எடுத்த எல்லோருக்கும் சேர்த்தாவது மாநில முதன்மை பரிசுகளும் அங்கீகாரங்களும் வழங்கினால், அம் மாணவர்களுக்கு மட்டு மின்றி, அரசுக்கும் பெருமையாக இருக்கும். கண்டிப்பாக தருணம் கிடைக்கையில், மாணவர் சார்பாக இக் கருத்தை அரசிடம் வைக்கிறோம்.

எதிர்கால கல்வித்துறை எப்படி இருக்கும்? ப்ளீஸ், கற்பனை செய்யுங்களேன்...

எஸ். அமுதா, சென்னை - 102.

எதிர்காலத்தில், பள்ளிகளோ, கல்லூரிகளோ, ஏன், தொலை தூரக் கல்வி நிலையங்களோ, திறந்த நிலைப் பல்கலைக் கழகங்களோ எதுவுமே இல்லாமல் போகலாம். கணிப்பொறியின் மிக வளர்ந்த நிலையில் எல்லா அறிவும் மிகக் குறு கிய காலத்தில் எல்லோ ருக்கும் பொறிநுட்டி னால் (அல்லது தட்டாம லேயே கூட) கிடைத்து விடலாம். கல்விக்கு மனித ஆசான்கள் இருக்க மாட்டார்கள்: தேவையும் இருக்காது.



மருத்துவம், பொறியி யல் படிப்புகளுக்கு நுழை வுத் தேர்வு என்பது, என் போன்ற கிராமப்புற மாண வர்களுக்கு பெரும் தடைக் கல்லாகவே இருந்து வரு கிறது. அதனை எளிமை யாக்க முடியாதா? மாறி மாறி வரும் மாநில அரசு களும் நுழைவுத் தேர்வை தங்கள் இஷ்டத்துக்கு பந்தாடுகின்றனவே.

ப. செங்குட்டுவன், வேலாயுதம்பாளையம்.

நண்பரே! தொழிற் கூடங்களில் சேருவதற்கு நுழைவுத் தேர்வின் பங்கு என்ன என்பதைச் சற்று அமைதியாக யோசித்துப் பாருங்கள். பரிசுப் பொருள்கள் குறைவாக இருக்கும்பொழுது போட்டியாளர்களில் யார் யாருக்குப் பரிசைத் தரு வது என்பதை முடிவு செய்ய எது சிறந்த வழி?



கீதா பிரபு பதில்கள்

அல்லது, பல வகையான பரிசுப் பொருள்களைப் போட்டியாளர்களிடையே எப்படி நியாயமான முறையில் பிரித்துக் கொடுப்பது? போட்டியாளர்களின் தகுதிக்கேற்பத்தானே இவற்றைச் செய்ய வேண்டும்? அந்தத் தகுதி அறிவைத்தான் **TNPCEE** போன்ற நுழைவுத் தேர்வுகள் செய்து வருகின்றன.

கிராமப்புற மாணவர்களுக்கு வசதிக்குறைவால் வாய்ப்புகள் குறைவு என்பது உண்மைதான். அதற்கான ஓர் ஆக்கபூர்வமான பரிகாரம், அந்த வசதிகளை இல்லாதவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதுதானே தவிர, அவ் வசதிகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து அதைப் பறிப்பது அல்ல. உலகம் தமிழ்நாட்டுக்கும் வெளியே இருக்கிறது. சம வாய்ப்பு என்ற பெயரில் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவது சரியா? நாட்டு அளவிலும், உலக அளவிலும், ஐ.ஏ.எஸ்.ஸிலும், ஐ.ஐ.டி.யிலும் நம்மவர்கள் இடம்பெற வேண்டாமா, அதிலும் கிராமப்புற மாணவர்கள்?

நான் ஈரோடு நகரைச் சேர்ந்த, மங்கையர் மலரின் நீண்ட நாள் வாசகி. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த எங்களுக்கு பிள்ளைகளின் மேற்படிப்பு குறித்த அனுபவ ஞானம் குறைவு. நீண்ட நாளாக யாரைக் கேட்பது என்று குழம்பியிருந்த நான், இம்மாத மங்கையர் மலரைப் படித்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மங்கையர் மலரின் பணி சிறக்க எங்கள் வாழ்த்து!

என் மகன் 12-ம் வகுப்பு படிக்கிறான். வசதியில் நாங்கள் பின்தங்கியிருந்தாலும், படிக்கும் ஆர்வம் அவனுக்கு மிக அதிகம். அவனுடைய எதிர்கால நல்வாழ்க்கைக்காக சில கேள்விகள்.

1. ஐ.ஐ.டி.யில் சேர எப்படி விண்ணப்பிப்பது, அடிப்படை தகுதிகள் என்ன? என்னென்ன நுழைவுத் தேர்வுகள் எழுத வேண்டும்? எப்படி நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. ஏ.ஐ.இ.இ.இ.க்கு எப்படி விண்ணப்பிப்பது? எப்படி நம்மைத் தயார் படுத்திக் கொள்வது?

3. தமிழ்நாடு நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற கையாள வேண்டிய வழி முறைகள் என்ன?

4. இன்ஜினியரிங் படிப்பில் நல்ல கல்லூரியை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?

எம். மீனா, ஈரோடு.

கல்வியிலும், தேர்வு முடிவுகளிலும் முன்னேறி

யுள்ள மாவட்டம் ஒன்றிலிருந்து வரும் உங்களுக்குத் தேர்வுகள் பற்றிய தகவல் பெறுவது எளிதாகத்தான் இருக்க வேண்டும். ஐ.ஐ.டி. - ஜே.ஈ.ஈ. தேர்வுக்கு நவம்பர் - டிசம்பர் மாதங்களில் விண்ணப்பம் அனுப்ப வேண்டியிருக்கும். தேர்வு அடுத்த ஏப்ரலில் இருக்கலாம். (இந்த ஆண்டு 9.4.2006 இல் தேர்வு நடந்தது) 5000 இடங்களுக்கு 3 லட்சம் பேர் தேர்வு எழுதுவார்கள். தகவலுக்கு வலைத்தளம் : **jee.iitm.ac.in** தொலைபேசி : 2257 8223 (சென்னை). இதற்கான பாடத் திட்டம் உண்டு. ஆனால் விரிவாக இருக்காது. அதிக காலத் தயாரிப்பு அதிக பலன் தரும். 9-ம் வகுப்பிலிருந்தே அதற்கான பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து தயார்படுத்திக் கொள்பவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கென்றே 'எய்ம்ஸ்' கல்வி நிறுவனம் பயிற்சி அளித்து வருகிறது. பொறியியலுக்கு மற்றொரு நாடு தழுவிய தேர்வு **AIEEE**. பதினெட்டு **NITS** மற்றும் பல பெரிய சிறிய பல்கலைக்கழகங்கள், கல்லூரி களில் பொறியியல், ஆர்கிடெக்சர் ஆகியவற்றுக்கு இதன் மூலம் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இந்த முறை 30.4.2006ல் இத் தேர்வு நடந்தது. பிறகு கவுன்சலிங் மூலம் இடம் ஒதுக்கப்படும். இதற்கு ஓராண்டு முதல் இரண்டாண்டு வரை பயிற்சி எடுத்துக் கொள்ளலாம். **AIMS Education** இதற்கும் முறையான பயிற்சி அளிக்கிறது. தமிழ்நாடு அளவில் பொறியியலுக்கு மட்டுமின்றி, மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவத்துக்கும் சேர்த்து நடத்தப்படுவது **TNPCEE.** 2007ல் அது இருக்குமா என்பதைப் பொறுத்துப் பார்க்க வேண்டும்.

நல்ல பொறியியற் கல்லூரியைத் தேர்ந்தெடுக்க பின்வரும் வினாக்கள் உதவும். அடிப்படைக் கட்டட, வகுப்பறை, கழிவறை, நூல் நிலைய வசதிகள் உண்டா? விடுதி வசதி எப்படி? நிர்வாகம் நம்பகமானதா, இதுவரை வாக்கைக் காப்பாற்றி உள்ளதா, வெறும் லாபநோக்கில் இயங்குகிறதா? மாணவர்களின் தேர்ச்சி விகிதம் என்ன? படித்து வெளியேறுவோருக்கு வேலை வாய்ப்பு எப்படி உள்ளது, நிர்வாகம் இதற்காகப் பாடு படுகிறதா? தொழிற்சாலைகளுக்கும் கல்லூரிக்கும் உறவு சுமுகமாகவுள்ளதா?

பஞ்சாமிர்தம்



எள்ளுப் பாட்டி - ஜெயலட்சுமி, கொள்ளுப் பாட்டி - கௌரி, பாட்டி - பார்வதி, பெண் - மகாலட்சுமி, பேரன் - அபிநவ், சென்னை-24.

ஆசிரியர் - மாணவர் எண்ணிக்கை விகிதம் நன்றாக உள்ளதா? - முதலியன.

எனது மகள் பி.எஸ்ஸி., (ஐ.டி.) முடித்துள்ளாள். மேற்கொண்டு பி.ஜி. படிக்க என்ன செய்யலாம்? எம்.எஸ்ஸி., சைபர் டெக்னாலஜி, எம்.சி.ஏ. பற்றி விவரம் தெரிவிக்கவும்.

- கே. சாந்தா,
செட்டிகுளம்.

எம்.எஸ்ஸி., (ஐ.டி.) அல்லது எம்.எஸ்ஸி., (சாஃப்ட்வேர் என்ஜினியரிங்) படிக்கலாம். நல்ல கல்லூரி யில் 3 ஆண்டு படிப்பான எம்.சி.ஏ., அதைவிடச் சிறந்தது. பி.எஸ்ஸி., (ஐ.டி.) படித்திருப்ப தால் எம்.சி.ஏ.வில் இரண்டாம் ஆண்டுப் படிப்பிலும் சில பல்கலைக் கழகங்களில் அனுமதிப்பார்கள். பொறியியல் கல்லூரி களில் நடத்தப்படும் எம்.சி.ஏக்கு வேலை வாய்ப்பு மேலும் அதிகமாக இருக்கும். வேலை வாய்ப்பும் முன்னேற்ற மும் ஒவ்வொருவருக்கும் அவரது தனிப்பட்ட முயற்சி, ஈடுபாடு, சாஃப்ட் ஸ்கில்ஸ் எனப்படும் திறமைகள், மற்றவருடன் பழகும் முறை, தலைமைக் குணம், டீம் ஸ்பிரிட் போன்ற பலவற்றைப் பொருத்து இருக்கும்.



'யூனிவர்செல்'
நிர்வாக இயக்குநர்
டி.சதீஷ்பாபு
பதிலளிக்கிறார்

செல்ஃபோன் பற்றிய
உங்கள் சந்தேகங்களை
எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி:
15.7.2006

• படம் : ஸ்ரீஹரி

வேப்பம் பூவை நெய்யில் வறுத்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொண்டு ருசிக்கேற்ப உப்பு, எலுமிச்சைசாறு சேர்த்து, மோர் சாதத்துடன் சாப்பிடுவது உடம்புக்கு மிகவும் நல்லது.

- சுபா சந்துரு, நியூடெல்லி.



கூந்தல் பராமரிப்பு

கூந்தலில் வித்தை

• எம். ஹசீனா சையத்

"கூந்தலுக்கு அழகழகான வர்ணம் தீட்டும் மோகம், டீன்-ஏஜ் பெண்களிடமிருந்து, வயதானவர்கள் வரை அனைவரிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது" என்கிறார், சென்னை, திருமலைப் பிள்ளை சாலையில் உள்ள ஆம்பியன்ஸ் இன்டர்நேஷனல் அகாடமியின், அழகுக் கலை நிபுணர் எம். ஹசீனா சையத்.

இளநரை, மற்றும் நரை அதிகமாக உள்ளவர்கள், மிகவும் கவலைக்குள்ளாகிறார்கள். அவர்கள் தங்கள் நரைமுடியைச் சோதித்துப் பார்த்து முதலில் இந்த நரைமுடி ஏன் ஏற்படுகிறது என்று தெரிந்து, அதற்குத் தக்கவாறு, சிகிச்சை எடுக்க வேண்டும்.

உடலில் வைட்டமின் பற்றாக்குறை ஏற்படும் போதும், இரும்புச்சத்து குறையும்போதும் இளநரை ஏற்படுகிறது. இளநரையோ, நரையோ ஏற்பட்டு விட்ட பிறகு, அதை மறைத்து, நமது கூந்தல் அழகை மேம்படுத்திக் கொள்ள ஹேர் கலரிங் உதவும். நரை மற்றும் இள நரையோ இல்லாத பெண்களுக்கு நாகரிகமான தோற்றம் தரவும் ஹேர்கலரிங் உதவும்.

பெண்களின் தோற்றத்தை எடுப்பாகக் காட்டுகின்ற இந்த வண்ணச் சாயங்களால் உடலுக்கோ, முடிக்கோ எந்தவித ஆபத்தும் இல்லை. அதனால்தான் தற்போது உலகெங்கும் கூந்தலுக்கு கலர் சாயம் பூசிக் கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது.

இந்த நிறமானது மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை நீடித்திருக்கும். பத்துக்கும் மேற்பட்ட நிறங்களில் உள்ள இந்த மைகளில், முடியைச் செழிப்பாக வைத்துக் கொள்ள உதவும் வைட்டமின், தாதுப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதால் முடி உதிர்வது பெரிதும் தடுக்கப்படுகிறது.

நம் நாட்டுப் பெண்கள், கூந்தல் பிரகாசமாய் மின்னுவதையே விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சிவப்பு, வயலட், தாமிரம், பொன்னிறம் ஆகிய நிறங்களைப் பயன்படுத்தலாம். இந்த நிறங்கள் சூரிய ஒளி, மின்சார வெளிச்சம் போன்றவற்றில் கூந்தலின் நிறத்தை பன்மடங்கு பளபளப்பாக்கி, ஜீவனுள்ளதாகக் காட்டும்.

இந்த வண்ணங்களைக் கூந்தலில்



பூசும்போது பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றில் பிரபலமானதும் தரமானதுமான 'வெல்லா'வே இன்று சர்வதேச அளவில் பயன் படுத்தப்படுகிறது.

இதைக் கூந்தலில் பூச, நிறைய டெக்னிக்குகள் உண்டு. அவற்றில் சில ஸ்லைசிங் டெக்னிக், வீவிங் டெக்னிக், ஸ்ட்ரீக்கிங் டெக்னிக், குளோபல் டெக்னிக் போன்றவை.

ஸ்லைசிங் டெக்னிக் முறையில் முடியானது அங்குலம் அங்குலமாகப் பிரித்து தேவையான இடத்தில் கலர் செய்யப்படும். தன்னை இளமையாக வெளிப்படுத்திக் கொள்ள நினைக்கும் பெண்கள் இந்த டெக்னிக்கை பயன்படுத்தலாம்.

குளோபல் டெக்னிக் முறை என்பது ஒட்டு மொத்த தலைமுடியையே மாற்றிக் கொள்ளும் முறை. இதை நரைமுடி உள்ளவர்கள், கருமை நிறத்திற்கு மாற்ற உபயோகிக்கலாம். தலைமுடிக்கு வண்ணச் சாயம் பூசும் முறை அறிமுகமான பிறகு நரைமுடி முடிக்காரர்கள் பலர் இதையே பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இனிமேல், டை பூசுவதற்குப் பதில் ஹேர் கலரிங் செய்து கொள்வதே புத்திசாலித்தனம்.

வண்ணச் சாயம் பூசுவதால் வசீகர அழகு கிடைப்பதுடன் இளமையானத் தோற்றம் கிடைக்கிறது. அழகுணர்ச்சி மேம்படுவதோடு, தன்னம்பிக்கையும் கூடி விடுகிறது'' என்கிறார் அழகுக் கலை நிபுணர் ஹசினா சையத்.


- ஜெயந்தி




டை பூசுவதற்குப் பதில் ஹேர் கலரிங் செய்து கொள்வதே புத்திசாலித்தனம்

படம் : ட்ரீம் காஸ்ட், எஸ். கார்த்திக்.

நிறங்களா?



உங்க
நிச்சயதார்த்த பட்டு
எந்த கலர்?
இந்த கலரா?
காஷ்மீரி கேசர்
பட்டுப் புடவை
உலகின் முதல் 50,000 கலர்களை பட்டில் அறிமுகப்படுத்திய ஆரெம்கேவியின் கைதேர்ந்த நெசவாளர்களால் வடிவமைக்கப்பட்டு, நுட்பமாய் நெய்யப்பட்டு மேலும் கைவேலை செய்யப்பட்டு மெருகூட்டப்பட்ட இந்த நிச்சயதார்த்த பட்டு ஒவ்வொன்றும் ஒரு கலைப் பெட்டகம்.
இதுவரை பார்த்திராத அபூர்வ கலர் பட்டில் ஜொலித்திட -ஆரெம்கேவியின் இந்த கலர் ப்ராமிஸ்.
RmKV
Indha colour Promise
எல்லா கலர் பட்டும் ஆரெம்கேவியில் மட்டு
பனகல் பார்க், சென்னை. Ph: 044-281 44415
mudra 7415



உங்க
ஞ்சல் பட்டு
எந்த கலர்?
ந்த கலரா?
குரனோவியம்
நீம் பட்டுப் புடவை
உலகின் முதல் 50,000 கலர்களை பட்டில் அறிமுகப்படுத்திய ஆரெம்கேவியின் கைதேர்ந்த நெசவாளர்களால் வடிவமைக்கப்பட்டு நுட்பமாய் நெய்யப்பட்ட இந்த ஞ்சல் பட்டு ஒவ்வொன்றும் ஒரு கலைப் பெட்டகம்.
இதுவரை பார்த்திராத அபூர்வ கலர் பட்டில் ஜொலித்திட - ஆரெம்கேவியின் இந்த கலர் பிராமிஸ்.
RMKV
Indha colour Promise
எல்லா கலர் பட்டும் ஆரெம்கேவியில் மட்டுமே
ருநெல்வேலி. Ph: 0462-2333105
www.rmkv.com

அம்மா - பாப்பா - அன்பு

'ஃப்ளாஷ்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையில் சுவாமி சைதன்ய கீர்த்தி கூறிய கருத்துகள் சிறப்பாக இருந்ததனால், நம் மங்கையர் மலர் வாசகிகளும் பயன்பெற வேண்டுமென இதை அனுப்பியுள்ளேன்.

வாங்க

உலகத்திலேயே மிகப் பெரிய பொறுப்பு எது தெரியுமா? தாயாக இருப்பதுதான்! நிறையப் பெண்களுக்கு நல்ல தாயாகத் திகழ விருப்பம் இருக்கும். ஆனால் எப்படித் தாயாக இருப்பது என்பது தெரிவதில்லை.

தாய் - குழந்தை உறவு சரியாக அமையாதபோது குழந்தையின் வாழ்க்கையே சிதைந்து விடுகிறது.

தாய்மையை ஒரு தாய் உணரும் அளவுக்கு ஆண்கள் உணர்வதில்லை. தாய்மை ஓர் அழகான கலை! அதை ஒவ்வொரு தாயும் கற்க வேண்டும்.

குழந்தையுடன் உங்கள் உறவை அழகான தாக்க நினைத்தால், குழந்தையை எப்போதும் உங்களுடையது எனக் கருதாதீர்கள். குழந்தையை உரிமை கொண்டாடாதீர்கள். உங்கள் வழியாக இவ்வுலகுக்கு வந்தது அவ்வளவே! கடவுள் உங்கள் வழியாக அனுப்பியிருக்கிறார். எப்போது தாய், குழந்தையைத் தன்னுடையது எனக் கருதுகிறாரோ அப்போது அக் குழந்தையின் வாழ்க்கை அழுத்தப்படுகிறது.





வி.ஐ.பி!

குழந்தையுடைய தனித் தன்மையைக் குறைத்து அதை ஒரு கைப்பொருளாக ஆக்கிவிடுகிறீர்கள். வண்டி, வீடு இவற்றைத்தான் உரிமை கொண்டாட முடியும். குழந்தைகளை அல்ல. குழந்தை வரு முன்னே தனிமனிதனாக, அதனுடைய குணாதிசயங் களோடு வாழவைக்க முயலுங்கள்; உங்களுடைய குழந்தையாக மட்டுமல்ல.

குழந்தைகள் மிகவும் மென்மையானவர்கள், உதவியற்றவர்கள். குழந்தைகளை மதிப்பது கடினமானது. அவர்களை நிராகரிப்பது எளிமையானது. குழந்தைகளை, பெரியவர்கள் போல அக்கறையுடனும், அன்புடனும், மரியாதையோடும் நடத்தப் பழகுங்கள். பின்னாளில், அவர்கள் பண்பட்ட மனிதர்களாக இருப்பார்கள்.

சுதந்திரம் அளியுங்கள். இந்த உலகத்தைக் கற்பதற்கு சுதந்திரம் கட்டாயம் தேவை. குழந்தைக்கு எப்போதும் கட்டளையிடாதீர்கள். குழந்தைக்கு ஊக்கமளியுங்கள், பாதுகாப்பளியுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அன்பை, நிறைய அன்பை என்றென்றும் அளியுங்கள். உங்களை விட்டு வெகு தூரம் சென்று உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள அதன் வழியிலே விட்டு விடுவது நல்லது. நீங்கள் குழந்தையைச் சுதந்திரமாக விட்டால், குழந்தை உங்களைத் தேடி ஓடி வரும்.

இன்னும் ஒன்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். சுதந்திரம் கொடுக்கும்போது சரியானவற்றோடு தவறும் இருக்கும். எனவே, குழந்தையை விழிப்போடும், புத்திக் கூர்மையோடும் இருக்கப் பழக்குங்கள். உங்கள் கருத்துகளை ஒருபோதும் குழந்தையிடம் திணிக்காதீர்கள். யாரும் அதை விரும்புவதில்லை உங்கள் குழந்தை உள்பட!

எப்போதும் இயற்கையை உணருங்கள். எதெல்லாம் இயற்கையோ அதெல்லாமும் நல்லது. நீங்கள் வளர்க்கப்பட்டவிதம் மாறுபட்டிருப்பதனால் இதெல்லாம் தேவையற்றதாக நீங்கள் நினைக்கக்கூடும்.

தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்யாதிருப்போம். குழந்தைகளிடத்து இயற்கை அதன் பாடத்தை நடத்தட்டும். நீங்கள் தலையிடாதீர்கள். நீங்கள் குழந்தையின் உதவிக்கு மட்டுமே!

குழந்தை பிறப்புக்கு முன் தியானம் செய்யப் பழகுங்கள். குழந்தை, கருவில் இருக்கும்போது தாய் செய்யும் அனைத்தும் அதிர்வலைகளாக குழந்தைக்குச் செல்கின்றன. ஒரு தாய், கோபமாக இருக்கும்

போது, வயிற்றில் கோபத்தின் தாக்கம் இருக்கும். குழந்தையும் அதை உடனே உணரும். ஒரு தாய் சோகமாக இருக்கும் போது வயிற்றின் சுற்றுப்புறத்தில் சோகம் இழைந்தோடும். உடனே குழந்தை சோகமாக, சோர்வாக, மனவருத்தத்தோடு இருக்கும்.

குழந்தை முழுமையாக உங்களைச் சார்ந்திருக்கிறது. உங்களுடைய மனநிலையைப் பொறுத்தே குழந்தையின் மனநிலையும் இருக்கும். ஆகையால் இனி சண்டைக்கும், கோபத்துக்கும் இடம்கொடுக்காதீர்கள்.

யாரேனும் உங்களை அவமானப் படுத்தினால் கூட, கோபமாகாதீர்கள்! 'நான் கருவுற்று இருக்கிறேன். எனவே குழந்தைக்குத்தான் முன்னுரிமை; கோபத்திற்கல்ல. இந்தக் கோபம், நாளடைவில் தீரக்கூடும். ஆனால் நான் இப்போது கோபப்படுவதனால் ஏற்படும் அதிர்வலைகள் அதன் வாழ்நாள் முழுவதும் குழந்தையைப் பாதிக்கும்'' என்று சொல்லிக்கொண்டு, புன்னகை பூத்து நில்லுங்கள்.

உலகத்தில் ஏகப்பட்ட இன்னல்கள். ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும்போது அதை உணர்ந்து, குழந்தையால் இந்த உலகுக்கு இன்னும் கொஞ்சம் சந்தோஷம், அன்பு, வாழ்வு எல்லாம் வரும்படியாக நல்லதொரு மகவைப் பெற்று எடுப்போமாக!

எனவே, கருவுற்ற காலங்களைக் கொண்டாடுங்கள், ஆடுங்கள், பாடுங்கள், இசையைக் கேளுங்கள். மிகவும் மென்மையாக இருங்கள். எதையும் பதற்றத்துடன் செய்யாதீர்கள். வேகத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு முக்கிய விருந்தினர் வர இருக்கிறார் - அவரை வரவேற்கத் தயாராகுங்கள்!

- வெ. வள்ளியம்மை, புதுடில்லி.

படம் : ஸ்ரீஹரி

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : கோகுலாஷ்டமி வெல்ல ஸ்வீட்ஸ்

கடைசி தேதி : **20.7.2006**

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


TVS
NEW
Playful
+
Powerful
Swift + Striking
Glide + Find
No more fumbling in the dark.
Find things easily in the lit
storage space.
Cool riding + Cool parking
Keep riding + Keep charging
Charge your cell on the move.
Just plug in your mobile charger into the
easy Mobile Charging Socket.
Zip + See
Scooty Pep+
மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள டிவிஎஸ் டீலரை அணுகவும்

சமையல்

மாவிளக்கு

ஆடி வெள்ளியன்று அம்மனுக்கு மாவிளக்கு ஏற்றுவது ரொம்ப விசேஷம்.

தேவையான பொருள்கள் :

பச்சரிசி - 400 கிராம்,
பால் - ½ கரண்டி,
வெல்லம் - 300 கிராம்.

செய்முறை :

அரிசியை அரைக் கரண்டி பால் ஊற்றி, பிசறி வைக்கவும். அதிகமாக விட்டால் அரைக்க முடியாது. அரை மணி நேரம் கழித்து மிக்ஸியில் நைஸாக அரைக்கவும். வெல்லத்தைத் துருவியில் துருவவும். அரைத்த மாவையும், துருவிய வெல்லத்தையும் சேர்த்து பிசறிக் கொள்ளவும். இக் கலவையை சிறிது சிறிதாக மிக்ஸியில் போட்டு அடித்து எடுக்கவும். (சிறிது கூட நீர் விடக் கூடாது) மாவுடன் வெல்லம் சேர்த்து



ஆடி







மாத ஸ்பெஷல்!

இளகி பக்கு வத்துக்கு வந்து விடும். பிறகு சிறிது சிறிதாக எடுத்து வைத்துள்ள மாவு களை ஒன்றுசேர்த்து அழுத்தி அடித்துப் பிசைந்து உருட்டவும்.

மாவிளக்கைப் படைக்கும் போது தட்டில் வைத்து உருட்டிய மாவிளக்கின் மேல் கட்டை விரலால் அழுத்தி குழியாக்கி பஞ்சுத் திரியைப் போட்டு நெய் விட்டு விளக்கேற்ற வேண்டும்.

இதனை அம்மன் சன்னதியிலும் படைக்கலாம். வீட்டிலும் சுவாமி படத்தின் முன்பு வைத்தும் படைக்கலாம்.

துள்ளுமா

இதுவும் மாவிளக்குப் போன்றதுதான். ஆனால் உருட்டி விளக்காக ஏற்றக் கூடாது. மாவையும், வெல்லத்தையும் (சிறிது கொரகொரப்பாக அரிசியை அரைக்க வேண்டும்). கலந்து கைகளால் பிடித்து வைத்தால் துள்ளி எழும்பும். அதனால் துள்ளுமா! இதனை காளியம்மன், மாரியம்மன் போன்ற உக்கிரமான பெண் தெய்வங்களுக்குப் படைத்து கோயிலில் பிரசாதமாக வழங்கலாம். படைக்கும் போது மாவாகவே படைக்க வேண்டும்.

ஆடிக்கூழ்

தேவையான பொருள்கள் :

அரிசி நொய் - 1 கைப்பிடி,
கேழ்வரகு மாவு - 1 கைப்பிடி,
வெங்காயம் சிறியது - 10,
தயிர் - 1 கப், உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

முதல் நாளே தயார் செய்ய வேண்டியது.

1 கைப்பிடி நொய்யை 1 தம்ளர் நீர் விட்டு வேகவைத்து அதிலேயே கேழ் வரகை 1 தம்ளர் நீர் விட்டுக் கரைத்து வேகவைக்க வேண்டும். மறுநாள் காலை ஒரு தம்ளர் நீர் விட்டு தயிரை மோராகக் கடைந்து உப்பு சேர்த்து வெங்காயம் சிறியதாக நறுக்கிப் போட்டு அம்மனுக்குப் படைக்கவும்.

சுற்றத்தவர்களுக்குக் கூழுடன் முருங்கைக் கீரைப் பொரியல் சேர்த்துக் கொடுக்கவும்.

சுருள் அரிசி

பச்சரிசி - ¼ கிலோ,
வெல்லம் - 150 கிராம்,
தேங்காய் - 1,
ஏலப்பொடி - சிறிதளவு,
பொட்டுக்கடலை - 1 கரண்டி.

செய்முறை :

அரிசியைக் கழுவி நீரை வடித்து துணியில் நிழலில் உலர்த்தவும். பிறகு வெறும் வாணலியில் மிதமாக வறுக்கவும். மிக்ஸியில் ரவை பதத்துக்கு உடைக்கவும். வெல்லத்தை நீர் சேர்த்து ஒரு கொதி வந்ததும் இறக்கி வடிகட்டி பாகு காய்ச்சவும். பாகு கொதிக்கும் போது தேங்காயைத் துருவி அதில் போட்டு பொட்டுக்கடலைப் போட்டு ஒரு கம்பிப் பாகு பதம் வந்ததும் இறக்கி வைத்து விடவும். ஏலப்பொடி சேர்க்கவும். ஆறியதும் பொடித்த அரிசி ரவையை அதில் போட்டுக் கிளறவும். உதிர் உதிராக ஆனதும் எடுத்து வைக்கவும். இதனை ஆடிப்பெருக்கு அன்று செய்து படைப்பர். பிறந்த குழந்தையைத் தொட்டிலில் போடும் அன்றும் செய்வர்.





ஆடிப் பண்டிகை (ஆடிப்பால்)

ஆடி மாதப் பிறப்பன்று அவசியம் செய்வார்கள். புதிதாகத் திருமணம் ஆன மணமகனை ஆடிக்கு அழைத்துக் கொடுப்பது வழக்கம்.

தேவையான பொருள்கள் :
முற்றிய தேங்காய் - 1,
சர்க்கரை - 250 கிராம்,
வறுத்த பயத்தம் பருப்பு - 1 ஸ்பூன்,
ஏலப்பொடி - 1 சிட்டிகை,
பால் காய்ச்சியது - 1 தம்ளர்,
முந்திரி பருப்பு - தேவையானது,
நெய் - 2 ஸ்பூன்.

செய்முறை :
தேங்காயைத் துருவி வறுத்த பயத்தம் பருப்புடன் சேர்த்து மிக்ஸியில் போட்டுத் தண்ணீர் விட்டு அரைக்கவும். அரைத்த தேங்காயைப் பிழிந்து பால் எடுத்துக் கொள்ளவும். கிட்டத்தட்ட 1 லிட்டர் தேங்காய்ப் பால் இருக்கும். சர்க்கரையைத் தேங்காய்ப் பாலில் போட்டு நன்றாகக் கிளறி கரைந்ததும் அடுப்பில் வைத்து ஒரு கொதி வந்ததும் இறக்கி விடவும். பிறகு ஏலப்பொடி சேர்க்கவும். முந்திரியை நெய்யில் வறுத்துப் போடவும். காய்ச்சிய பாலை அதில் விடவும். இதனை வீட்டில் வைத்துப் படைக்கவும். மாப்பிள்ளை விருந்துக்கும் செய்யலாம்.

பி.கு : தேங்காய்ப் பால் அதிகம் கொதிக்கக் கூடாது. கொதித்தால் திரிந்தாற்போல் ஆகிவிடும்.



- எஸ். நிரஞ்சனி,
போரூர்.

படங்கள் : ஸ்ரீஹரி

வண்டலூர் ஜூவுல
அடைபட்டுட்டிருக்கிற மயில்
பறந்து வந்து சென்னை
ஜி.எஸ்.எஸ். ஜெயின் காலேஜுல
லேண்ட் ஆகி, தோகை விரிய
ஆடினாலும்
ஆச்சர்யப்படறதுக்கில்ல.
அப்படியொரு ஏகாந்தமான
இசைச் சூழல் அந்தக்
காலேஜுல.
ரேய்ச்சல், பூமா, ஸ்ருதி
(அடடா!), காயத்ரி.. இந்த
நாலு வயலின்களும்
இப்போ பேசப் போறாங்க.
ஸ்டார்ட் மியூசிக்...!





இளமைப் பூங்கா

முதல் முதலா உருவாக்கினது எங்கே கண்டு பிடிச்சாங்க?

ரேய்ச்சல்

மியூசிக்ல ரொம்ப ஆர்வம். பாப் ஆல்பம் துறை கணங்கிப் போயிருந் தாலும் இந்த ரேய்ச்சல் வந்து ஒரு மேய்ச்சல் நடத்தறேன்னு சவால் விடறாங்க. இவங்ககிட்டே 'இளைய நிலா பொழிகிறது'னு பாடினாலோ இல்லை 'கபி கபி'ன்னு உருகி னாலோ காதை இறுக்கமா பொத்திப் பாங்க. ரேய்ச்சல் விரும்பிக் கேட்கிறது எப்பவுமே பாறை இசைதான். அதாங்க ராக் மியூஸிக்!

பூமா, தான் பூ மாதிரி இசை கத்துக்கிட்டது எப்படின்னு ஒரு குட்டிக் கதையே சொல்றாங்க:

"அப்போ நான் குட்டிப் பாப்பா. அக்கா பாட்டுக் கத்துக்கறதுக்காக க்ளாஸ் போயிட்டிருந்தப்போ, துணைக்கு நானும் போனேன். சும்மா என்னை உட்கார வைக்கப் பிடிக்காம மியூசிக் மிஸ், "பூமா, எங்கே ச...ரி...க...ம...ப..த..நி...ச பாடு''ன்னு சொன்னதுதான் தாமதம். எனக்குள்ளே தூங்கிக்கிட் டிருந்த சரஸ்வதி சட்டுன்னு விழிச்சுக்கிட்டா. முன் ஜென்மத்தி லிருந்தே பாட்டு என் கூடப் பிறந்திருக்கோ என்னமோ அழகா பாட ஆரம்பிச்சுட் டேன். அவ்வளவுதான். 'வாம்மா மின்னல்'னு இசைக் கடல்ல என்னையும் தள்ளி விட்டுட்டாங்க."

ஸ்ருதியின் டாப் 5 பாடல்கள்

டைட்டானிக்
கிருஷ்ணகானம் (சித்ரா)
ரோஜா
காக்க காக்க
யூத் (சர்க்கரை நிலவே)

காயத்ரி :

மேடமுக்கு இசையோடு பாடல் வரிகளும் காதுக்கு இதம் கொடுக்கணு மாம். "வைரமுத்துவை இதுல அடிச்சுக் கவே முடியாது"ன்னு ஸ்டிராங்கா சபதம் செய்றாங்க.

இந்த இரு பாடல்கள்தான் காயத்ரி யோட தினசரி காயத்ரி மந்திரம் :





ராகியை முதல் நாள் ஊறவைத்து அதனுடன் வெல்லம் போட்டு, தேங்காய்த் துருவல் போட்டு அரைத்து வடித்து அதில் எலுமிச்சை ஜூஸ், ஏலத்தூள் போட்டு, 'ஜில்' என்று பரிமாறலாம். உடலுக்குக் குளுமையைக் கொடுக்கும். வரும் விருந்தினரையும் அசத்தலாம்.

- சரஸ்வதி, பெங்களூர் - 40.

" 'உயிரே' படத்துல வர்ற பூங்காற்றிலே - (காற்றின் அலைவரிசை கேட்கிறதா, கேட்கும் பாட்டில் என் உயிர் விழும் கண்ணே தெரிகிறதா?' அட... அட... ரேடியோ ஸ்டேஷன் வேலை செய்ற ஷாருக்கானுக்காக எவ்ளோ பொருத்தமா வைர வரிகளை போட்டிருக்காரு."

" 'பம்பாய்' - உயிரே உயிரே (உன் சுவாசக் காற்று வரும்பாதை பார்த்து உயிர்தாங்கி நான் இருப்பேன்...' இந்த வரி வரும்போது மட்டும் ஏனோ என் கண் ஓரத்துல கண்ணீர் வந்து எட்டிப் பார்க்கும். 'வரும் எதிர்காலம் உன் மீது பழி போடும் பெண்ணே, அதற்காகத்தான் வாடினேன்'னு பாடும்போது தொண்டைக்குழி விக்கிக்கும்.)"

பஜ்ஜி மாவுடன் ஊறவைத்த ஜவ்வரிசியைக் கலந்து செய்தால், பஜ்ஜி வித்தியாசமான சுவையுடன் இருக்கும்.

- உமா நாராயணசுவாமி, சென்னை.



நான்கு பூங்கொத்துகளும் ஜோரா சொன்ன ஜோக்ஸ் :

- முதன் முதலா உருளைக்கிழங்கை எங்கே கண்டுபிடிச்சாங்க?

மண்ணுலதான்!

- ஒரு மரத்துல பத்துக் குருவிகள் உட்கார்ந்து ஜாலியா 'சேட்' பண்ணிட்டிருந்ததாம். திடீர்னு ஒரு வேட்டைக்காரன் ரெண்டு குருவியைக் குறிவைச்சு சுட்டுட்டானாம். அப்போ மரத்துல கரெக்டா எத்தனை குருவி இருக்கும்?

நத்திங். குண்டு சத்தம் கேட்டவுடனேதான் 'சேட்' பண்ணிட்டிருந்த மத்த குருவிகளெல்லாம் ஆளாளுக்கு 'ஐ யாம் எஸ்கேப்'னு பறந்து போயிடுச்சே!

- பாகிஸ்தான் கிரிக்கெட் டீமுக்கு சிகரெட் லைட்டர் கொடுக்கப்பட்டிருக்காம். ஏன்?

அவங்கதான் எல்லா மேட்ச்சலயும் (தீப்பெட்டி) தோத்துடறாங்களே!

- உலகத்துக்கு அதிர்ச்சி தரக்கூடிய சிட்டி எது?

எலெக்ட்ரி'சிட்டி'

எந்த 'சி' (கடல்)க்கு அலைகள் இருக்கு; ஆனா தண்ணி இல்லை?

பிபிசி!

- ச.ந. கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி



உங்க பருப்புல
இருக்கா
Q-த்ரீ அட்வாண்டேஜ்?
Q3 ADVANTAGE
Shree
JEYYAM®
SAMBAR DHALL
JEYYAM
முளை நீக்கப்படாததால்
அதிக சுவை, மணம் மற்றும்
ஊட்டச்சத்து கொண்டது.
விரைவாக
வேகும் திறன்
கொண்டது.
சாதாரண பருப்பு 3 கிலோ
வாங்குமிடத்தில்,
ஜெய்யம் குண்டு சாம்பார் பருப்பு
2 கிலோவே போதுமானது.
Asian Dhall Industries Ltd. Omalur By-Pass Road, Omalur, Salem - 636 455, Tamil Nadu.
Ph: 04290-222921 / 22, Telefax: 04290-222911, E-mail: asiandhall@vsnl.net, www.asiandhall.com
An ISO 9001 Company
ADIL
CRAYONS



அம்மனுக்கும் பட்டு!

தங்களது 'மே' மாத 'ஒரு வார்த்தை' தலையங்கத்தை வாசித்தவுடனே, சென்ற மாதம் எனக்கு ஏற்பட்ட அனுபவம்தான் நினைவுக்கு வந்தது.

அன்று வியாழக்கிழமை - காலை நேரம். யாரென்று எட்டிப் பார்த்தால் இரண்டு பெண்கள் நின்றிருந்தார்கள்.

"அம்மா! எனக்கு மடிப்பிச்சை தர வேண்டும். சாமிக்கு வேண்டுதல். ரொம்ப காலம் குழந்தையில்லாமலிருந்து இப்போது இருக்கண்குடி மாரியம்மனிடம் மடிப்பிச்சை வேண்டிய பிறகு குழந்தை பிறந்துள்ளது'' என்று ஒரு பெண் கூறினாள்.

மஞ்சள், குங்குமத்துடன் மங்களகரமாக இரண்டு பேர் வந்து மடிப்பிச்சை என்றதும் எனது மனம் கசிந்தது. இருபது ரூபாய் கொடுத்து அனுப்ப முயன்றேன்.

அப்போதுதான் ஆரம்பித்தது தொல்லை. கூட வந்த பெண் மெல்லப் பேச ஆரம்பித்தாள். ''அம்மா! நாங்க இன்று நாற்பது வீடுகளில் மடிப்பிச்சை எடுத்து அம்மாவுக்குப் பொங்கல் வைக்கணும். உங்கள் வீடுதான் 11-ஆவது வீடு. சாமி என்னோட கனவில் வந்து 11-ஆவது வீட்டில் எனக்குப் பட்டு கிடைக்கும் என்று சொன்னாள்'' என்று 'பிட்'டைப் போட்டாள்.

உடனே எனக்கு எல்லாம் தெளிவானது. ''அது சரி!' பட்டென்றால் எவ்வளவு செலவாகும்?' என்று கேள்விக் கொக்கியைப் போட்டேன். சட்டென்று பதில் வந்தது. "2500 அல்லது 3000 ரூபாய் வரை ஆகும். நீங்க தரலைன்னா தெய்வக் குத்தம் ஆயிடும்" என்று பயமுறுத்தத் தொடங்கினாள்.

எனக்கு வந்ததே கோபம். "சும்மா பேசாதீங்க. என் பட்டுதான் அம்மனுக்குத் தேவை என்றால், உங்களிடம் சொன்ன மாதிரி, எனக்கும் கனவில் வந்து சொல்லியிருப்பாளே!" என்று ஒரு போடு போட்டு விரட்டி விட்டேன்.

தனியாக உள்ள, தைரியமில்லாத, தெய்வ நம்பிக்கையில் ஊறியப் பெண்களை இவ்வாறு கடவுளின் பெயரைச் சொல்லி மூளைச்சலவை செய்யும் கூட்டங்கள் நிறைய உள்ளன. சகோதரிகளே உஷார்....

- சபிதா ரத்தினமுத்து, மதுரை.


அருமையான சமையலின்
அஸ்திவாரம்
சௌபாக்யா
ISO 9001:2000
Sakthi
maa
Shree
110 Volts & 60 Hz available for USA & CANADA
AdMark
SOWBAGHYA®
T. Nagar, Chennai -17. Ph: 28343547, 28342908. Fax: 42023926.
Erode: Ph: 0424-2260245. Bangalore: Ph: 080 - 25320627.
www.sowbaghya.com E-mail: grind@sowbaghya.com
DISTRIBUTORs: TRICHY : GLADS HOME APPLIANCES [P] LTD. PH: 2702733, 2702844. TANJORE : PH 2702733,2702844. TIRUNELVELY : P.C.FURNITURE LAND, PH 2345806. NAGERKOIL : PH 2345806. TUTICORIN: SATHYA AGENCY PH:234985 NORTH ARCOT : SRI UNNAMALAI MARKETING PH-0416--2263889, 4200709 CUDDALLORE&VILLUPUAM :JJK AGENCY,Ph:9842379131,9894138904. MADURAI: ABHINAV ENTERPRISES. PH: 0452 - 2528215. ERODE:THAAI ENTERPRISES, .Ph. 2256666.
Also Available at- DUBAI - CANADA - SINGAPORE - SRILANKA



சுபம் தரும் பிள்ளையார்!

தேவையான பொருள்கள் :

மோல்டு (பிள்ளையார்) (அனுமார், லக்ஷ்மி என்றும் உங்கள் விருப்பம் போலத் தேர்வு செய்யலாம்)

எம்சீல், பாக்கெட் - 1

பனை முறம்/பனைத் தட்டு - சின்ன





சைஸ்,

ஃபேப்ரிக் பெயிண்ட் விருப்பமான கலர்,

பிரஷ் - 1,

செய்முறை :

முறத்தில் விருப்பமான ஃபேப்ரிக் நிறத்தை அடித்து, ஐந்து நிமிடம் காய விட வேண்டும்.

அச்சில் சிறிது எண்ணெய் தடவிக் கொள்ளவும். எம்சீலை நன்றாகப் பிசைந்து இரண்டு நிமிடங்கள் கழித்து அச்சில் அடைத்து விட வேண்டும். எம்.சீலில் கறுப்பு, வெள்ளை என இருவிதமாகக் கிடைக்கின்றன. கறுப்பு நிற எம்.சீல் பதினைந்து நிமிடங்களில் காய்ந்துவிடும். வெள்ளை நிற எம்.சீல் காய பத்து மணி நேரம் ஆகும்.



வீட்டில் அழகுக்காக வைக்கும் பூங்கொத்துகளிலும் திரைச் சீலை, சோபாக்களிலும் அவ்வப் போது செண்ட் தெளியுங்கள். சூழ்நிலை ரம்யமாக இருக்கும்.

- கே. ராஜேஸ்வரி, மருதாடு.



துக் கொண்டு உடம்புக்கு 'பீச்' கலர் வர்ணம் பூசி காயவிடவும். பிறகு கறுப்பு நிறத்தில் கண் வைக்கவும். இதை வெள்ளைப் பசை தடவி முறத்தில் ஒட்டவும். முறத்தில் ஸ்வஸ்திக் 'ஸ்ரீ' 'ஓம்' என விருப்பம் போல வரைந்து இன்னும் கிராண்டாகக் கூட அலங்கரிக்கலாம். பூஜை அறையில் வைத்து வழிபட்டால் லக்ஷ்மி கடாட்சம் சேரும்


குறிப்பு : பிளாஸ்டர் ஆஃப் பாரீஸில் சிறிது நீர் விட்டு, சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்தும் இந்த மோல்டில் அடைக்கலாம். பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் விலை குறைவு. ஆனால் இதே முறைதான்!

- சுதா செல்வகுமார்

எம்.சில் பாக்கெட்டில் இரண்டு கவர்கள் இருக்கும். இரண்டையும் ஒன்றாகப் பிசைய வேண்டும். பிறகு அச்சைத் தட்டினால் பிள்ளையார் வந்து விடுவார். வேஷ்டிக்கு வெள்ளை அல்லது ஆரஞ்சு நிறம் வர்ணம் அடித்

படங்கள் : ஸ்ரீஹரி

ஆஹா 50!



ஆய்ந்து நறுக்கிய கீரையைச் சுலபமாக அலசு வதற்கு அதனை ஒரு வடிதட்டியில் கொட்டி, பிறகு சிங்கில் வைத்து மெலிதான குழாய் நீரில் அலசலாம். வடிதட்டியின் கீழே ஒரு பெரிய பாத்திரத்தை வைத்து, அலசிய கீரைத் தண்ணீரைச் சேமித்து அதனை செடியில் ஊற்றலாம். கோடைக்காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டிலும் செடிகளுக்கும் தண்ணீர் ஊற்றியது போல் ஆகும்.

- சுபஸ்ரீ கேசவன், ஜமீன் பல்லாவரம்.



சிலிண்டருக்கும் காலக்கெடு!

சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு காலக்கெடு உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா?

இதோ எல்.பி.ஜி. கேஸ் சிலிண்டர்களுக்கு காலக்கெடு அறியும் முறை :

சிலிண்டரின் கழுத்துப் பகுதியில் உள்ள மூன்று தண்டு போன்ற பட்டைகளில் ஒன்றில் ஆல்ஃபா நியூமரிகல் கோட் என்ற முறையில் ஏ, பி, சி, டி என்ற ஏதாவது எழுத்துடன் இரண்டு எண்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

உ.ம். டி06

இதில் ஏ என்ற எழுத்து முதல் காலாண்டையும், பி என்ற எழுத்து இரண்டாவது காலாண்டையும், சி என்ற எழுத்து மூன்றாவது காலாண்டையும், டி என்ற எழுத்து கடைசி காலாண்டையும் குறிக்கும்.

எண்கள் அந்தக் குறிப்பிட்ட ஆண்டைக் குறிக்கும். ஆகையால், டி06 என்பது 2006-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் வரையில் பயன்படுத்தப்படும் டிசம்பர் கால் இறுதியைக் குறிக்கும்.

அந்தந்த கால் இறுதிக்குள் இல்லாத சிலிண்டர்களானால் உடனே சொல்லி மாற்று சிலிண்டர் பெற்றுக் கொள்ளுங்கள்.

இதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டீர்களானால், எல்.பி.ஜி. கேஸ் சிலிண்டருக்கும் காலக்கெடு உள்ளது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி, விபரத்தையும் தவிர்த்தவராவீர்கள்!

- காயத்ரி பாலாஜி, சென்னை 10.



ஆஹா 50!



பிளாஸ்டிக் பையில் சிறிய ஓட்டைகள் போட்டு, பிறகு காய்களைப் போட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்தால் காய்கள் ஃபிரெஷ்ஷாக இருக்கும்.

- குமுதினி வேணுகோபால், கோவை.

உயர்வு தரும்



போர் தளபதிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்த இளைஞனின் மனத்தில் வெற்றிவாகை சூட வேண்டுமென்ற வேகம் மிகவும் அதிகமாக இருந்தது. அவனது படையிலிருந்த அனைத்து வீரர்களும் அதே எண்ணத்தில் அணிவகுத்துப் புயலெனச் சீறிப் பாய்ந்தனர். போருக்குச் சென்று கொண்டிருந்த வழியில் எதிரிப்படையின் எண்ணிக்கையும், ஆயுதபலமும் தம்மை விட பன்மடங்கு அதிகமாக உள்ளது என்ற ஒற்றனின் செய்தி தளபதியைச் சிறிது தடுமாற வைத்தது. எதிரிப்படையின் பலத்தைப் பற்றிய செய்தி அந்த இளைஞனின் படையைச் சார்ந்த மற்ற வீரர்களுக்குத் தெரிந்து போனதால், அவர்களது வேகம் பெரிதும் குறைந்தது. மறுநாள் காலை, போருக்கு ஆயத்தமாகப் புறப்பட்ட வீரர்கள், 'நம்மால் வெற்றி கொள்ள முடியாது', 'நமது உயிரைக் காத்துக் கொள்ள நாடு திரும்பி விடுவதே நல்லது' என தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர்.

அருகிலிருந்த கோயிலில் இரவு தங்கும் பொழுது, வீரர்களிடையே தளபதி "போருக்குச் செல்வதா நாடு திரும்புவதா? என்று இறைவனிடம் கேட்போம், இறைவனின் முடிவுப்படி நடப்போம்" என்று கூறி தமது கையிலிருந்த நாணயத்தை மேலே சுண்டி "தலைவிழுமானால், இறைவன் நம்மை போருக்குச் செல்ல வாழ்த்துகிறார். பூ விழுமானால், இறைவனுக்குப் போரில் விருப்பமில்லையென்று எடுத்துக் கொள்வோம்" என்று கூறினான். சுண்டி கீழே விழுந்த நாணயம் தலையைக் காட்டியதும் அனைத்து போர் வீரர்களும், "இறைவன் நம் பக்கம் இருக்கிறான். அவனே நம்மை ஆசீர்வதித்த பின்பு நாம் யாருக்குப் பயப்பட வேண்டும்? வெற்றி நமதே" என்று கூச்சலிட்டு எதிரிப் படையை நோக்கிப் பாய்ந்தனர். போரிலே வெற்றியும் பெற்றனர்.



இறைவனின் கருணையே நமக்கு வெற்றியைத் தேடித் தந்தது என்று முழக்கமிட்ட வீரர்களிடம் தளபதி, தமது கையிலிருந்த நாணயத்தைக் காட்டினார். அதில் இரண்டு பக்கமும் தலையே இருந்தது. போரில் வெற்றியைத் தேடித் தந்தது எது? வீரர்களின் மனத்திலே தோன்றிய ஊக்கம் மட்டுமே! இந்த ஜப்பானிய தளபதி நோபு நாகாவின் அனுபவம் நமது இளையதலைமுறைக்குக் கற்றுக் கொடுக்கும் பாடம் 'ஊக்கம் உயர்வைத் தரும்' என்பது

டாக்டர் பே.நா.நாராயண ராஜா



✱ படம் : புதூர் சரவணன்

தானே?


நமது குறிக்கோள்களை வெற்றியாக மாற்றியமைக்க முதலில் தேவைப்படுவது ஊக்கம். 'ஊக்கமது கைவிடேல்' என்ற ஔவை மூதாட்டியின் அறிவுரையே இன்றைய இளைய சக்தியின் மூலமந்திரமாகும்.

மனிதன் தமது அடிப்படைத் தேவைகளைப் போராடிப் பெற்று வந்த காலத்தில் அவனிடம் ஊக்கம் வெகுவாகக் காணப்பட்டது. தமது உணவுத் தேவையின் அத்தியாவசியத்தை உணர்ந்த மனிதன், அதனைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொள்ள புதுப்புது உத்திகளை பெருவாரியாகப் பயன்படுத்தத் தேவையான ஊக்கத்தை கொண்டிருந்தாலேயே இன்றைக்கு ஜி.எம். என்ற தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்கியுள்ளான். தேவைகளே புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் என்பது போலவே, புதிய கண்டுபிடிப்புக்களைத் தொடர்ந்து நிகழ்த்திக் காட்ட தேவையான கரு ஊக்கம் என்பதனையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊக்கம் என்பது தனிமனிதனின் தொடர்ச்சியான பேரார்வம். இந்த ஆர்வம் தனிமனிதனின் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதை

இலக்காகக் கொள்கிறது. ஊக்க சக்தியைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், தனிமனிதனின் தேவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய நடத்தை, நாம் பெறுகின்ற இன்பம் அல்லது துன்பத்தைப் பொறுத்தே அமைகின்றது. துன்பத்தை விட இன்பத்தை எது கொடுக்கின்றதோ அதுவே நாம் பெறும் ஊக்கத்தை உருவாக்கும் பொருள். ஒரு செயல், இன்பத்தை விட துன்பம் அதிகமாக கொடுக்குமாயின் அதுவே நமது ஊக்கத்துக்குத் தடைக்கல்லாகும்.



இன்றைக்குள்ள அறிவியல் வளர்ச்சியாலும், தொழில்நுட்பத்தாலும் எளிமையாக்கப்பட்ட தகவல் தொடர்பாலும் நமது இளைய தலைமுறையினர் பெரிய சாதனைகளை எளிதாக நிகழ்த்திக் காட்ட முடியும். ஆனாலும் தங்களுக்குள் புதைந்திருக்கும் தனித்திறமைகளை இளையதலைமுறையினர் வெளியே ஏன் காட்ட இயலவில்லை? அவர்களுக்குள் ஊக்கம் என்ற பொறி இல்லை.

"நான் உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது. மாவு விற்கப் போனால் காற்று வீசுகிறது" என்று தத்துவார்த்தமாகப் பேசிக் கொண்டும், படிக்கும் காலங்களில் தான் எதிர்காலத்தில்

செல்லும் வேலைக்குகந்த செயல்திறன்களை முழுமையாகக் கற்றுக் கொள்ளாமலும், சிறிய தோல்விகளிலும், இழப்புகளிலும் தமது வாழ்க்கையே தொலைந்து போனதாகக் கற்பனை செய்து கொள்ளும் இளைய சமூகத்தினர், தங்களது தோல்விகளை வெற்றியின் படிக்கட்டுகளாக நினைக்க வேண்டும். இல்லை என்றால் ஊக்கசக்தியை நிலைநிறுத்தி வெற்றியை அடைய முடியாது.

'ஊக்கம்' என்பது எரிகின்ற நெருப்பு போன்றது: தொடர்ந்து எரிய வேண்டுமென்றால், 'நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன்' என்ற நம்பிக்கை சக்தி எரிபொருளாக இருக்க வேண்டும்.

> பண்டிகைகளின் போது செம்மண் (காவி) இடும்போது பெயிண்டிங் பிரஷ் கொண்டு இட்டால் ஒரே சீராக பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். கடைகளில் ஸ்பான்ச் விற்கிறார்கள். அதை கையளவுக்கு கத்திரித்துக் கொண்டு, அதை வைத்து இழைக்கோலம் போட்டால் இழை சீராக வருகிறது.
>
> **- கீதா ஸ்ரீதர், சென்னை - 17.**

பத்தாயிரம் முறை தோற்றுப் போன பின்பும், தொடர்ச்சியான ஊக்க சக்தி இருந்ததனாலேயே மின்சார விளக்கை, தாமஸ் ஆல்வா எடிசனால் கண்டுபிடிக்க முடிந்தது மற்றும் 1097 கண்டுபிடிப்புக்களுக்கு உரிமையைப் பெற முடிந்தது.

தொடர்ந்து தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருந்த ஆபிரகாம்லிங்கனும் "என்றைக்காவது ஒருநாள் எதிர்பார்க்கின்ற வெற்றி, எனக்கு வந்தே திரும்" என்று தமது ஊக்க சக்தியை வெளிக்காட்டியதனாலேயே அமெரிக்க



சேப்பங்கிழங்கு ரோஸ்ட்

நல்ல உருண்டையான, ஒரே மாதிரி சைஸில் சேப்பங்கிழங்குகளைப் பொறுக்கி வாங்கி, சரியாகக் குழைந்து போகாமல் தோலை மட்டும் உரிக்கும் பதத்தில் வேகவிடவும். தேவையான உப்பு, மிளகாய்ப் பொடி, கடலை மாவு, அரிசி மாவு, கார்ன்ஃப்ளவர் இவற்றோடு சீஸ்லிங் என்னும் சிறிய சீஸ் பிஸ்கெட்டை மிக்ஸியில் பொடித்து, மேலே சொன்ன கலவையுடன் கலந்து கொண்டு டீப் ஃப்ரை செய்தால், சேப்பங்கிழங்கு ரோஸ்ட்டின் கரகரப்பு சொல்லி மாளாது.

- புவனா நடராஜன், கொல்கத்தா.

ஜனாதிபதியாகி, அரிய சாதனைகள் புரிந்தார்.

வெற்றிபெறக்கூடிய ஊக்கம் உங்களுக்குள்ளதா இல்லையா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

உற்சாகம், ஆச்சரியம் இரண்டும் உங்களது பணிகளில் இல்லையென்றால், நீங்கள் ஊக்கம் கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அதுபோலவே, உங்களது முழுத்திறனை வெளிப்படுத்தும் பணியில் நீங்கள் இல்லை என்பதும், அதனாலேயே உங்களது ஊக்க சக்தி முழுவதுமாக உணரப்படவில்லை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாறையைப் பிளக்கும் தொழிலாளி தனது சம்மட்டியால் பாறையை நூறு முறை அடிப்பான். அதில் பிளவு ஏற்படாமல் இருக்கும். நூற்று ஒன்றாவது முறை அடிக்கும் பொழுது, பிளவு ஏற்பட்டுச் சிதறும். அந்தப் பிளவுக்கு அந்த ஒரு அடி மட்டும்தான் காரணம் என்று நினைக்கலாமா? அதற்கு முன்பு அடித்த ஒவ்வொரு அடியும் பாறையின் பிளவுக்குக் காரணம் என்பதை இன்றைய இளைய சக்தி புரிந்து கொண்டாலே வெற்றி உறுதியாகும்!



அம்மியில் மிளகு மசால் அரைக்கும்போது கைகளில் ஒருவித எரிச்சல் உருவாகும். அதைப் போக்க கருப்பட்டி கலக்கிய சிறிதளவு நீரில் கைகளை அமிழ்த்தி வைத்தால் எரிச்சல் நீங்கும்.

- ஆர். தங்கராஜ், திருப்பூர்.


Largest Collections
மிக மிக குறைந்த விலை...
தங்கம் கிராமுக்கு ரூ.70 வரை குறைவு
ஸ்ரீ சங்கரபாண்டியன் ஸ்டோர்ஸ்
84/85, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-17. (தி.நகர் பேருந்து நிலையம் அருகில்) ☎ 044-24322977



'தாய்மார்களின் ஏகோபித்த ஆதரவுடன்...' 'பெண்கள் கூட்டம் அலைமோதும்' என்றெல்லாம் ஆரவாரமாக, சினிமா தயாரிப்பு நிறுவனங்கள் விளம்பரப்படுத்துவதிலிருந்தே தெரியவில்லையா, ஒரு திரைப்படம் வெற்றியடைய பெண்களின் ஏகோபித்த வரவேற்பு தேவை என்று!

ஆனால் இன்றைய தியேட்டர்களின் நிலைமை, பெண்கள் குடும்பத்துடன் சினிமாவுக்குப் போவது போலவா இருக்கிறது?

கிழிந்த சீட்டுகள், சுகாதாரமற்ற கழிவறைகள், புழுக்கம், மூட்டைப் பூச்சித் தொல்லை, மோசமான ஒலி, ஒளி அமைப்பு என மட்டமான நிலையில்தானே பெரும்பான்மையான தியேட்டர்கள் இருக்கின்றன.

இதற்கெல்லாம், சென்னை பிரமிட் சாய்மிரா தியேட்டர் நிறுவனம் மூலமாக,

நவீனமாகும் சினிமா!



ஒரு விடிவு பிறந்து விட்டது. சினிமா தியேட்டர்களை, டிஜிட்டல் தியேட்டர்களாக நவீனப்படுத்தும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கும் நிறுவனம் இது!

"தியேட்டர்களை மட்டுமல்ல, பட ஒளிபரப்பையே நவீனமாக்கப் போகிறோம். நிறைய பிரிண்ட் எடுத்து, ஊர் ஊராகப் படப் பெட்டிகளில் தூக்கிக் கொண்டு போகத் தேவையில்லை. ஒரே ஒரு மாஸ்டர் பிரிண்ட் போதும். சாட்டிலைட் ஒளிபரப்பு மூலம் ஒரே நேரத்தில் உலகமெங்கும் ரிலீஸ் செய்யலாம். இம்முறையால், திருட்டு வீடியோவுக்கு ஒரு பெரிய முற்றுப்புள்ளி வைத்து விடலாம். லேஸர் ஸ்க்ரீன்கள், டிஜிட்டல் ப்ரொஜக்டர்கள் இருப்பதால், ஒலி, ஒளி எல்லாமே படுதுல்லியமாக இருக்கும்" என்கிறார் பிரமிட் நிறுவனத்தின் சேர்மன் நடராஜன்.

"படுசுத்தமான தியேட்டர் வளாகம், உணவுக் கடைகள்,

ஆஹா 50

ஷாப்பிங் ஏரியா, கேளிக்கை அரங்கம் என வசீகரிக்கும் அம்சங்களும் இருந்தால்தான் மக்கள் விரும்பி வருவார்கள். அதனால், அதையும் செய்யப் போகிறோம். அதற்காக, நலிந்த நிலையில் இருக்கும் தியேட்டர்களை குத்தகைக்கு எடுத்து நவீனப்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். இதற்கு சினிமா தியேட்டர் உரிமையாளர்களிடமிருந்தும் மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளது. சென்னையின் அபிராமி, மும்பையின் அரோரா



• மும்பையில் நடந்த தொடக்க விழாவில்...

தியேட்டர்கள் இந்த டிஜிட்டல் தியேட்டர் சங்கிலியின் கீழ் வர, அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தியேட்டர்களை இப் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நிர்வகித்து வருகிறோம் என்றார் 'பிரமிட்' நிறுவன நிர்வாக இயக்குநர் பி.எஸ். சுவாமிநாதன்.

இவர்களுடைய நோக்கம் நிறைவேறினால், புத்துணர்வு கொள்வது சினிமாத் துறை மட்டுமல்ல, பெண்களும்தான். குடும்பத்துடன் பிக்னிக் போல ஜாலியாக சினிமா பார்த்துக் களிக்கலாம் அல்லவா?

- மலர்

ரவா கேசரி, அல்வா போன்ற இனிப்பு வகை செய்யும்போது கடைசியில் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்தால் இனிப்பு திகட்டாது சுவையாக இருக்கும்.

- திருப்பூர் சரோஜா





முகப் பளிச்க்கு 3 வழிகள்!

கோதுமை மாவு,
முட்டையின் வெள்ளைக் கரு
இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து
அதில் ஒரு துளி தேன் கலந்து
பூசுங்கள்; அஞ்சு நிமிஷம்
கழித்துக் கழுவுங்கள். அட,
மின்னுதே முகம்!

பப்பாளிப் பழத்தை மசித்து
அதனுடன் வைட்டமின் 'ஈ'
ஆயில் கலந்து முகத்தில்
பூசுங்க. ஃபேஸ், 'பேஷ்...
பேஷ்...!'

வறண்ட சருமம் உள்ளவர்கள் தக்காளி
சாறுடன் சிறிது தயிர் கலந்து குழைத்து..
முகத்தில் பூசி 5 நிமிடங்கள் காயவிட்டு குளிர்ந்த
நீர் கொண்டு கழுவினால் போதும்... முகம்
பளபள! அல்லது முட்டைக்கோஸை
அரைத்து தேன் கலந்து முகத்தில்
பூசி ஐந்தே நிமிடம் போதும். அப்புறம்
கழுவினால் முகம் புத்தம் புது
புத்துணர்வுடன்
ஜொலி... ஜொலிக்கும்!

- எஸ். எம். திருச்சி


SWIFTEE
Mixer-Grinder
CG Crompton Greaves
EVERYDAY SOLUTIONS
விரைவாக, நிறைவாக,
சுவையாக சமைக்க!
CG-DX TURBO
• 750 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• சர்க்யூட் பிரேகர் புரொடெக்சன்
• ஜார்ஸ் வித் ஃப்ளோ பிரேகர்ஸ்
CG-DX
• 550 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• சர்க்யூட் பிரேகர் புரொடெக்சன்
• ஜார்ஸ் வித் ஃப்ளோ பிரேகர்ஸ்
CG-LX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
CG-MX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• இன்ஸ்டா-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
• காம்பாக்ட் டிசைன்
CG-RX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• இன்ஸ்டா-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
• ஸ்லீக் டிசைன்
இன்றே, உங்கள் அருகிலுள்ள டீலரை அணுகுங்கள்!
Crompton Greaves Limited, Branch Offices: Chennai: 3, MGR Salai (K.H. Road), Nungambakkam. Tel: 044 4224 7500 / 4215 9275. Coimbatore: No. 658-664, Rajalakshmi Plaza, 100 Ft. Road, Gandhipuram. Tel: 0422 252 6453. Madurai: 2, 3 Mangayarkarasi College Road, Paravai. Tel: 0452 266 7771/7697.

மாடிவாசிகளின் கவனத்துக்கு...



முழங்கால்வலி என்னைப் போல் பலருக்கு உண்டு. குறிப்பாக வயதானவர்களுக்கு இதனால் பெரும் தொல்லை. அதிலும் மாடியில் குடியிருந்தால் கேட்கவே வேண்டாம். ஒருநாளைக்கு பத்து தடவையாவது கீழே இறங்கி ஏறியாக வேண்டும். காலையில் பால்காரர், பின்பு செய்தித்தாள், தபால்காரர், காய்கறி, மாலையில் பால் என்று கீழே இறங்கி ஏறுவது பெரிய தண்டனைதான். இதில் யார் இறங்குவது, நீயா, நானா என்ற பிரச்னை வேறு. இந்தப் பிரச்னைக்கு சமீபத்தில் ஒரு முடிவு கட்டினார் என் கணவர்.

அதுதான் மாடிக்கும் வெளிகேட்டுக்கும் அவர் தயார் செய்த லிஃப்ட். இந்த மிக, மிக உபயோகமான எளிய உபகரணத்துக்குத் தேவைப்பட்டதெல்லாம் இரண்டு சின்ன உருளைகளும், நைலான் கயிறும்தான். வெளிகேட்டில் ஒரு உருளையையும் மாடியிலுள்ள இரும்பு 'கிரில்லில்' ஒரு உருளையையும் பொருத்தி அவை இரண்டையும் நைலான் கயிறால் இணைத்தார். அதில் ஒரு பையையும் கட்டி விட்டார். மாடிக்கு லிஃப்ட் தயார். ஒரு கயிறை நம் பக்கம் இழுத்தால் பை நம் பக்கம் மேலே வரும். அடுத்த கயிறை இழுத்தால் பை, கீழே போகும். பால்காரர் முதல் தபால்காரர் வரை எல்லோரிடமும் எங்களுக்குச் சேர வேண்டியவற்றை அந்தப் பையில் போட்டுவிடுமாறு கேட்டுக் கொண்டோம். அவர்களும் அப்படியே செய்ய, நாங்கள் கீழே இறங்கும் வேலையே தற்போது இல்லை. இதற்கு மொத்த செலவு பத்து ரூபாய்தான்.

இதே முறையைப் பின்பற்றி ஒரு கயிற்றில் சின்ன பிளாஸ்டிக் வாளியைக் கட்டி கீழ் தளத்தில் வசிப்போரும் மேல்தளங்களில் வசிப்போரும் படியிறங்காமல் பண்டமாற்று செய்யலாம்.

- வத்சலா ஈடன், தஞ்சாவூர்.



மருத்துவம்

"டாக்டர், என் குழந்தைக்கு ஐந்து வயசாகுது. விழுங்கும் போது வலி என்கிறாள். கொஞ்சம் தொண்டையைப் பாருங்கள் டாக்டர்."

"அம்மா, குழந்தைக்கு ஒரு பிரச்னையுமில்லை; கொஞ்சம் புண்ணாய்தான் இருக்கு. இந்த மாத்திரையைச் சாப்பிடுங்க. ஒரு வாரத்தில் குணமாயிடும்."

(புருவத்தைச் சுருக்கியபடி), "கொஞ்சம் நல்லா பாருங்க டாக்டர். நான் டார்ச் அடிச்சுப் பார்த்தேன்; இரண்டு பக்கமும் சதை தெரிஞ்சுச்சு; ஆபரேஷன் பண்ண வேணாமா?

டான்ஸில் தொல்லையா?



"ஏன் அதையும் நீங்களே பண்ணிடுங்களேன்!" என்கிறார் டாக்டர் சிரித்துக் கொண்டே.....

"இதுதான் இன்றைய காது, மூக்கு, தொண்டை மருத்துவரின் நிலைமை. டான்ஸில் பற்றிய பல தவறான கருத்துகள் மக்கள் மத்தியில் உள்ளன. அதைக் கண்டிப்பாக எழுதுங்கள்" என்கிறார் திருச்சி தில்லைநகரில் அமைந்துள்ள ராயல் பேர்ல் மருத்துவமனையின் ஈ.என்.டி. டாக்டர் டி.என். ஜானகிராம்.

டான்ஸில் என்பது இலத்தின் மொழிச் சொல்! டான்ஸிலா என்றால் மூரிங்போஸ்ட் என்று பொருள். கோவிலுக்குள் நுழையும் போது மூலவரைப் பாதுகாக்க எப்படி இரண்டு துவார பாலகர்கள் இருப்பார்களோ. அதே போல் நம் வயிற்றைப் பாதுகாக்க பாதுகாவலனாக டான்ஸில் தொண்டையில் அமைந்துள்ளது.

டான்ஸில் என்பது எல்லோருக்கும் இருக்கும் ஒரு லிம்பாய்ட் டிஷ்யூ. கிருமிகளை அகற்றக்கூடிய தன்மை டான்ஸில் சதைக்கு உள்ளது. இதே போன்று சதை நமது மூக்குக்குப் பின் புறமும் உள்ளது. அதற்கு அடினாய்டு என்று பெயர்.

இந்த இரண்டு சதைகளும் சுமார் 6 மாத குழந்தையிலிருந்து தோன்றி, கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி ஐந்து வயதுக்குள் முழுமை அடைந்து அதன்பின் பெரும்பாலான நபர்களுக்கு அது சுருங்கி விடுகிறது. நம் முகப் பகுதி பெரிதாக ஆக, இந்தச் சதைகள் சுருங்குவது போல்

தோற்றம் அளிக்கின்றன. ஒருசில நபர்களுக்கு மட்டும் அடினாய்டு மற்றும் டான்சில் சதைகள்

னேயே ஈ.என்.டி. டாக்டர்கள் அதற்கு அறுவை சிகிச்சை செய்வ தில்லை. பெரும்பாலும் மருந்து



மிகவும் பெரிதாகி பிரச்னை களை உண்டாக்குகின்றன.


அடினாய்டு சதையினால் குறட்டைப் பிரச்னை. டான் ஸில் சதையினால் விழுங்கு வதற்கு வலி, குறட்டை, காய்ச் சல் போன்றவை ஏற்படலாம். மற்ற சில நபர்களுக்கு டான்ஸில் பகுதியில் ஸ்ட்ரெப்டோகாகஸ் என்ற பாக்டீரியா தாக்கி அத னால் ருமாடிக் ஃபீவர் (மூட்டு வலி, இருதயப் பகுதியில் வலி) மற்றும் சிறுநீரகப் பிரச்னைகள் ஏற்படலாம்.

டான்ஸில் சதையை எப்போது அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும் என்பதை இப்போது பார்ப்போம். டான் ஸில் சதையைப் பார்த்தவுட

மாத்திரைகளால் குணப்படுத்த முயல் வார்கள். முடியாதபட்சத்தில் மட்டுமே அறுவை சிகிச்சையை சிபாரிசு செய்வார் கள்.

அடினாய்டு சதை மூக்குக்குப் பின்புறம் அமைந்துள்ளதால், இந்தப் பிரச்னை உள்ள நோயாளிகள் மூக்கு வழியாக மூச்சுவிட இயலாது. அதனால் குறட்டை சத்தம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. வாய் வழியாக மூச்சு விடுவதால் சில குழந்தைகளுக்கு பற்கள் சீராக வளரா மல் இருக்கும். சில குழந்தைகளுக்கு நடுக்காதில் நீர் கோத்துக் கொண்டு அவஸ்தை தரும். இதுபோன்ற நிலையில், அடினாய்டு அறுவை சிகிச்சையை செய்தே ஆக வேண்டும்.

சில குழந்தைகளுக்கு அடிக்கடி காய்ச் சல், தொண்டை வலி ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஒருவருக்கு நான்கு அல்லது ஐந்து முறை தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு



சாலட் செய்யும் போது எந்தக் காய்கறிகள் சேர்த்து செய்தாலும், பச்சை மிளகாயை அப்படியே போடாமல் கொஞ்சம் மல்லித் தழை, மிளகாயுடன் சேர்த்து மிக்ஸியில் அரைத்து சாலட்டுடன் கலந்தால், மிளகாய் காரத்துடன் மல்லி வாசனையும் சேர்ந்து சுவையாக இருக்கும். மல்லியைத் தனியாக எடுத்து வைக்க மாட்டார்கள். பச்சை மிளகாயும், பல்லில் கடிபட்டு எரிச்சல் உண்டாக்காது.

- உஷா நாராயணன், குரோம்பேட்டை.

இந்தப் பிரச்னை ஏற்பட்டால் டான்ஸில் அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும். குறட்டைப் பிரச்னைக்கும் டான்ஸில் ஒரு காரணமாக இருக்கலாம். ஒருசிலருக்கு டான்ஸில் சதையில் புற்றுநோய் கூட ஏற்படலாம். இத்தகையவர்களுக்கும் அறுவை சிகிச்சை மிக அவசியமானது.

டான்ஸில் அறுவை சிகிச்சையை பலமுறைகளில் செய்யலாம்.

டிஸெக்ஷன் முறை

லேசர் டான்ஸில் சர்ஜரி

காபுலேஷன் முறை

இந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு முன், இரத்தப் பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். இந்த அறுவை சிகிச்சையை ஜெனரல் அனஸ்தீஷியா கொடுத்துத்தான் பெரும்பாலான டாக்டர்கள் செய்வார்கள். ஆபரேஷனுக்கு ஆறு மணி நேரத்திற்கு முன்பிருந்தே நீராகாரம் கூட சாப்பிடக் கூடாது. லேசர் கதிர்கள் கொண்டு அறுவை சிகிச்சை செய்யும் போது இரத்த சேதம் இன்றி வலி இன்றி இந்த அறுவை சிகிச்சையை செய்ய முடியும். ஆபரேஷனுக்குப் பிறகு நான்கு மணி நேரம் கழித்து ஐஸ்க்ரீம், ரோஸ் மில்க் போன்றவை கொடுக்கப்படலாம். சூடான மற்றும் காரமான உணவை ஒரு வாரத்துக்குச் சாப்பிடக் கூடாது.

நிறைய பேர் கேட்கும் பொதுவான சந்தேகங்கள்:

"டாக்டர், டான்ஸில் ஆபரேஷன் செய்து விட்டால் அது, திரும்பவும் வளருமா?

வளராது. ஆனால் டான்ஸில் ஆபரேஷன் ஒருவர் செய்து விட்டால் அந்த நபருக்கு தொண்டை கட்டவே கட்டாது என்று சொல்ல இயலாது.

"டான்ஸில் ஆபரேஷன் செய்வதால் குரலில் மாற்றம் ஏற்படுமா?"

பெரும்பாலானவர்களுக்கு இது ஏற்படாது. ஒருசிலருக்கு போஸ்டீரியர் பில்லர் என்ற உறுப்பில் ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதனால் குரல் மாற்றம் ஏற்படலாம்.

"எந்த வயதில் டான்ஸில் ஆபரேஷன் செய்வது நல்லது?"

- "4 வயதிற்குக் கீழ் இந்த அறுவை சிகிச்சையைப் பொதுவாகச் செய்வதில்லை. அதற்கு மேல் செய்யலாம்."

"இது மேஜர் ஆபரேஷனா, மைனர் ஆபரேஷனா?"

"மேஜர் ஆபரேஷன், மைனர் ஆபரேஷன் என எந்த அறுவை சிகிச்சையையும் பிரிக்க முடியாது. தொழிலில் அக்கறையுள்ள மருத்துவர்களுக்கு எல்லா ஆபரேஷனும், மேஜர் ஆபரேஷன்தான். சின்னதோ, பெரிதோ, அந்த உறுப்பு தரும் பிரச்னை, மனித உடலுக்கு முக்கியமானதுதானே?" என்கிறார் டாக்டர் டி.என். ஜானகிராம்.

(அடுத்த வாரம் காக்ளியர் இம்ப்ளான்டேஷன் பற்றிப் பார்ப்போம்)

- கல்யாணி நாராயணன், திருச்சி.



ஆஹா 50!



இட்லிக்கு சட்னி செய்யும் போது பொட்டுக்கடலை, தேங்காயுடன் வறுத்த வேர்க்கடலையும் சேர்த்து அரைத்தால் சட்னி மிகவும் ருசியாக இருக்கும். பச்சை மிளகாயை எண்ணெயில் வதக்கிப் போட வேண்டும்.

- எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி.

ஆஹா 50!



கட்டிப் பெருங்காயத்தில் 2 பச்சை மிளகாயைப் போட்டு வைத்தால் பெருங் காயம் இளகிவிடும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை அந்த மிளகாயை சாம்பார், ரசத்தில் போட்டு (அப்போது சாம்பார், ரசத்திற்குப் பெருங்காயம் போட வேண் டாம்) விட்டு, பச்சை மிளகாயை மாற்ற லாம்.

- மோஹனா, ஹரியானா.

சமையல்

என்னுடைய பாட்டி, நார்த்தங்காய் குழம்பு செய்வார்கள். மிகவும் சுவையாக இருக்கும்.

வற்றல் மிளகாயை, தேவையான காரத்துக்கு எடுத்து சிறிதளவு நல் லெண்ணெயில் வறுத்துக் கொள்ள வேண்டும். வெந்தயத்தை வெறும் வாணலியில் 2 டீஸ்பூன் வறுத்துக் கொண்டு இரண்டையும் மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். வழக்கமாகச் சேர்க்கும் புளியில் பாதி



அளவு எடுத்து கரைத்துக் கொள்ளவும். அடிகனமான வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, வடிகட்டிய புளிச் சாறு, உப்பு, பெருங்காயப் பொடி, மிளகாய் விழுது, மஞ்சள் பொடி ¼ டீஸ்பூன், கறிவேப்பிலை 2 ஆர்க்கு, வெல்லம் நெல்லிக்காய் அளவு, சேர்த்துக் கொதிக்க வைக்கவும். வற்றியவுடன், தேவையானால் அரிசி மாவு சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி விட



நல்லாயிருக்கே... நார்த்தங்காய் குழம்பு!

வேண்டும்.

மீடியம் சைஸ் நார்த்தங்காய் ஒன்றைப் பிழிந்து சாறை குழம்பில் சேர்க்க வேண்டும். இன்னொரு சிறிய நார்த்தங்காயைச் சிறியச் சிறிய துண்டுகளாக்கி நல்லெண்ணெயில் வதக்கி தட்டைப் போட்டு மூடி சிறிய தீயில் வைக்க வேண்டும்.





பிறகு இதை உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து மீண்டும் வதக்கி குழம்பில் சேர்க்க வேண்டும். ஓரளவு ஊறிய பிறகு எல்லோரும் சாப்பிட்ட பிறகு மீதித் துண்டுகளைத் தனியாக எடுத்து வைத்து விட வேண்டும். குழம்பிலேயே துண்டுகள் இருந்தால் குழம்பு கசந்து விடும். கடுகு தாளித்தால் வாசனையாக இருக்கும். இந்தக் குழம்பை கல் தோசை, இட்லி, மோர் சாதத்துடன் சாப்பிட்டால் சுவையோ சுவை.

ப்ரிட்ஜ் வைத்திருப்பவர்கள் ஒரு வாரம் வரையிலும் வைத்துச் சாப்பிடலாம். குளிர்சாதனப் பெட்டி இல்லாதவர்கள் 2, அல்லது 3 நாட்கள் வரை வைத்துச் சாப்பிடலாம்.

- ராஜி குருசுவாமி, ஆதம்பாக்கம்.

ஆல்பம்

தாத்தா : எஸ். சீதாராமன்
பாட்டி : உஷா சீதாராமன்





பேத்தி : பா. மதுரவர்த்தினி

என் செல்லமே!



தாத்தா எஸ்.வி. பூர்ணன்
பாட்டி : சித்ரலேகா பூர்ணன்
பேத்தி : சுஷ்மி



பேத்தி : தேஜஸ் ஆத்ரேயா



தாத்தா : ராஜாராமன்
பாட்டி : உமா ராஜாராமன்

அம்மா!



'விடியக்காலம் அஞ்சு மணிக்கே விசுக்குன்னு எந்திரிச்சிருவாளே அம்மா... இன்னிக்கு என்னாச்சு? மணி ஆறாகப் போவுது. இன்னும் படுத்துக் கெடக்கறாளே. ஒடம்புக்கு முடியலியோ?' கஸ்தூரி அம்மாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். உடம்பு இலேசாகச் சுட்டது. மகளது கைபட்டதும் சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள் முத்தம்மா.

"எந்திரிக்காதே... படுத்துக்கம்மா... காய்ச்சலடிக்குது. இந்த மாத்திரையை விழுங்கிட்டுப் படுத்துக்கோ. நீ வீட்டு வேலைக்கு இன்னிக்குப் போக வேணாம். நா போயி பாத்திரம் கழுவி துணி துவைச்சுப் போட்டு வெரசா வந்துடறேன்..."

"ஆத்தாடி... வேணாந்தாயீ... பச்ச ஒடம்புக்காரி. வீட்டு வேலைக்குப் போற கொடுமைய வேற நா பாக்கணுமா? ஏதாச்சும் ஒண்ணுனா ஒம் புருசனுக்கு யாரு பதில் சொல்றது? புள்ள அழுவுது... நீ போய் அதைத் தூக்கு..."

மகள் தந்த மாத்திரையைப் போட்டுக் கொண்டு கருப்பட்டி காப்பியை இரண்டு மடங்கு குடித்த முத்தம்மா, சுருண்டு படுத்துக்கொண்டாள்.

'ஏற்கெனவே கஸ்தூரிக்கு பிரசவ நேரம்னு பத்துப் பதினைஞ்சு நாள் வீட்டு வேலைக்கே போகலை. மறுபடியும் லீவு போட்டா மொகத்தைத் தூக்குவாக... வெடுக்குன்னு பேசிடுவாக. ஏழை-பாழைன்னாலும் மான ரோசம் அத்துப் போவலியே. வாங்கற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலைக்கு வரணும்னு குத்தலா பேசிப்புட்டா மனசு கொதிக்குமே! சித்த நேரம் படுத்துக் கெடந்து பொறவு எந்திரிச்சு வேலைக்குப் போக வேண்டியது தான்' என்ற எண்ணத்தோடு கண்ணயர்ந்தாள்.

ஒருமணி நேரத்துக்குப் பிறகு -

"எம்மா... புள்ளைக்குப் பால் குடுத்துத் தூங்க வச்சு தொட்டில்ல போட்டிருக்கேன். எப்படியும் ரெண்டு மூணு மணி நேரமாச்சும் தூங்கும். அதுக்குள்ளாற நா ரெண்டாவது தெரு வீட்டுல வேலையை முடிச்சுட்டு வந்திடறேன். நீ ஒடம்பைப் பார்த்துக்கம்மா... பழைய சோத்தைத் திங்காதே... வர்றப்ப ரொட்டி வாங்கியாறேன்."

முத்தம்மா பதறிப் போனாள்!

"அட... அநியாயமே... புள்ள பெத்த பச்ச ஒடம்பு தண்ணில வேலை பார்க்கக் கூடாது தாயீ.... ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது. ஒடம்புக்கு சிக்கு-கிக்கு வந்தா வேற வெனையே வேண்டாம். வேணாம் கஸ்தூரி... சொன்னாக் கேளு..."

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. ஆண்டவன் பாத்துக்கிடுவான். நா போயி மடமடன்னு தோய்ச்சுப் போட்டு வர்றேன், இல்லாட்டி எல்லாருகிட்டேயும் நீதானே ஏச்சும், பேச்சும் வாங்கணும்" என்று வெளியேறினாள் கஸ்தூரி.

"என்ன கஸ்தூரி, அம்மா வரலியா...?"

"எங்கம்மாக்கு காய்ச்சல். நீ போக வேணாம். கொழந்தையைப் பாத்துக் கோன்னு சொல்லிட்டு வந்துட்டேன். சீக்கிரம் துணிமணி எடுத்துப் போடுங்கம்மா. கொழந்தை

தூங்குது... முழிக்கிறதுக்குள்ளே வேலை முடிச்சுட்டுப் போவணும்."

ராதிகா அழுக்குத் துணிகளை எடுத்துப் போட்டுவிட்டு உள்ளே சென்றாள். அவசர அவசரமாக மெத்தைகளில் இருந்த போர்வைகளை அகற்றி விட்டு வேறு விரிப்புகளை மாற்றினாள்.

"ராதிகா... நாலு நாளைக்கு முந்தி தானே பெட்ஷீட்ஸ் மாத்தினே மறுபடியும் எதுக்கு இப்ப... சமீபத்தில டெலிவரி ஆன பொண்ணு. ரொம்பக் கஷ்டப்படுத்தாதே. மனச்சாட்சியோடு நடந்துக்கோ" என்றான் அவள் கணவன்.



"நீங்க பேசாம இருங்க. நான் பார்த்துக்கறேன். அதெல்லாம் ஒண்ணும் ஆகாது" என்று போர்வைகளைத் துவைக்கப் போட்டு விட்டு வந்தாள்.

சோப்பில் ஊறவைத்த போர்வைகளை, சிரமத்தோடு எடுத்துத் துவைத்தாள். அலசுவதற்காக வாளித் தண்ணீரில் போர்வைகளை அமிழ்த்தினாள். பட்டையும், கைகளும் சோர்ந்து தளர்ந்தன! இந்த வலியை, அசதியை, பலவீனத்தைத்தான் அம்மா அடிக்கடி 'பச்சை உடம்பு' என்கிறாளோ!

போன வாரம் ஒருநாள் கைக்குழந்தை நனைத்த நான்கைந்து குட்டித் துணிகளை எடுத்துக்கொண்டு துவைக்கப் போனபோது பதைப்போடு ஓடி வந்தாள் அம்மா.

'அடியே... கஸ்தூரி, ஒனக்கு எத்தனை தரம் சொல்றது - சொன்னா காதில வாங்க மாட்டியா... புள்ள பெத்தவ, ஜாக்கிரதையா பொன்னோ பூவோன்னு இருக்கணும். பச்ச தண்ணில கை வைக்காதே. கொழந்தை துணிகளை ஒரு வாளில போட்டு வை. அம்மா வீட்டு வேலை முடிஞ்சு வந்து அலசிப் போடறேன்' என்று கடிந்துகொண்ட அம்மாவை நினைத்தபோது கையில் இருந்த போர்வைகளின் கனத்தை விட மனம் கனத்தது. அதே நேரத்தில் நெஞ்சும் கனத்தது பால் கட்டிக்கொண்டு. 'கொழந்தைக்குப் பசி எடுத்திருக்குமோ?' என்ற எண்ணத்தில் வேகவேகமாகத் துணிகளைப் பிழிந்து காயப் போட்ட தருணத்தில் பால் கசிந்து, மார்புச் சேலை நனைந்திருந்தது!

தூளியில் குழந்தை சிணுங்கியது. முத்தம்மா தூளியை ஆட்டி விட்டாள். தொட்டில் பக்கத்திலேயே பிய்ந்து தொங்கும் பாயை விரித்து முடங்கிக் கொண்டாள்.

"இந்தப் புள்ளை கஸ்தூரி வேலைக்குப் போறேன்னு சொன்னாளேன்னு புத்தி கெட்டுப் போய் நானும் அவள அனுப்பி வச்சிட்டேனே. வேலைக்காரியும் மனுஷிதானேன்னு யாரு நெனைக்கறாக? பச்சை உடம்பு தாங்காதே. பெத்தவளுக்குத்தானே அந்த நோக்காடு தெரியும். பாவி மக!"

அவ்வளவுதான் - முத்தம்மாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. விருட்டென்று எழுந்தாள். அவிழ்ந்த கொண்டையை அள்ளி முடிந்தாள். சேலையை உதறிக்



அடடா 50!

பூ, இலை டீ!

செம்பருத்திப் பூ-2, துளசி இலை, தனியா சிறிது, சுக்கு, மிளகு, ஓமம், ஏலக்காய், பனங் கற்கண்டு அல்லது பனைவெல்லம், பால்.

துளசி இலையையும், செம்பருத்திப் பூவையும் நீரில் கொதிக்கவிட்டு வடிகட்டிக் கொள்ளவும். தனியா, சுக்கு, ஓமம், மிளகு, ஏலக்காய் இவற்றை வெறும் வாணலியில் வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். பாலைக் காய்ச்சி அதில் துளசி, செம்பருத்தி ஜலம் விட்டு, பொடியில் இரண்டு ஸ்பூன் போட்டு பனைவெல்லம் (அ) பனங்கற்கண்டு சேர்த்து அருந்தவும். இந்த மூலிகை டீ உடம்புக்கு மிகவும் சிறந்தது.

- தங்கம் ராமஸ்வாமி, மும்பை.



பச்சை வெங்காயம் தினம் ஒன்று சாப்பிட்டு வந்தால், ஊளைச் சதை நாளடைவில் குறையும். முகத்துக்கு திடீர் பொலிவு உண்டாகும்.

- எஸ்.எம்., திருச்சி.

கட்டிக்கொண்டாள்.

குடிசைக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருந்தாள் ஏழு வயது கௌரி, நாலாவது வீட்டு செல்லத்தாயின் மகள். "எம்மா... கெவுரீ... தங்கச்சி பாப்பா தொட்டில்ல தூங்குது. கொஞ்சம் பாத்துக்கடா... தொட்டுக்கிட்டு எழுப்பி விட்ராத. அழுதா இலேசா தொட்டிலை ஆட்டி விட்ருமா... என் கண்ணு இல்லே. அஞ்சு நிமிஷத்துல ஓடியாந்திடறேன்" என்று அவள் மோவாயைத் தொட்டுக் கொஞ்சி, கஸ்தூரி வேலைக்குச் சென்ற வீட்டை நோக்கி நடையை எட்டிப் போட்டாள்.

அரைக்க வேண்டியவற்றை, மிக்ஸியில் போட்டு அரைத்த ராதிகா, காய்களை நறுக்கியவண்ணம் ஜன்னல் வழியே பார்வையை வெளியே விட்டாள். முத்தம்மா வேகமாக வந்து கொண்டிருந்தாள். 'இவள் எதற்காக வருகிறாள் ஜுரத்தோடு? அதான் கஸ்தூரி வந்து துவைக்கிறாளே!'

சில நிமிடங்களில் கொல்லைப் புறத்தில், கஸ்தூரியும் முத்தம்மாவும் காரசாரமாகப் பேசிக் கொள்வது தெளிவாகக் கேட்கவும் ஸ்டவ்வை அணைத்து விட்டு விரைந்தாள்.

"முத்தம்மா... உடம்பு சரியில்லாம எதுக்கு வந்தே? என்ன தகராறு உங்களுக்குள்ளே?"

இதற்காகவே காத்திருந்தது போல வெடித்தாள் கஸ்தூரி! "நீ எங்கேயும் அலையாதே. நா போய் வீட்டு வேலையை சட்டுன்னு முடிச்சுட்டு வர்றேன்னு படிச்சு, படிச்சு சொல்லிட்டுத்தாம்மா வந்தேன். எங்கம்மா செஞ்ச அநியாயத்தைப் பாருங்கம்மா. ஏழு வயசு சின்னப் பொண்ணுகிட்ட கைக் கொழந்தையைப் பாத்துக்கச் சொல்லி எனக்குக் கூடமாட ஒத்தாசை பண்ணப் போறேன்னு வந்திருக்கா... மனசு கேக்கலியாம் மனசு! நா முக்கியமா? கொழந்தை முக்கியமா? ஒரு மாசக் கொழந்தையை வீட்ல தனியா விட்டு... என்னத்தைச் சொல்ல..." என்று கோபத்தில் தாயைச் சாடிவிட்டு விறுவிறுவென்று வெளியேறினாள்.

உடம்புக்கு முடியாமல் இருக்கும் தாயின் சிரமத்தைக் குறைக்க வீட்டு வேலைக்கு வந்திருக்கும் மகள்; அதிக வேலையால் மகளின் பச்சை உடம்பு பாதிக்குமோ என்ற பயத்தால் காய்ச்சலோடு அவளுக்கு உதவ வந்த அம்மா ஒருவர் மீது ஒருவர் கொண்ட தீவிர அன்பும், அக்கறையும் ராதிகாவை உலுக்கின.

இதயத்தின் கடினப் பகுதியை துளைத்து இளகச் செய்த அன்பு! 'நீயும் இரண்டு பெற்றவள்தானே... பச்சை உடம்பின் பலவீனம் உனக்குத் தெரியாதா?...' உள்ளுணர்வின் கேள்வி தீயாகச் சுடுகிறது!

என்ன பதில் சொல்வாள் இவள்?

பதில் சொல்லவும் ஒரு தகுதி வேண்டுமே!

"நீ சொல்றது சரிதான்... உனக்கு உன் பொண்ணு முக்கியம். அவளுக்கு அவள் குழந்தை முக்கியம்" என்று முணுமுணுத்துக்கொண்டே முத்தம்மாவின் தூக்கு வாளியில் சுடச்சுட சாம்பார் சாதம் நிரப்பத் தொடங்கினாள் ராதிகா. இப்போது அவள் மனசில் பட்ட தீயின் வலி குறைந்திருந்தது! ●

சொல்ல விரும்புகிறோம்

◆ இளமைப் பூங்கா, இளமைத் துடிப்பின் பிறப்பிடம்!
திருச்சி - 14, ராஜேஸ்வரி.

◆ நீங்கள் எழுதியது போல் ஒரு பேனா, ஒரு போஸ்ட் கார்டு பெண்களை மேம்படுத்த காரணமாக இருந்தால் கட்டாயம் நாங்கள் எழுதிக் கொண்டே இருக்கத் தயார்!
பெங்களூர், வசந்தா கோவிந்தன்.

◆ 'லின்த்தால் டிப்ஸ் -64' அழகுக் குறிப்புகளை சிந்தாமல், சிதறாமல் அள்ளித் தந்து, மங்கையர் மனத்தில் சிக்ஸர் அடித்து விட்டீர்கள்.
பி. ஜானகி, பாளையங்கோட்டை.





ஒரு வார்த்தை!

◆ 'ஒரு வார்த்தை' எங்கள் எல்லோருக்கும் திருவார்த்தையாக இருந்தது.
சென்னை - 106, ஜி.ஆர். லலிதா.

◆ திருமண மலர், பயனுள்ள பாராட்டத்தக்க சேவை!
கிருஷ்ணகிரி, இன்பா.

◆ மலரில் வெளியாகும் செய்திகள் எல்லாமே அருமை. பெண்களே சொந்தமாகச் சிந்தித்துச் செயல்பட நல்ல தோர் மங்கையர் மலர் அமைச்சிருக்கிங்க. நான் தனியாக பியூட்டி பார்லர் அமைத்துள்ளேன். அந்த அளவுக்கு உயர்த்திய உங்களுக்கு நன்றி.
விக்கிரவாண்டி, ஷாந்தினி.

◆ மலையளவு போவது தெரியாமல் கடுகளவு போவதைத் தவிர்க்க நினைப்பவர்களுக்கு மத்தியில் பேரம் பேசலாமா கேள்விக்கு பதில் சூப்பர்!
சென்னை - 75, டி. நிர்மலா தேவி.

◆ பெண் சிசுக் கொலை முற்றிலும் ஒழிக்கப்படவில்லை என்பதற்குச் சான்றாக இருந்தது 'ஒரு குழந்தையின் குரல்!' காயம் ஆற வெகு நாளாகும்!
மடிப்பாக்கம், ஆர். புஷ்பா.

◆ வீட்டு நிர்வாகத்தைச் செவ்வனே செய்யும் பெண்களுக்கு 'எம்.பி.ஏ.' பட்டம் அளித்து கௌரவப்படுத்தியது மிகவும் பிரமாதம்.
சென்னை - 4, வி. ஜானகி.

◆ 'கொஞ்சம் சிரிப்பு; கொஞ்சம் எலும்பு' மருத்துவத் தொடர், நகைச்சுவையாக, நச் சென்று இருந்தது. டாக்டர். எம். பார்த்தசாரதிக்கும் தொகுத்தளித்த ஜி.எஸ்.எஸ்ஸுக்கும் நன்றி!
நெய்வேலி, க. ஸ்ரீகாந்த்.

◆ 'பெத்த மனசு' சிறுகதை நெஞ்சை நெகிழச் செய்தது. என்னதான் கஷ்டப்பட்டு வளர்த்தாலும் பிள்ளைகள் முடிவில் இப்படித்தான் உள்ளனர்.
கும்பகோணம், கி. ஜெயலெட்சுமி.

◆ 'பெத்த மனசு' சிறுகதை தாயின் ஏக்கத்தை விளங்க வைத்தது. தன் வினை தன்னைச் சுடும்!
சிங்காநல்லூர், புஷ்பம் செல்வராஜ்.

ஆஹா 50!

பொது விழாக்கள் மற்றும் கொலு சமயங்களில் விளக்கடியில் போடுவதற்கு ஒரு எளிய ரெடிமேட் கோலம்.

வெல்வெட் ஷீட் பல வண்ணங்களில்

ரெடிமேட் கோலம்!



கடையில் கிடைக்கும். அதை விரும்பும் டிசைன்களில் கத்திரித்து, அதன் மேல் பேப்பர் ரோஜாக்களை, முத்துக்களை, சம்கிகளை ஒட்டி அலங்கரிக்கவும்.

வேண்டிய நேரத்தில் குத்துவிளக்கைச் சுற்றி இந்த டிசைன்களை தரையில் வைக்கவும். எந்த அளவு விளக்கு என்றாலும் பொருந்தும். பயன்படுத்தியதும் பாலிதீன் கவரில் போட்டு வைத்து விட்டால் நீண்ட நாட்களுக்கு உபயோகிக்கலாம்.

- சாரதா பாபு,
திருநெல்வேலி - 2.



இம்மாத

முதல் பரிசு :
டேபிள் டாப் வெட் கிரைண்டர்
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :
சி. ராணி, திருவள்ளூர்.

பொருள் : கட்லெட்


தேவையான பொருள்கள் :

முந்திரி - 100 கிராம்,
சோயா உருண்டை - 100 கிராம்,
சம்பா கோதுமை ரவை - 1 கப்,
வெங்காயம் - 1 கப் (நறுக்கியது),
பச்சை மிளகாய் - 8 (நறுக்கியது),
சோம்புக்கீரை 1 கட்டு நறுக்கியது (அ) முளைக் கீரை, வெந்தயக்கீரை
சீஸ் துருவல் - 1 கப்,
பொடித்த சர்க்கரை - ¼ டீஸ்பூன் (அ) அன்னாசி ஜூஸ் - 1 ஸ்பூன்,
ஜவ்வரிசி - 50 கிராம், (வேக வைத்தது)
பிரட் தூள் - 1 கட்டி,
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு,
பச்சை மிளகு - 2 மேஜைக் கரண்டி (அ) கரம் மசாலா - ¼ ஸ்பூன்.

செய்முறை :

சோயா உருண்டைகளைக் கொதிக்கும் நீரில் போட்டு, பின்னர் குளிர்ந்த நீரில் கழுவிப் பிழிந்து வைக்கவும். கோதுமை ரவையை நீரில் அரைமணி ஊறவிட்டு, வடிகட்டிய பின்னர், மிக்ஸியில் சம்பா கோதுமை ரவை, உதிர்த்த சோயா உருண்டை, வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு, சீஸ் துருவல், தேங்காய்த் துருவல், ஜவ்வரிசி போன்றவற்றைப் போட்டு சற்று கரகரப்பாக, கெட்டியாக அரைத்து எடுத்த பின்னர் நறுக்கிய கீரை, பச்சை மிளகு, அன்னாசி ஜூஸ், கறிவேப்பிலை சேர்த்து பிசைந்து விருப்பமான வடிவில் கட்லெட் செய்து, ரொட்டித் தூளில் புரட்டி காய்ந்த எண்ணெயிலிட்டுப் பொரித்து சூடாகப் பரிமாறவும். சூப்பர், சூப்பர், சூப்பர் சுவைதான்!

- சி. ராணி, திருவள்ளூர்.



இல்லத்தரசி



'இம்மாத இல்லத்தரசி' போட்டிக்கு நடுவர்களாக இருந்து பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்த சென்னை, டிரஸ்ட்புரம் மாதர் சங்க வாசகிகளுக்கு நன்றி!

இரண்டாம் பரிசு ரூ. 300/

பன்னீர், பூ கட்லட்

தேவையான பொருள்கள் :

பால் - 3 கப், தயிர் - 3 கப்,
வாழைப்பூ (அரிந்தது) - 2 கப்,
கடலைப் பருப்பு - 2 கப்,
தேங்காய் (துருவியது) - 2 கப்,
மிளகாய் வற்றல் - 4,
பச்சை மிளகாய் - 2,
ஓமம் - 2 டீஸ்பூன்,
உப்பு - 2 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி - 1 டீஸ்பூன்,
சமையல் எண்ணெய் - ¼ கப்

செய்முறை :

ஒரு பாத்திரத்தில் 3 கப் பால், ஒரு டேபிள் ஸ்பூன் தயிர், ½ டீஸ்பூன் மஞ்சள் பொடி, ½ உப்பு சேர்த்து அதில் அரிந்த வாழைப் பூவைக் கலந்து, 20 நிமிடம் மித மான தீயில் வேகவிடவும். பாலும், தயிரும் கலந்து திரிந்து பன்னீர் ஆகிவிடும்.

ஊறவைத்த கடலைப் பருப்புடன் 1 டீஸ்பூன் ஓமம், 4 வற்றல் மிளகாய், ½ டீஸ்பூன் உப்பு சேர்த்து கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.

தேங்காய்த் துருவலுடன், 2 டீஸ்பூன் ஊறவைத்த கடலைப் பருப்பு, 2 பச்சை மிளகாய், 1 டீஸ்பூன் உப்பு, ½ டீஸ்பூன் மஞ்சள் பொடி சேர்த்து நைஸாக அரைத்து தனியாக வைத்துக் கொள்ள வும்.

வேகவிட்ட வாழைப்பூ - பன்னீர் கலவையை வடியவைத்து, அத்துடன்

அரைத்த கடலைப் பருப்பு கலவையைக் கலந்து தேவையான சைஸில் உருண்டைகளாகப் பிரித்து வைத்துக் கொள்ளவும்.

'நான்-ஸ்டிக் பான்'னை அடுப்பில் வைத்து, சமையல் எண்ணெயைப் பரவலாக விடவும். பன்னீர் பூ, பருப்பு கலந்த உருண்டைகளை கனமான தட்டைகளாக செய்து கொள்ளவும். அவை களை ஒவ்வொன்றாக எடுத்து பானில் வைக்கவும். பானை மூடி மிதமான தீயில் இரு பக்கமும் வேகவிடவும்.

அதே பானில் தேங்காய் கலவையை தயிருடன் கலக்கி ஊற்றவும். இரண்டு நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்கவும்.

இப்பொழுது பன்னீர், பூ கட்லட்டை தேங்காய், தயிர் சட்னியுடன் தொட்டுக் கொண்டு சாப்பிடவும்.

சுவையான இந்த கட்லட் உடலுக்குச் சுகமானதும் கூட.

- கிரிஜா வைத்தியநாதன்,
சென்னை - 10.



• எஸ். மீனாக்ஷி



• சங்கரி விஸ்வநாதன்

மூன்றாம் பரிசு
ரூ. 200/-

முத்து கட்லெட்

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி - 1 கப்,
அவல் - ½ கப்,
ரவை - ½ கப்,
வேகவைத்த உருளைக்கிழங்கு - 2 (உதிர்த்துக் கொள்ளவும்)
பிரட் - 4 ஸ்லைஸ்,
பெருங்காயப் பவுடர் - 1 ஸ்பூன்,
மஞ்சள் பொடி - 1 ஸ்பூன்,
காரப் பொடி, உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - 100 கிராம்.

செய்முறை : ஜவ்வரிசி, அவல், ரவையை தனித்தனியாக 10 நிமிடம் தண்ணீரில் ஊறவைக்கவும். ரவை தண்ணீரை இழுத்து கொண்டு விடும். ஜவ்வரிசி, அவலை நன்றாகப் பிழிந்து ரவையோடு சேர்த்து வாய் அகன்ற பாத்திரத்தில் போட்டு அதோடு உதிர்த்து வைத்துள்ள உருளைக்கிழங்கு, மஞ்சள் பொடி, பெருங்காயப் பவுடர், தேவையான அளவு, காரப் பொடி, உப்பு சேர்த்து நன்றாகப் பிசைந்து கொண்டு விரும்பிய வடிவத்தில் கட்லெட்டை செய்து, தூளாக்கி வைத்துள்ள பிரட்டில் நன்றாகப் பிரட்டி, தோசைக்கல்லில் போட்டு சுற்றி எண்ணெய் ஊற்றி மூடிவைத்து எடுக்கவும். மறுபுறமும் இதே போல் செய்யவும். ஜவ்வரிசி முத்து முத்தாகத் தெரியும். ருசியாகவும் இருக்கும்.

- சங்கரி விஸ்வநாதன்,
கும்பகோணம்.

ஆறுதல் பரிசு
ரூ. 100/-

மேக்ரோனி சீஸ் உருளை கட்லெட்

தேவையான பொருள்கள் :

மேக்ரோனி - 2 கப்,
மைதா - 1 கப்,
ப. மிளகாய் - 6 (பொடியாக நறுக்கியது),
உருளைக்கிழங்கு - 3 (வேகவைத்து மசித்தது),
வெண்ணெய் - 100 கிராம்,
பால் - 2 கப்,
வெங்காயம் - 2 (பொடியாக நறுக்கியது),


Teddyy
A quality product from Noble Hygiene Pvt.Ltd. Goa

சீஸ் - ½ கப் (துருவியது),
ரஸ்க் தூள் (அ) உலர்ந்த பிரட் தூள் - 2 கப்,
உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை : வாயகன்ற பாத்திரத்தில் நீர் வைத்து உப்பு சேர்த்து கொதிக்க வைத்து அதில் மேக்ரோனியைப் போட்டு, மிருதுவாக வரும் வரை வேகவைக்க வேண்டும்.

அடிகனமான பாத்திரத்தில் வெண்ணெய் உருக்கி சலித்த மைதா மாவை, சிறிது சிறிதாக வெண்ணெயில் போட்டு கைவிடாமல் வறுத்து, பின் கொஞ்சம் கொஞ்சமாகப் பால் விட்டு இறக்கி விடுங்கள்.

இதில் மேக்ரோனி, உப்பு, வெங்காயம், மசித்த உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய் ஆகியவற்றைக் கலந்து சீஸையும் சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டவும். அதை தேவையான வடிவத்தில் செய்து ரஸ்க் தூளில் புரட்டி எண்ணெயில் பொரித்து பொன்னிறமாக எடுக்கவும். சுவையும், மணமும் கூடுதலாக இருக்கும்.

- எஸ். மீனாக்ஷி, வேலூர்.



• தாரா



• கிரிஜா



• சி. ராணி

ஆறுதல் பரிசு ரூ. 100/-

கருணை கட்லெட்

கருணைக் கிழங்கு - ½ கிலோ,
பெரிய வெங்காயம் - 1,
சோயா மாவு - கப்,
அரிசி மாவு - ½ கப்,
ஆய்ந்த முருங்கைக்கீரை - 1 பிடி,
உப்புத் தூள் - ருசிக்கேற்ப,
மசாலா தூள் - ¼ ஸ்பூன்,
மிளகாய்த் தூள் - ½ ஸ்பூன்
எண்ணெய் - பொரிக்க.
அலங்கரிப்பதற்கு வெங்காயம், தக்காளி.

செய்முறை :

கருணைக்கிழங்கை வேக விடவும். தோலை உரித்து நன்கு மசித்து வைக்கவும். வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் சீரகத்தைப் போட்டு வறுத்த பிறகு வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும். அதனுடன் முருங்கை இலை (அல்லது விரும்பிய கீரையை) சேர்த்து நன்கு வதக்கவும்.


வதக்கிய வெங்காயம், கீரையை, மசித்து வைத்துள்ள கருணையுடன் சேர்த்து நன்கு கலக்கவும். உப்புத் தூள், மசாலாத் தூள், மிளகாய்த் தூள் சேர்த்துக் கலக்கவும்.

சோயா மாவையும், அரிசி மாவையும் ஒன்றாகச் சேர்த்து பஜ்ஜி மாவு பதத்தில் கரைத்து வைக்கவும்.

இப்போது கருணை கலவையை விரும்பிய வடிவில் செய்து சோயா கலவையில் தோய்த்து தோசைக் கல்லில் இட்டு பொரிக்கவும்.

தொட்டுக் கொள்வதற்கு புதினா சாஸ், சில்லி சாஸ், தக்காளி சாஸ் எல்லாம் நன்றாக இருக்கும். மூலவியாதிக்காரர்களுக்கு கருணைக் கிழங்கு நன்மை பயக்கும். சோயா மாவு சத்தானது. இந்த கட்லெட் சத்தானது, சுவையானதும் கூட.

- கோவை தாரா, கோவை.







விய வருஷம் வைகாசி 18ம் தேதி
முதல் ஆனி 16ம் தேதி வரை
(1.6.2006 முதல் 30.6.2006 வரை)

ரா		சுக்	சூரி
	1.7.2006 அன்று உள்ள கிரக நிலை (திருக்கணித பஞ்சாங்கபடி)		பு சனி செ
			சந்
		குரு	கேது

இந்த மாத கிரக நிலை மாற்றங்கள்

13.7.2006 - சிம்ம செவ்வாய்
14.7.2006 - மிதுன சுக்ரன்
16.7.2006 - கடக ரவி (சூரியன்)
20.7.2006 - மிதுன புதன்

இந்த மாதம் எப்படி?



மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கார்த்திகை, 1-ம் பாதம்

மென்மேலும் வளரத் துடிக்கும் ஊக்கம் கொண்ட மேஷ ராசி நேயர்களே! வாக்கினால் வளமும் நலமும் சேரும். கணவன் மனைவியிடையே உறவு பூத்துக் குலுங்கும். வீட்டில் விருந்து விசேஷம் என மகிழ்ச்சி பெருகும். புதிய தொழில் துவங்க வாய்ப்புகள் கூடும். பங்குவர்த்தகம் புரிவோர் மிக்க கவனமுடன் செயல்படவும். குலதெய்வம் மற்றும் இஷ்ட தெய்வத்துக்கு பூஜை போட நேரும். உமது பிரார்த்தனைக்கு கை மேல் பலனுண்டு. வீடு, மனை, பூமி மீதிருந்த கடன் அகலும். கவலை விலகும். 7.7.2006 காலை முதல் 9.7.2006 மாலை வரை சந்திராஷ்டமம். புதிய முயற்சிகளில் கவனம் தேவை.

பரிகாரம் : ஸ்ரீதேவி கருமாரியம்மனை வழிபட நன்று. தினசரி விநாயகரை வணங்கி பணி தொடரவும்.

ரிஷப ராசி :

கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோஹிணி, மிருக சீரிஷம் 1, 2-ம் பாதம்.

இளகிய மனம் கொண்ட ரிஷப ராசி நேயர்களே! எண்ணம் ஈடேறும். ஏற்றம் பெருகும். திடீர் தனவரவுக்கு இடமுண்டு. கடன் தீரும். புதிய முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் விலகும். அரசு வழி



அனுகூலங்கள் தேடி வரும். தொழில் வளம் பெருகும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ், சிவில் இன்ஜினியரிங் போன்ற பிரிவினர் மிகுந்த அனுகூலம் பெற வாய்ப்புள்ளது. 9.7.2006 மாலை முதல் 11.7.2006 மாலை வரை சந்திராஷ்டமம்.

கவனம் தேவை. பிரயாணத்தில் பணம் பத்திரம்.

பரிகாரம் : மஹாலக்ஷ்மியை வழிபடவும். மஹாலக்ஷ்மி ஸதநாம ஸ்தோத்திரம் பாராயணம் செய்க.

மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதங்கள்.


மிதமான போக்குடைய மிதுன ராசி நேயர்களே! அச்சம் விலகும். ஆற்றல் கூடும். தொட்டது துலங்கும். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் தீரும். செய்தொழிலில் எதுவானாலும் பரபரப்புடன் செயல்பட நேரும். சிலர் வெளிநாடு செல்ல வாய்ப்பு கிட்டும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. உத்தியோக பிரிவினர் பதவி உயர்வு பெறுவர். மாணவர்கள் உயர்கல்வி மற்றும் ஆய்வு கல்விக்கு இடமுண்டு. யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். 11.7.2006 மாலை முதல் 13.7.2006 முன்னிரவு வரை சந்திராஷ்டமம்.

பரிகாரம் : தினசரி காயத்ரி ஜெபமும் சூரிய நமஸ்காரமும் அவசியம். மஹாவிஷ்ணுவை வழிபடவும்.

கடக ராசி :

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

காரியத்தில் கண்ணாக இருக்கும் கடக ராசி நேயர்களே! செலவுகள் பெருகும். சேமிப்பு கரையும். பிரயாணம் மூலம் தொழில்புரிவோர் ஏற்றம் பெறுவர். கடினமாக உழைக்கவும் களிப்புடன் வாழவும் முடியும். இறையருள் துணை நிற்கும். வீடு, வண்டி, வாகனம் வாங்க நேரும். கணவன் மனைவி இடையில் அவ்வப் போது புயலும்,



டாக்டர் முருகடிமை துரைராஜ்



டிபன் பாக்ஸ் திறக்கமாட்டேன் என அடம்பிடிக்கிறதா? குழாய்த் தண்ணீரைத் திறந்து, சிறிது நேரம் டிபன்பாக்ஸைப் பிடியுங்கள். 'சட்' என்று திறந்து விடலாம்.
- வி.எஸ்., பெங்களூர்.

தென்றலும் மாறி மாறி வீசும். ஏற்றுமதி இறக்குமதி வணிகப் பிரிவினர் ஏற்றம் பெறுவர். சிலர் திடீரென காதல் மணம் புரிய நேரும். ரியல் எஸ்டேட், சிவில் காண்டராக்ட் போன்றவர்கள் மிகுந்த அனுகூலம் அடைவர். 13.7.2006 முன்னிரவு முதல் 15.7.2006 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். புதிய முடிவுகள் எடுப்பதில் பதற்றம் தவிர்க்கவும்.

பரிகாரம் : மாதா புவனேஸ்வரியை வழிபடவும். "ஜெய ஜெய புவனேஸ்வரி" என ஜெபிக்கவும்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்.

சிந்தனைவளம் கொண்ட சிம்ம ராசி நேயர்களே! உமது கனவுகள் நனவாகும் நேரமிது! எதிரிகள் விலகவும், புதிய நண்பர்கள் சேர்வர். அரசு வழி ஆதாயம் பெருகும். வழக்குகளில் திருப்புமுனை உண்டாகும். நீங்கள் சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். செய் தொழிலில் நல்ல முன்னேற்றம் கிட்டும். உத்தியோகப் பிரிவினர் எதிர்பார்த்த பதவி உயர்வு பெறுவர். கருவுற்ற தாய்மார்கள் தங்கள் மருத்துவப் பராமரிப்பில் மிக கவனம் தேவை. இன்ஜினியரிங், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் பயில்வோர் எண்ணம் ஈடேறும். 15.7.2006 முன்னிரவு முதல் 17.7.2006 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம்.

பரிகாரம் : 'ஓம் நமசிவாய' என ஓதவும். பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4-ம் பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்.

கலங்காத மனம் கொண்ட கன்னிராசி நேயர்களே! சரளமான பணப்புழக்கம் உண்டாகும். வாக்கினால் வளமும் நலமும் சேரும். தொழில் வளம் பெருகும். தொல்லைகள் விலகும். சிலர் தொழில் நிமித்தம் வெளியூர் (அ) வெளிநாடு செல்ல நேரும். உடல்நலனில் கவனம் தேவை. குறிப்பாக உணவு விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாடு தேவை. பெண்கள் பிறந்த வீட்டின் மூலம் சுக சௌகர்யங்களைப் பெருக்கிக் கொள்வர். பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ இடம் உண்டு. மாணவர்கள் விரும்பிய பிரிவில் சேர்ந்து படிப்பர். 17.7.2006 நள்ளிரவு முதல் 19.7.2006 பின்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : யோக நரசிம்மரை மனமுருக வழிபடவும்.

துலாம் ராசி :

சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்.

துன்பம் கண்டு கலங்காத குண முடைய துலாம் ராசி நேயர்களே! யோகங்கள் தேடி வரும் நேரமிது. எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேறும். கணவன் - மனைவி உறவு மகிழ்ச்சியில் திளைக்கும். புதுமனை புகுவிழா நடத்த ஆயத்தம் ஆகலாம். தந்தை மூலம் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். வியாபாரம் பெருகவும் தொழில்வளம் கூடவும் வாய்ப்புண்டு. அரசுக்கு செலுத்த வேண்டிய பாக்கிகளைச் செலுத்தி விடவும். காதல் திருமணம் நடக்கும். ஸ்தல யாத்திரை செல்ல நேரும். எதிர்பாராத தனவரவுக்கு இடமுண்டு. 19.7.2006 பின்னிரவு முதல் 22.7.2006 காலை வரை சந்திராஷ்டமம்.

புதிய முயற்சிகளில் பதற்றம் தவிர்க்கவும்.

பரிகாரம் : மஹாலக்ஷ்மியை வழிபடவும். மேலும் வெள்ளி, செவ்வாய் கிழமை ராகு காலத்தில் துர்க்கை அம்மனை தீபம் ஏற்றி வழிபடவும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

விவேகமாகச் செயல்பட்டு வெற்றியைக் குவிக்கும் இயல்புடைய விருச்சிக ராசி நேயர்களே! கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். கண் சம்பந்தமான நோய் விலகும். குடும்பத்தில் சுபச் செலவுகள் வந்த வண்ணம் இருக்கும். தெய்விகப் பிரார்த்தனைகள் பலிக்கும். உமது மகன் (அ) மகள் திருமணம் நடக்கும். கருவுற்றுள்ள தாய்மார்கள் மருத்துவப் பராமரிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவும். தந்தையுடன் கருத்தொற்றுமை அவசியம். பி.பி.ஏ., எம்.பி.ஏ., இன்ஜினியரிங், மருத்துவம் பயில்வோர் ஏற்றம் பெறுவர். 22.7.2006 காலை முதல் 24.7.2006 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி செவ்வாய், தேவி கருமாரியம்மனை வழிபடவும்.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

தங்கமான மனம் படைத்த தனுசு ராசி நேயர்களே! நீண்ட கால கனவுகள் நனவாகும். மூதாதையர் சொத்தில் இருந்து வந்த சிக்கல் தீரும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நலம். வியாபாரிகள் புதிய முதலீடுகள் செய்வதில் அவசரம் காட்ட வேண்டாம். உத்தியோகப் பிரிவினர், கடமையில் கவனமாக இருக்கவும். உயரதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். கிடப்பில் போட்ட விஷயம் மிகவும் எளிதாக முடியும். எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ் போன்ற பிரிவினர் நல்ல முன்னேற்றம் அடைவர். 24.7.2006 முன்னிரவு முதல் 27.7.2006 அதிகாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : தக்ஷிணாமூர்த்தியை மஞ்சள் வண்ண மலர் கொண்டு வழிபடவும்.

பருப்பு உசிலி செய்யும் போது ஊறவைத்த பருப்பு, மிளகாய், உப்பு, பெருங்காயம் சேர்த்து அரைத்த கலவையில் 2 ஸ்பூன் எண்ணெய் சேர்த்துக் கலந்து பின் ஆவியில் வேகவைத்து எடுத்து ஆறியபின் உதிர்த்தால் நன்கு உதிர்க்க வரும்.

- ஆர். சீதாலக்ஷ்மி, சென்னை - 89.



மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

மனத்தில் பட்டதை ஒளிவுமறைவின்றி பேசும் இயல்புடைய மகர ராசி நேயர்களே! எதிர்பாராத பணவரவுகளுக்கு இடம் உண்டு. கணவன் மனைவி இடையில் கருத்தொற்றுமை அவசியம். பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ வாய்ப்பு உள்ளது. புதிய முதலீடு செய்வதில் பதற்றம் தவிர்த்தல் நலம்.

உத்தியோகப்பிரிவினர் இடமாறுதல் பெறுவர். வீடு, மனை, வண்டி, வாகனம் வாங்க வாய்ப்புள்ளது. சிலர் புதிய வீட்டில் குடியேறுவர். சிவில் சர்வீஸ் தேர்வு எழுதத் தயார் நிலையிலுள்ளோர் வெற்றிக்கு வித்திடுவர். 27.7.2006 அதிகாலை முதல் 29.7.2006 மாலை வரை சந்திராஷ்டமம்.

பரிகாரம் : பிரதி சனிக்கிழமை வெங்கடாஜலபதியை வழிபடவும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்

சேவை மனோபாவம் கொண்ட கும்ப ராசி நேயர்களே! கடன் தீரும்! கவலைகள் விலகும். வேலைப்பளு கூடும். வருமானம் கூடினாலும் செலவுகளும் சேர்ந்த வண்ணம் இருக்கும். வீடு மாற்றம், வண்டி, வாகன வசதிகளில் மாற்றம் என உண்டாகும். விருந்து, விசேஷம், உல்லாசம் என மகிழ்ச்சியில் திளைக்கலாம். பெண்களால் வாழ்வில் நலம் கூடும். ரியல் எஸ்டேட், சிவில் காண்ட்ராக்ட் போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர். யாருக்கும் ஜாமீன் தர வேண்டாம். உத்தியோகப் பிரிவினர் உயரதிகாரிகளிடம் மிகவும் பக்குவமாக நடந்து கொள்ளவும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தவும். 2.7.2006 காலை முதல் 4.7.2006 நள்ளிரவு வரை மற்றும் 29.7.2006 மாலை முதல் 3.8.2006 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : இஷ்டதெய்வம் (அ) குலதெய்வத்தை மனமுருக வழிபடவும். குருவருளை நாடினால் நலம் கூடும்.

மீன ராசி :

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

வெள்ளை மனம் கொண்ட மீனராசி நேயர்களே! சரளமான பணப்புழக்கம் உண்டாகும். வீடு, மனை, பூமி வாங்கும் யோகம் உண்டு. அரசு வழியில் நிலவிய வழக்குகளில் வெற்றி கிட்டும். சிலர் வெளி நாடு செல்ல வாய்ப்பு கிட்டும். வாய் மொழியாக பெற்ற கடன்கள் அனைத்தும் தீரும். கணவன் - மனைவி இடையில் கருத்தொற்றுமை தேவை. யாருக்கும் ஜாமீன் தர வேண்டாம். செய்தொழில் எதுவானாலும் அதில் வளர்ச்சி கிட்டும். அஷ்டம குரு என்ற அச்சம் வேண்டாம். பெண்கள் பிறந்த வீட்டு சுக சௌக்யங் களை அனுபவிப்பர். மாணவர்கள் சிறந்த நிலை பெறுவர். 4.7.2006 நள்ளிரவு முதல் 7.7.2006 காலை வரை சந்திராஷ்டமம் கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி வியாழன், தக்ஷிணா மூர்த்தியை மஞ்சள் நிற மலர்களால் அர்ச்சித்து வணங்கவும்.



உப்புக்கு நடுவில் எலுமிச்சம் பழங்களை அமிழ்த்தி வைத்தால் ஒரு வாரம் வரைக்கும் எலுமிச்சம் பழம் பசுமையாகவே இருக்கும்.
- சாந்தி சேகர், திருவள்ளூர்.

வீட்டின் ஜன்னலுக்கு அருகே துளசிச் செடி வளரும்படி செய்தால் வீட்டிற்குள் கொசு வராது.
- சி. கஸ்தூரி, சேலம்.



சுய தொழில்



தமிழ்நாட்டில் உள்ள பனைமரங்களின் எண்ணிக்கை எவ்வளவு? இந்தக் கேள்வியை நம்மிடம் - வினாடி வினா நிகழ்ச்சிகளில் கூட யாரும் கேட்கப் போவதில்லை. எனவே, 'சுமார் ஆறு கோடி' என்ற பதிலைத் தெரிந்து கொள்வதில் பயனிருக்காது.

ஆனால் இது தொடர்பான பயனுள்ள வேறொரு தகவல் உண்டு. 'கருப்பட்டி தின்னக் கூலியும் உண்டு.' அதாவது பனைப்பொருள்கள் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சியை இலவசமாக அளிக்கிறது மத்திய அரசு. கூடவே பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை வேறு!

கருப்பட்டி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பதநீர் என்று பனைமரத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்கள் ஏராளம். பனை ஓலை குடிசைகளுக்குத்

பனை அளிக்கும் பம்பர் பரிசு!

தேவை. பனம்தொம்பிலிருந்து (வீட்டு டாய்லெட்டிலிருந்து தெரு வரை சுத்தம் செய்யும்) ப்ரஷ்கள். பனைமட்டையிலிருந்து பெறப்படும் நார் ஓர் உறுதியான இணைக்கும் பொருள்.





மேற்படி பனைப் பொருள்களைத் தயாரிக்கும் மற்றும் உருவாக்கும் வித்தைகளைச் சொல்லிக் கொடுக்கிறது சென்னை மாதவரத்தில் உள்ள மத்திய பனை வெல்லம் மற்றும் பனைப் பொருள்கள் பயிற்சி நிலையம்.

இந்தியாவிலேயே இப்படிச் செயல்படும் ஓரே நிறுவனம் இது தான் என்பதைக் கேள்விப்பட்டதும் அங்கு புறப்பட்டுச் சென்றோம். பயிற்சிகள்

குறித்து நாம் பெற்ற முக்கிய தகவல்கள் இதோ.

பதினெட்டிலிருந்து முப்பத்தைந்து வயதுக்காரர்கள் இப் பயிற்சிகளில் கலந்து கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. பனைப் பொருள் தொழில்நுட்ப பயிற்சிக்கான காலம் 4 மாதங்களே. இதில் சேர எஸ்.எஸ்.எல்.சி. முடித்திருக்க வேண்டும். பனைதும்பு, பிரஷ் தயாரிப்புப் பயிற்சி இரண்டு மாதங்களுக்கானது. பனை ஓலைப் பொருட்கள் பயிற்சிக் காலமும் இரண்டு மாதங்கள்தான். இந்த இரு பயிற்சிகளிலும் சேர எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இங்குள்ள விடுதியில் தங்கி இப் பயிற்சிகளைப் பெறுபவர்களுக்கு 700 ரூபாயும், வெளியிலிருந்து பயிற்சி பெறுபவருக்கு 250 ரூபாயும் வழங்கப்படுகிறது.

"கேட்க நல்லாத்தான் இருக்கு. ஆனா நாம எங்க சென்னைக்குப் போய்த் தங்கிப் பயிற்சி எடுத்துக்க முடியும்!'' என்று வெளியூர்ப் பெண்கள் பெருமூச்சு விட வேண்டாம். உங்கள் பகுதியில் பயிற்சியில் ஆர்வமுள்ள பத்து பேர்களைச் சேருங்கள். நிறுவனத்திலிருந்து வந்து பயிற்சி அளிப்பார்கள்.

"ஏற்கெனவே கொடைக்கானல், சேலம், விழுப்புரம், கழுகுமலை ஆகிய பகுதிகளில் இதுபோன்ற பயிற்சிகளை அளித்திருக்கிறோம். பயிற்சி







மணத்தக்காளி வத்தல் பொடி

எண்ணெயே விடாமல் செய்யும் இப் பொடி வலிமையும், குளுமையும் கொடுக்கக்கூடியது. 1 டீஸ்பூன் கடுகு, 3 டீஸ்பூன் ஓமம், 6 டீஸ்பூன் உளுத்தம் பருப்பு, 2 டீஸ்பூன் மிளகு, 2 டீஸ்பூன் சீரகம், சிறிய துண்டு பெருங்காயம் இவற்றை வாணலியில் போட்டு கடுகு, மிளகு வெடிக்கும் வரை வறுத்துக் கொள்ளவும். 1 கப் மணத்தக்காளி வற்றலை வெடிக்கும் வரை வறுத்துக் கொள்ளவும். வறுத்த சாமான்கள் எல்லாவற்றையும் மிக்ஸியில் போட்டு, தேவையான உப்பும் சேர்த்து பொடி பண்ணி வைத்துக் கொள்ளவும். வாய்ப்புண், வயிற்றுப் புண்ணுக்கு உகந்த இப் பொடி ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

- கிரிஜா ராகவன், கோவை.

முடித்தவுடன் மத்திய அரசின் சான்றிதழ் கிடைக்கிறது என்பதோடு கிராமப்புற வேலை வாய்ப்பு முன்னேற்ற திட்டத்தின் கீழ் 25 சதவீத மானியத்தோடு கடன் பெறவும் வசதி உள்ளது" என்றார் பயிற்சி தொடர்பான பல விவரங்களையும் நமக்கு அளித்த மேற்படி நிறுவனத்தின் உதவி இயக்குனரான சுபாஷ் சந்திரபோஸ்.

பனைப்பொருள்களுக்கு நல்ல டிமாண்ட்! அதுவும் ஏற்றுமதி ஆர்டர்களெல்லாம் நிறைய உண்டாம். பனஞ்சீனி வாங்கும் நபர்கள் குறைவுதான் (கிலோ 140 ரூபாய்). ஆனால் இதில் உள்ள மருத்துவக் குணம் காரணமாக மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் நிறைய வாங்குகின்றன.

தமிழகத்தில் நான்கு மகளிர் கூட்டுறவு சங்கங்கள் இதில் முன்னணியில் உள்ளன. மணப்பாடு பெண்கள் கூட்டுறவு சங்கம், புலிக்காட் பெண்கள் கூட்டுறவு சங்கம், வேலூரில் உள்ள 'ஷேர்' என்னும் என்.ஜி.ஓ. அமைப்பு (ஆண்டுக்கு சுமார் ஐந்து கோடி ரூபாய்க்கான பனைப் பொருள் ஏற்றுமதியை செய்கிறது இது) மற்றும் திருவண்ணாமலையிலுள்ள சாந்திமலர் ட்ரஸ்ட்.

சொல்ல வேண்டியது இன்னும் ஒன்று உண்டு. பனை ஓலையில் வாழ்த்து அட்டைகளும், விசிட்டிங் கார்டுகளும் கூட செய்யப்படுகின்றன. "சுயதொழில் செய்ய எங்கள் பக்கமாகவும் பார்வையைத் திருப்புங்கள்" என்று பனைப் பொருள்கள் மகளிருக்கு நீட்டும் விசிட்டிங் கார்ட் இது!

- ஜி.எஸ்.எஸ்.



வாஷிங் மெஷினில் குழந்தைகள் துணிகளைத் துவைக்கும் போது, இரண்டு மூடி டெட்டாலை சொட்டு நீலம் ஊற்றும் பகுதியில் ஊற்றி விட்டால், துணிகளைத் துவைத்து விட்டு, கடைசியில் தண்ணீருடன் டெட்டாலைக் கலந்து தானே அலசிவிடும்!

- நஸிஹா ஹஃபீஸ், கீழக்கரை.

IRCTC


Operators
Travel Times India P Ltd
Chennai



• சிவபிரசாத்

இந்தியாவில் இருக்கிற, பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்களை மறந்து விட்டு, 'பாங்காக் பார்க்கணும்... பட்டாயா போகணும்...' என்று நினைத்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சு விடுபவர்களை, ''குலு-மணாலி பாருங்கள், எலிஃபெண்டா பாருங்கள், எல்லோரா பாருங்கள்...'' என்று கையைப் பிடித்து அழைத்துப் போகக் காத்திருக்கிறது டிராவல் டைம்ஸ் நிறுவனமும் இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

"இதற்கு பாரத் தர்ஷன் டூரிஸ்ட் ரயில் என்று பெயர். சென்ற வருடம் மே மாதமும், ஜூன் மாதமும் இரண்டு பயணங்கள் முடித்தோம். படுக்கை வசதி கொண்ட ஏழு



இந்தியாவைச்

பெட்டிகள் இதற்காக என்றே இந்தியன் ரயில்வேயால் எங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு சுற்றுலா மேலாளர் இருப்பார். ஒரு பாது காப்பு மேலாளர் இருப்பார். புகைப்படங்கள் எடுத்துக் கொடுக்க, புகைப்படக் கலைஞரும் வருவார்! காலை ஆகாரம், மதிய உணவு, இரவு உணவு எல்லாம் நாங்களே அழைத்துச் செல்லும் சமையல் கலைஞர்கள் தயாரித்து வழங்குவார்கள். முழு சைவ உணவு. நீங்கள் தனியே சென்றால் பயணத்துக்கும், சுற்றுலாவுக்கும், தங்குமிடங்களுக்கும் நிச்சயம் அதிகச் செலவுதான் ஆகும். நாங்கள் ஒரு குழுவாக சுமார் ஐந்நூறு பயணிகளை அழைத்துச் செல்லும்போது செலவு அதிகம் ஆவதில்லை. 16 நாள் சுற்றுப் பயணம் என்றால், சராசரியாக ஒருநாளைக்கு 500 ரூபாய்தான் எல்லாவற்றுக்கும் சேர்த்து ஆகிறது!" என்கிறார் டிராவல் டைம்ஸ் அதிகாரி சிவபிரசாத்.







வருடத்தில் இரண்டு அல்லது மூன்று முறைகளே செல்லும் இந்தப் புதிய பயண வசதியை, ஆண்டு முழுவதுக்கும் ஏற்பாடு செய்யும் எண்ணம் இரயில்வே துறைக்கும் இருக்கிறதாம். வங்கிகளுடன் தொடர்பு கொண்டு, மாதாந்திரத் தவணை முறை

சுற்றிப் பாருங்கள்!



• "நல்லபடியா கிளம்பு ராஜா"

ஓம்காரேஷ்வர் என்று சுவாரசியமான சுற்றுலாவுக்குத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். மொத்தச் செலவே 11,000 ரூபாய்தான். இரயில் கட்டணம், தங்கும் வசதி, உணவு, ஊரைச் சுற்றிப் பார்த்தல் - எல்லாமே இதில் அடங்குகிறது.

"சுமார் 150 கீழ் பெர்த்துகள்தான் இருக்கின்றன. அதனால் அதிக வயதானவர்கள் முன்னதாகவே பதிவுசெய்து கொண்டால் அவர்களுக்கு நல்லது. இல்லையென்றால் பிறகு இருக்கவே இருக்கிறது அட்ஜஸ்ட்மென்ட்!" என்கிறார் சிவபிரசாத்.

ரயில்வே அமைச்சர் லாலுபிரசாத்தின் திட்டம் என்றால் அதில் மத்தியதர மக்களின் நலன் மேலோங்கித்தான் இருக்கும்!

"எங்கள் அனுபவத்தையும், சேவையையும் பார்த்து விட்டு எங்களுக்கு இந்த வாய்ப்பை நிர்வாகம் அளித்திருக்கிறது!" என்கிறார் சிவபிரசாத்.

யில் கட்டணத்தைச் செலுத்தும் வசதிக்கும் வழிவகை மேற்கொள்ளப்படுமாம்.

விண்ணப்பத் தாளுடன் இரண்டு புகைப்படங்கள் அவசியம் கொடுக்க வேண்டும். (ஒரு புகைப்படத்தை அடையாள அட்டை தயாரித்துக் கொடுக்கப் பயன்படுத்துகிறார்கள்.)

ஜூலை மாதத்தில் ஹைதராபாத் - எல்லோரா - நாசிக் - மந்த்ராலயம் என்று சுமார் ஒரு டஜன் தலங்களுக்கு ஓர் யாத்திரை திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி, 21 நாட்களுக்கு, திருப்பதி, காளஹஸ்தி, பண்டரிபூர், ஷீரடி, நாசிக், திரயம்பகேசுவர், மும்பை, ஆமதாபாத், தாக்கோர் துவாரகா, சோம்நாத், துவாரகா, அபுமலை உதய்பூர், நாத்துவாரா, காங்க்ரோலி, அஜ்மீர், புஷ்கர், ஜெய்ப்பூர், உஜ்ஜயின்.

சிவபிரசாத், மறைந்த திரைப்பட இயக்குனர் கே. சங்கரின் புதல்வர். ஆன்மிகத்தில் திளைத்தவர். "பல முறை கைலாஷ்-மானசரோவருக்குச் சென்று வந்திருக்கிறேன்!" என்று அடக்கமாகச் சொல்லிக் கொள்பவர்.

"பயணிகளின் வசதியும், திருப்தியும் மட்டுமே எங்கள் குறிக்கோள்! உங்கள் பெற்றோர்களுக்கும் தாத்தா, பாட்டிகளுக்கும் தருவதற்கு ஏற்ற ஒரு சிறந்தப் பரிசு!" என்கிறார் சிவபிரசாத்.

என்ன, ரெடியா இந்தியாவைச் சுற்றிப் பார்க்க?

ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஏற்பாடு ஆகும் சுற்றுலா விவரங்களுக்கு 28461213, 2846113.

- சாருகேசி



செய்தித்தாள் படிக்கும்போது பேனாவுடன் ஒரு நோட் புக்கை வைத்துக் கொண்டால், முக்கிய விஷயங்களைக் குறிப்பெடுக்கலாம். தேவைப்பட்ட விளம்பரங்களை உடனே கத்திரித்து ஒட்டிக் கொள்ளலாம்.
- எஸ். மாலதி, திருச்சி.

எங்கள் வீட்டு அரிசி மூட்டையில் களம்பூர் பாலாஜி ரைஸ்மில்காரர்கள் அரிசியை எப்படி ஊறவைத்து சமைக்கணும் என்ற குறிப்பை ஒரு அட்டையில் அச்சிட்டு மூட்டை உள்ளேயே வைத்து அனுப்புகிறார்கள். அத்துடன் 'சிந்தனைக்கு' என்று கீழ்க்காணும் செய்திகளை தெரிவிக்கிறார்கள்.

1. மிக மிக நல்ல நாள் - இன்று
2. மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு.

சிந்திக்க—14!



3. மிகவும் வேண்டாதது - வெறுப்பு
4. மிகக் கொடிய நோய் - பேராசை
5. மிகப் பெரிய தேவை - சமயோஜித புத்தி
6. மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
7. கீழ்த்தரமான விஷயம் - பொறாமைப்படுதல்
8. நம்பக் கூடாதது - வதந்திகளை
9. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
10. செய்யக் கூடாதது - உபதேசம்
11. செய்ய வேண்டியது - உதவி
12. விலக்க வேண்டியது - விவாதம்
13. உயர்வுக்கு வழி - உழைப்பு
14. நழுவ விடக்கூடாது - வாய்ப்புகள்

- வி. கலைவாணி, வேலூர்.

பட்டினி ஃபேஷனும் பித்தக்கல்லும்!

இப்ப எல்லாம் யாரைப் பார்த்தாலும், "பித்தப் பையிலே கல் இருக்கு. டாக்டர் ஆபரேஷன் பண்ணணும்னு சொல்றாரு" என்று என்னவோ, "எங்க வீட்டு பீரோ லாக்கரிலே நிறைய ரத்தினக் கற்கள் இருக்கு"ன்னு பெருமையா சொல்ற மாதிரி பேசறது அதிகமாயிடுச்சு! "பித்தக் கற்கள் பற்றி சொல்லுங்க டாக்டர்" என்று சென்னை, ஜி.என் சாலையில் உள்ள லேஸர் அண்ட் லேபரோஸ்கோப் மருத்துவமனையின் மருத்துவர் எஸ். அஷோக்கை கேட்டபோது...



"பித்தக் கற்கள் பற்றித் தெரிந்து கொள்ளும் முன், பித்த நீர், பித்தப் பையைப் பற்றியும் தெரிந்து கொள்வது நலம்" என்று ஆரம்பித்தார்.

"இரைப்பையில் கூட்டித் தள்ளப்படும் உணவுக் கூழ் முதலில் முன் சிறு குடலுக்குள் நுழைந்து, தலையைக் காட்டுகிறது. இங்கேதான் செரிமானமும் செரிக்கப்பட்ட உணவிலிருந்து சத்துப் பொருள்கள் உறிஞ்சப்படுவதும் நிகழ்கின்றன.

இந்த செரிமான நிகழ்ச்சிக்காக என்றே, சில சிறப்புச் செரிமான நீர்கள், குடலுக்குள் சுரக்கின்றன. ஆனால் மேலும் மேலும் கடினமான, கொழுப்புமிக்க பொருள்கள் ஒரேயடியாக வந்து விழும்போது, செரிமான நீர்கள், "ஸாரி, எங்களால் முடியாது!" என்று காலை வாரி விட்டு விடுகின்றன.

'உடனே பித்த நீரை அனுப்பி வைக்கவும்' என்று ஈமெயில் ஒன்று கல்லீரலுக்கு அனுப்பப்படுகிறது. சிறுகுடலின் நரம்பு வழியாக, இந்தச் செய்தி கிடைத்ததும், கல்லீரல் உடனே பித்தநீரை அனுப்பி வைக்கிறது.

இந்த பித்த நீர், சிறு குடலுக்குப் போய், அங்கே கொழுப்பை ஜீரணம் செய்கிற வேலையைச் செய்து முடித்துவிட்டு, இரத்தக் குழாய் வழியாக மீண்டும் கல்லீரலுக்கே வந்து விடும்.

பித்தநீர் இல்லை என்றால் என்னாகும்? கொழுப்பு

அதிகமாகச் சேர்ந்து, உடலியக்கம் பாதிக்கப்படும்!"

"பித்தநீரின் குணாதிசயம் இது தான்! ஆனால் பித்தப்பை?

தேவையே இல்லை! பித்தப் பை, ஓர் எக்ஸ்ட்ரா உறுப்புதான்!

உணவு செரிமானத்துக்கு, கல்லீரல் அனுப்பும் பித்தநீர் நேராகக் குடலுக்குச் சென்றாலே போதும்தான். பித்தப்பை, ஒரு சேமிப்புப் பைதான்!

நாம் சாப்பிடும் உணவில் கொழுப்



• படம் : [illegible]



புப் பொருள்கள் அதிகரிக்கும் போது, பல சமயங்களில் கற்களாக உருமாறி, பித்தப் பையில் கற்கள் உருவாகின்றன.

சில சமயம், "ஸ்ட்ரெப்டோகாக்கை' என்ற பாக்டீரியா, டைஃபாயிடு கிருமி போன்றவை, பித்தப் பையைத் தாக்கி, பித்தக் கற்களை உண்டாக்கிவிடும். பித்த நீர் முறையாக வெளியேற முடியாதபடி, அடைப்பு ஏற்பட்டாலும், பித்த நீர்

தேக்கம் ஏற்பட்டு, கற்கள் உண்டாகும்.

பித்தக் கற்கள் : பித்தக் கற்களின் பெரும்பகுதி 'மிக்ஸட் ஸ்டோன்ஸ்'களால் ஆனவைதான். கொலஸ்ட்ரால், கால்ஷியம் கார்பனேட், கால்ஷியம் பிலிரூபனேட் போன்ற கற்களின் கலவையாகத்தான் இருக்கின்றன.

பித்தக் கற்கள் யாருக்கு, ஏன் ஏற்படுகின்றன?

• பரம்பரை காரணமாக,

• உடல் பருமன் உள்ளவர்களுக்கு

• கருத்தடை மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிடும் பெண்களுக்கு

• செக்ஸ் ஹார்மோன் மாற்றங்களால்

• இரத்த சோகை நோய் உள்ளவர்களுக்கு

• சிறுகுடல் பாதையில் ஏற்படும் வியாதிகள் காரணமாக.

• விரதம் இருப்பதால்

"என்னது? விரதம் இருப்பது நல்லது தானே? பித்தக்கற்கள் தோன்றும் என்கிறீர்களே?" என்று நீங்கள் கேட்கலாம்.

வேளாவேளைக்குப் போதுமான உணவு கிடைக்காத போது, பித்தநீர் அளவுக்கு அதிகமாகச் சுரந்து, கற்களாக உறைந்து விடும் அபாயமிருக்கிறது. தீவிர டயட் செய்யும் இளம்பெண்களுக்குப் பித்தப்பையில் கற்கள் உண்டாவதன் காரணமே பட்டினி ஃபேஷன்தான்!

பித்தக் கற்களின் அறிகுறி என்ன?

விதவிதமான வலிகள் ஏற்படும். மாரடைப்பு வலியோ என்று கூட பயம் ஏற்படும். மார்பு எலும்புக்கும் தொப்புளுக்கும் இடையே வலிக்கும். முதுகிலும் தோள் பட்டையிலும் கடுப்பெடுக்கும் வாந்தியும் குமட்டலும் அவஸ்தை தரும்.

ஒரு சிலருக்கு எள்ளின் முனையளவு கூட வலி இருக்காது. ஆனால் பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

இதற்கு ஆபரேஷன் மட்டும்தான் தீர்வா?

இல்லை... பித்தப்பை கற்களைக் கரைப்பதற்கென்றே மருந்துகள் உள்ளன. சில சமயம், பித்தநீர் பைக்குள் அதிர்வலைகளைப் பாய்ச்சி, கற்களைப் பொடியாக்கி, மலத்துடன் வெளியேற்றி விடலாம். இம்முறையில் கணையத்தில் வீக்கம், பித்தப்பையில் அழற்சி உள்ளவர்களுக்கும் கருவுற்ற பெண்களுக்கும் ஏற்றதல்ல!

லேப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சை முறையில் பித்தக் கற்களை, வலியின்றி, மிகச் சுலபமாக நீக்கி விடலாம். சில சமயம், குடல் ஒட்டுதல் அதிகம் இருந்தாலோ, பொது பித்த நாளத்தில் கட்டி, கல் இருந்தாலோ, ஓப்பன் சர்ஜரி தேவைப்படலாம். பித்தப் பையைக் கற்களுடன் நீக்காவிட்டால், மஞ்சள் காமாலை நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

பித்தக் கற்கள் வராமலிருக்க என்ன செய்யணும்?

ரொம்ப ஸிம்பிள்! கொழுப்புகள் கூடுதலாக உள்ள உணவைத் தவிர்க்க வேண்டும். பட்டினி, விரதம் என வயிற்றைக் காயப் போடாமல், வேளாவேளைக்கு மிதமான, நார்ச்சத்துள்ள உணவைச் சாப்பிட்டு, மிதமான உடற்பயிற்சி செய்து வந்தாலே கற்களுக்கு கல்தா கொடுக்கலாம்!

- எம். கஸ்தூரி,
சென்னை - 17.

அவ்வப்போது மிக்ஸி ஜாரில் ஒரு கைப்பிடி அளவு உப்புக் கல்லைப் போட்டு மிக்ஸியைக் கழுவி விட்டால் பிளேடு முனைகள் கூராகி விடும்.

- அ. ருக்மணி, சின்னமனூர்.





சில குட்டீஸ்கள், சற்று வளர்ந்த பின்பும், படுக்கையில் 'மூச்சா' போய் விடுகின்றன. இதனால் குழந்தையின் தூக்கம் கெட்டு, தாயின் தூக்கமும் கெடுகிறது. படுக்கை விரிப்புகள் நனைந்து அவஸ்தை; துர்நாற்றத்தால் அசூயை வேறு! நிச்சயம் இது நல்ல பழக்கம் இல்லைதான்.

படுக்கையை நனைக்கும் பழக்கம் ஏன்?

- இது பெரும்பாலும் பரம்பரைப் பழக்கமாகத் தோன்றுகிறது.
- பயம், பதற்றம், பாதுகாப்பற்ற உணர்வு போன்ற மனம் சார்ந்த காரணங்களாலும், கனவு சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளாலும் இந்தப் பழக்கம் உண்டாகும்.
- சில குழந்தைகளின் சிறுநீர்ப்பையின் அளவு சிறியதாக இருந்தால் சிறுநீரை அடக்கும் திறன் குறைவாக இருக்கும்.
- ஆழ்ந்த தூக்கத்தின்போது சிறுநீரை அடக்கும் தன் உணர்வு இல்லாததால் இப்படி நேர்டுகிறது.

இந்தப் பழக்கத்தை நிறுத்துவது எப்படி?

- குழந்தை வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
- மிரட்டவோ, கிண்டல் செய்யவோ கூடாது. இதனால் குழந்தைக்கு, தாழ்வுமனப்பான்மையும், குற்ற உணர்வும் அதிகரிக்குமே தவிர, வேறு ஒரு பலனும் கிடைக்காது.
- இரவு ஏழு மணிக்கு மேல் திரவமாக எதையும் தரக்கூடாது.
- குழந்தைகள் தூங்கப் போகும் முன்பும், நடு இரவிலும் சிறுநீர் கழிக்கும் பழக்கத்தை நாம்தான் பொறுமையுடன் கற்றுத் தர வேண்டும்.

- பிரேமா ஸ்ரீனிவாஸன், மைசூர் - 22.

உங்கள் குழந்தை படுக்கையை நனைக்கிறதா?



கலைச்சிறப்பு, தலவிருட்சம், தீர்த்தம், இத்தலங்களின் சிவாச்சார்யாரைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்று அருமையாக உருவாகியுள்ளது இந்த நூல். ஆன்மிக நோக்கிலும், ஆய்வுநோக்கிலும் கடும் உழைப்பில் ஆசிரியர் உருவாக்கியுள்ள இந்த நூல், படங்களோடும் வெளியிடப் பட்டிருந்தால் மிகவும் சிறப்பாக இருந் திருக்கும். பாராட்டுக்குரிய இந்த மிகத் தரமான நூல் இம்மாதம் 'நட்சத்திரக் குறி' பெறுகிறது.

ஸ்ரீ ராகவேந்திரர் காவியம் - மீனாட்சி சுந்தரேசன் ஸ்ரீ ஆனந்த நிலையம், சென்னை - 17.
பக். 192, விலை ரூ. 55.00

மகான்களின் வரலாறுகள் படிக்கப் படிக்கப் பயனும் சுவையும் தரு பவைதாம். ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியின் பக்தர்கள் வாழ்வில் கிடைத்த அனுபவங்கள் பிரமிப் பூட்டுபவை.





நலம் தரும் தாவரங்கள் - எஸ். ஆறுமுகசாமி மற்றும் மூவர். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை - 600 085.
பக். 42, விலை ரூ. 25.00

மஞ்சள் வெங்காயம் முதல் கற்றாழை, ஆடாதொடை வரை எட்டுத் தாவரங்





*** தொண்டை நன்னாட்டின் தேவாரத் திருத்தலங்கள் - எஸ். சபாரத்தினக் குருக்கள் திருமகள் நிலையம், சென்னை - 17. பக். 496 விலை ரூ. 215.00**

தொண்டைமண்டல நாட்டில் உள்ள 32 திருத்தலங்களைப் பற்றிய தேவாரப் பாடல்கள், பொழிப் புரையோடு வெளியிடப்பட்டுள்ளன. தவிர, அந்தத் தலங்களைப் பற்றிய வரலாறுகளுடன், கல்வெட்டு விவரங்கள்,

களின் மருத்துவப் பயன்பாடு, பயிரிடும் வகை, தோன்றிய வரலாறு போன்ற அருமையான விவரங்கள் அடங்கிய அருமையான சிறு நூல்.

சுயமுன்னேற்ற சூத்திரம் - எஸ். சூரியமூர்த்தி, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17.

பக். 112 விலை ரூ. 30.00

'உதிரிப் பூக்களாக விற்பதை விட மாலையாய்த் தொடுத்து விற்றால் இலாபம் அதிகம் கிட்டும்', '21-ம் நூற்றாண்டில் தகுதியுள்ளது, வேகமானது, தீவிரமானது வெற்றி பெறும்' - போன்ற வழிகாட்டல்கள் விளக்கப்படங்களோடு.

விண்வெளி ரகசியம் - ஜி.எஸ்.எஸ். திருவரசு புத்தக நிலையம், சென்னை - 17

பக். 96 விலை ரூ. 40.

விண்வெளியைப் பற்றியும், விண்வெளிப் பயணங்களைப் பற்றியும் சாதனையாளர்களைப் பற்றியும் அனைவருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டுள்ள சிறிய நூல். மிகவும் பயனுள்ள நூல். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூட.



தோசை மாவு, இட்லி மாவு புளித்து விட்டால் ஒரு தம்ளர் பால் விட்டால் போதும். புளிப்புத் தன்மை குறைந்து விடும்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி.

புதிய சவால்கள் - சிந்தை ஜெயராமன் வினோத் பதிப்பகம், 11, ஈ.பி. காலனி, லட்சுமிபுரம், திருநின்றவூர் -602 024.

பக். 112, விலை ரூ. 100/-

'குழந்தைகள் நிறையக் கேட்க வேண்டும். நிறையப் பேச வேண்டும். புரியாதவைகளாக இருந்தாலும் அவர்கள் சொல்வதைக் கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்' குழந்தைகளுடன் பெற்றோர் கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் பற்றிய நூல். நல்ல தாளில் அச்சிடப்பட்டிருந்தாலும் விலை மிக அதிகம்.

சைவ 'ஸ்நாக்ஸ்' வகைகள் - கிருத்திகா ராதா கிருஷ்ணன் - பார்வதி கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17.

பக். 96 விலை ரூ. 33.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற செய்முறைச் சமையல் குறிப்புகள். ஜவ்வரிசி வடை, சேப்பங்கிழங்கு கட்லெட் என்று வித்தியாசமாகச் செய்து பார்க்கலாம். சிரத்தையோடு செய்தால் பிண்ணாக்கைக் கூடச் சுவையாகப் பரிமாறலாம் போலிருக்கிறது.

நான் ஓர் அழைப்பு - ஓஷோ தமிழில் பாரதிகுமார். கண்ணதான் பதிப்பகம், சென்னை - 17

பக். 472 விலை ரூ. 125/-


இருபது ஆண்டுகளுக்கு முன்னால் பூனாவில் உள்ள ஓஷோவின் ஆசிரமத்துக்கு வந்த சீடர்களிடம் அவர் உரையாடியதன் தொகுப்பு. குறும்பு கொப்பளிக்கும் குட்டிக் கதைகளோடு கூடிய ஆழமான சிந்தனைகள்.

ஈமெயில் - லயன் எம். சீனிவாசன் கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17.

பக். 96, விலை ரூ. 40.00

கணிப்பொறி யுகத்தில் மிகவும் பயன்தரும் நூல். அமெரிக்காவில் பிள்ளை, ஆஸ்திரேலியாவில் பேத்தி என்று பரபரக்கிறவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

- வாசகன்



நேரம் இருக்கே!

வாக்கிங், யோகா, உடற்பயிற்சி என நாள் தவறாமல் செய்து குடும்பத்துடன் உற்சாகமாக இருக்க எல்லாருக்கும் ஆசைதான். 'ஆனால், இதுக்கு எல்லாம் நேரம் எங்கே இருக்கு?' என்று முணுமுணுப்பவர்களுக்கு வீண் விரயப் பொழுதுகளிலிருந்து நிமிஷங்களை மீட்டெடுக்க அனுபவ டிப்ஸ்.

• படுக்கையை விட்டு எழும் வழக்கமான நேரத்தை மாற்றுங்கள். இரண்டு மணி நேரம் முன்னதாக கண் விழிப்பதன் மூலம் உங்களுக்கு பிரதி மாதம் இரண்டரை நாட்கள் போனஸாகக் கிடைக்கும்.

• காலை நேரத்தில் குடும்பச் சச்சரவுக்கு இடமளிக்காதீர்கள். இதனால் உடலும், மனமும் சோர்ந்து சூழ்நிலை இறுக்கம் அதிகமாகி, நேர விரயமாகும்.'

• வார (அன்றாட) நாட்களில் விதவிதமான மெனு வேண்டாம். காலையில் எழுந்து 'என்ன சமைப்பது?' என்ற சிந்தனையில் நேரம் கரையாமல் சரிவிகித சத்துணவாக அமையுமாறு அட்டவணையை முன்கூட்டியே தயாரித்து விடுங்கள்.

• செல்ஃபோனில் விரல் தேய எஸ்.எம்.எஸ். மற்றும் வெட்டிப் பேச்சு போன்றவை காலை நேர எதிரி. 'கட்' பண்ணிவிடுங்கள்!

• அனாவசியமாக எவரையும் வீட்டுக்கு வருந்தி அழைத்து வம்பளக்காதீர்கள். இளங்காலை, நம்மைப் புத்துணர்ச்சிமிக்க வாழ்வுக்குத் தயார் செய்யும். புதுப்பிக்கும். அதனால் காலை நேரத்தை பொன்னாக நினைத்துப் போற்றுங்கள்.

• அதே சமயம் நீங்களும் அதிகாலையில் பிறரிடம் அப்பாயின்மென்ட் வாங்கி, நேரவிரயத்துக்கு பிள்ளையார்சுழி போடாதீர்கள்.

• கடைசியாக ஒன்று. இப்படியெல்லாம் பாடுபட்டு சேகரித்த காலை நேரத்தை, உடலை உறுதிசெய்யும் பயிற்சிகளுக்கும், மாலை நேரத்தை குடும்பத்துடன் சேர்ந்து இருக்கவும் ஒதுக்கி உற்சாகமாக வாழுங்கள்! ஹேவ் எ ஹேப்பி அண்ட் ஹெல்தி டே!

• வித்யா சீனிவாசன், திருச்சி.
படம் : ஸ்ரீஹரி


வந்துவிட்டது!
ORTHOCURE
ஆர்தோக்யூர்
தயாரிப்பாளர்களிடமிருந்து
இரத்தத்தில்
சர்க்கரை அளவை சீராக வைத்திருக்க
NORMOPAN-SF
நார்மோபான்-SF
TABLETS
100 %
ஆயுர்வேதம்
பக்கவிளைவுகள்
இல்லாதது
NORMOPAN-SF
30 TABLETS
Useful in Maintaining
Sugar levels
Marketed by: KUREWEL PHARMA, CHENNAI - 600 083. ☎: 044 24893013

சிறுகதை

அருகருகே அந்நியராய்...

இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. மங்கையின் இதயத் துடிப்பு அதிகரித்தது. 'இதோ இப்போது கணவர் செல்ஃபோனைக் கையில் எடுத்துக் கொள்வார்.'

வளவனின் முகத்தில் ஒரு பரபரப்பு தெரியத் தொடங்கியது. செல்ஃபோன்னைக் கையில் எடுத்துக் கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்தார். மங்கை, சமையலறைப் பாத்திரங்களைத் தேய்த்து வைப்பதில் கவனமாக இருக்கிறாள் என்பது தெரிந்தது. மெல்லப் படியேறினார்.

சப்தம் போடாமல் மங்கை, கணவனைப் பின்தொடர்ந்தாள். வழக்கம் போல!

மாடியறையில் நாற்காலியொன்றில் அமர்ந்து கொண்ட வளவன், எதிரில் இன்னொரு நாற்காலியை இழுத்து வைத்துக் கொண்டு அதில் தன் கால்களை நீட்டிக் கொண்டார். ஓரிரு நிமிடங்கள் மௌனத்தில் கழிந்தன. எண்களை ஒற்றியிருப்பார். தொடர்பு கிடைக்கவில்லையோ? இருக்காதே. ஒருநாளைப் போல இவரது அழைப்புக்காகக் காத்திருப்பது போல் அல்லவா எதிர்முனைக்காரி இருப்பதாகத் தெரிகிறது!


"ஹலோ எப்படியிருக்கே? வளவன்தான் பேசறேன். ...ம்ம்... நல்லாயிருக்கேன்.... காலையிலே வாக்கிங் போகும் போது அஷோக்கைப் பார்த்தேன். மேனேஜராகப் பதவி உயர்வு கிடைச்சிருக்காம். "எல்லாம் உங்களாலேதான் சார்'னு சொன்னான். ஆபீஸ் வேலைகளை எப்படி வேகமாகச் செய்யறதுன்னு அவனுக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுத்ததுண்டு. அவ்வளவுதான் நான் செய்தது. அப்புறம்..."

மங்கைக்கு ஆற்றாமை வெடித்தது. தன்னிடம் இதையெல்லாம் ஏன் இவர் பகிர்ந்து கொள்ளவில்லை?

கடந்த ஆறு மாதங்களாக இந்தப் பழக்கம். அதற்கு முன் பத்து மணிச் செய்திகளைக் கேட்காமல் வளவன் இருந்ததே இல்லை. "ஏங்க இப்பல்லாம் நீங்க நியூஸே கேட்கிறதில்லையே" என்று ஒருநாள் மங்கை தூண்டிலை வீச, "என்ன இருக்கு நியூஸ்லே, எப்பவும் பாலிடிக்ஸ், இல்லேன்னா ஏதாவது அழிவுச் செய்தி, இவ்வளோதானே?" என்றார், விலாங்குமீன்.

ஒருவழியாக நெடுநேரத்துக்குப் பின் பேச்சு நின்றது. "சரி, அப்ப நான் வச்சுடறேன் மாயா."

வேகமாக இறங்கி வந்து பூனை போல் சமையலறையில் பாக்கிப் பாத்திரங்களைத் துலக்கத் தொடங்கிய ஒரு நிமிடத்திற்குப்



அருண் சரண்யா

பிறகுதான் தனக்குக் கிடைத்த புதிய விவரம் அவளுக்கு விளங்கியது. 'மாயா! இதுநாள்வரை கணவர் யாரிடம் பேசுகிறார் என்பது தெரியாமல் இருந்தது. இன்று விடை கிடைத்து விட்டது. யார் அவள்? அவளிடம் பேசும் போது கணவரது குரலில் தென்பட்ட கொஞ்சல் தொனி, மங்கையை மிகவும் சீண்டிப் பார்த்தது.

கிராமத்தில் வளர்ந்தபோது மணியக்காரர் மகளுக்குத் தன்மீது ஒரு இது இருந்தது என்றாரே, அவளை சமீபத்தில் சந்தித்து உறவைப் புதுப்பித்துக் கொண்டிருப்பாரோ? அல்லது நண்பர் ஒருவரின் தங்கைக்கு தன் புத்திசாலித்தனத்தின் மீது அபார மோகம் என்றாரே, அவளோ? அல்லது பொது மேலாளராக இவர் வேலை செய்த நிறுவனத்தில் "ரொம்ப சுட்டிகையான பெண்" என்று தன் செயலாளரைப் பற்றிக் குறிப்பிட்டாரே, அவளோ? அவர் அவர்களைப் பற்றிக் கூறியபோதே விவரங்களை விசாரித்திருக்கலாம். வீட்டு வேலைகள், குடும்பப் பொறுப்புகள் என்று அழுத்தியதில் இதிலெல்லாம் புத்தி போகவில்லை. இப்போது எப்படித் திடீரெனத் தொடங்குவது?

ஆஹா 50!



காய்க்காத முருங்கை மரத்தின் வேர் பகுதியை விட்டு ஒரு அடி தள்ளி மண்ணைக் கிளறி, உப்பு போட்டு நீர் விட்டால் நன்றாகக் காய் காய்க்கத் தொடங்கும்.

- எஸ். சந்திரமுகி, கோபி.

இரு மாதங்களுக்கு முன் சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தாள் மகள் ராதா. பேச்சு எங்கெங்கோ சுழன்று கடைசியில் "ஏன் நீ சுரத்தில்லாம இருக்கே?" என்று மகள் கேட்கும் நிலைக்கு வந்தது.

மனம் பொறுக்காமல், பத்து மணி வைபவத்தைக் கூற, ராதா சிரித்தாள். "தெரிஞ்ச யாருடனோ யதார்த்தமா, அப்பா பேசறதை வச்சு நீயா எதையோ கற்பனை செய்துக்கறே" என்றாள்.

"இல்லடி. அப்படியிருந்தாலும் தினமும் குறிப்பிட்ட நேரத்துக்கு என்ன பேச்சு? தவிர பேசும்போது உங்கப்பா குரலில் என்ன துள்ளல், என்ன உற்சாகம் தெரியுமா? 'உன் குயில் குரலைக் கேட்டாத்தான் எனக்குத் தூக்கமே வருதும்மா'ன்னு நாலு நாள் முன்னாடி பேசினாருடி."

ராதா திகைத்துப் போனாள். சமீப காலமாக அம்மாவும், அப்பாவும் அதிகம் பேசிப் பார்க்கவில்லை. எனினும் அம்மா அநியாயமாக அப்பா மீது குற்றம் சாட்டுபவள் அல்ல.

"நானே அப்பாவைக் கேட்கிறேன்" என்றாள்.


மங்கை தடுத்தாள். "நேரடியா கேட்கணும்னா அதை நானே செய்திருக்க மாட்டேனா? தவிர நேரடியாகக் கேட்டால் உண்மை வெளியாகும்னு நினைக்கிறியா?"

"வேற என்னதான் செய்யறது?" என்று கூறிய ராதாவுக்கு அடுத்த நிமிடமே அந்த யோசனை தோன்றியது.

அப்பா தூங்கியபின் அவரது செல்ஃபோனை எடுத்தாள். அன்று அவர் யாருக்குத் தொலைபேசியில் பேசினார் என்ற பட்டியலை அதில் பார்க்க முடியுமே. முயற்சி செய்தவள் திகைத்தாள். 'டயல்ட் கால்ஸ்' பட்டியல் சுத்தமாகத் துடைத்து விட்டதுபோல் இருந்தது. எண்ணை அழித்து விட்டிருக்கிறார்.

"அம்மா, நீ கொஞ்சம் கவனமா இருந்துக்கோ. அவ்வளவுதான் சொல்ல முடியும்" என்று எச்சரிக்கத்தான் முடிந்தது.

பொதுவாக வளவன் நேரிலும் சரி, தொலைபேசியிலும் சரி, மிகச் சுருக்கமாகவே பேசுவார். மங்கைக்கு மட்டும்



அரைத்த துவையல் மறுநாளும் கெடாமலிருக்க ஒரு கரண்டி நல்லெண்ணெய் விட்டு அரைத்துத் துவையலை அதில் போட்டு நன்றாகக் கிளறி, ஐந்து நிமிடம் அடுப்பில் வைக்கவும். பிறகு, அதை உபயோகப்படுத்தினால் இரண்டு மூன்று நாட்களுக்குக் கெடாமல் இருக்கும்.

– கிருத்திகா கிருஷ்ணகுமார், சென்னை.

தான் இதில் விதிவிலக்கு. பிரசவத்திற்காக மனைவி தாய்வீடு சென்று இருக்கும் போது தினமும் ஒருமுறையாவது தொலைபேசியில் தொடர்பு கொள்ளாமல் இருக்க மாட்டார். கால் மணி, அரைமணி என்று பேச்சு நீளும். "போதும், எஸ்.டி.டி.யில் எக்கச்சக்கமாக ஏறிடப் போகுது" என்று செல்லமாகக் கூறியபடி மங்கைதான் பேச்சை முடிவுக்கு கொண்டு வருவாள்.

இப்போதெல்லாம் பக்கத்தில் இருந்தும் பேச்சு குறைந்து விட்டது. மகள், பேரப்பிள்ளை, அடுத்த வீட்டு பங்கஜம் என்றிருந்த போது நேரம் போவதே தெரியாது. பங்கஜம் வீடு மாறிச் செல்ல, மருமகனும் சிங்கப்பூர் செல்ல, இப்போது இருவராக மட்டுமே இருக்கையில் தன்னை ஒதுக்கி விட்டு எவளுடனோ தினமும் தொலைபேசியில் தொடர்பு கொள்வதும், அதைத் தன்னிடமிருந்து மறைப்பதும்... மங்கைக்கு வேதனை அதிகமானது.

அன்றிரவு வீட்டுக்கு மாலினி வந்திருந்தாள். சிங்கப்பூரில் வசிப்பவள். ராதாவின் பக்கத்து வீட்டில் இருப்பவள். பள்ளி ஆசிரியை. சிங்கப்பூர் சென்றிருந்த போது "எனக்கு நீங்களும் ஒரு அம்மா தான்' என்று பாசமாக ஒட்டிக் கொண்டவள். உறவினர் திருமணத்திற்காக இப்போது சென்னை வந்திருக்கிறாள்.

"உங்க மக உங்களுக்காக இதை வாங்கிக் கொடுத்தனுப்பியிருக்கா" என்றபடி ஒரு புடவையை நீட்டினாள்.

ஆர்வத்துடன் அதை வாங்கிக் கொண்டாள் மங்கை. மகளுக்குக் கொடுத்தனுப்புவதற்காக ஏற்கெனவே மிளகாய்ப் பொடி, தக்காளித் தொக்கு, அப்பளம் அனைத்தையும் தயார் நிலையில் வைத்திருந்தாள்.

"அப்பாவுக்கு எதுவும் கொடுத்தனுப்பலையா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் வளவன். "வேட்டியும் வெள்ளை ஜிப்பாவும் மட்டும்தான் நீங்க போடுவீங்க. உங்களுக்கு சிங்கப்பூரிலே என்ன ஸ்பெஷலா வாங்கிக் கொடுக்கறதுன்னு ராதா எங்கிட்டே சொன்னா."

இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. மங்கைக்குத் தவிப்பு ஏற்பட்டது. ஒருவேளை இன்றைக்கு அவர் அவளுடன் பேசுவதைத் தான் கேட்க முடியாமல் போய்விடுமோ? அல்லது மாலினி வந்திருப்பதால் இன்று தொலைபேசிப் பேச்சுக்கு விடுமுறை அளித்து விடுவாரா?

மங்கைக்கு இன்னொரு விஷயமும் நெருடலை ஏற்படுத்தியது. மாலினி தன்னையும் அறியாமல் வளவனையும் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்தது.

சட்டென கையில் செல்ஃபோனுடன் கணவர் மேலே ஏறத்தொடங்க, அதை எதிர்பார்த்தது போன்ற இலேசான புன்னகை ஒன்று மாலினியின் முகத்தில்.

மங்கையின் உள்ளுணர்வுக்குப் புரிந்தது. 'தன் மகள் ராதா இந்த ரகசியத்தை மாலினியிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறாள். இப்படித் தன் வீட்டு அந்தரங்கம் நாடு விட்டு நாடெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறதே!

துக்கத்தில் மங்கையின் கண்கள் சட்டென நிரம்ப, மாலினி பதறினாள். "அழாதீங்கம்மா. உங்க பிரச்னை தீர ரெண்டு வழி இருக்கு. சாரோட நேரடியா இதைப் பற்றிப் பேசுங்க. அல்லது அவர் யாருக்கும் ஃபோன் பண்ணலைன்னு உங்க மனசை நம்ப வையுங்க. பொய்யைக் கூட திரும்பத் திரும்ப உங்களுக்கு நீங்களே சொன்னால் மனசு அதை உன்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

மைன்னே ஏத்துக்கும்."

மங்கை எதுவும் பேசவில்லை. உள்ளே சென்றாள். சமையலறையில் சிந்திக் கிடந்த தண்ணீரில் அவள் பாதம் வழுக்க அடுத்தகணம் கீழே விழுந்தாள். 'ஐயையோ' என்று மாலினி கத்த, அடுத்த கணமே வெகுவேகமாகக் கீழே இறங்கிய வளவன் செல்ஃபோனை அங்கிருந்த மேஜையின் மீது வீசி எறிந்துவிட்டு மங்கையை நெருங்கினார்.

"ஒன்னுமில்லீங்க" என்றபடி சமாளித்துக் கொண்டு எழுந்தாள் மங்கை. இலேசான வலியைத் தவிர நிஜமாகவே ஒன்றுமில்லை. ஆனால் வளவன் இதை நம்பத் தயாராக இல்லை. மெல்ல கூடத்துக்கு வந்து சோபாவில் படுத்தாள்.

"இரு. டாக்டரைக் கூட்டிட்டு வரேன்" என்று வெளியேறி விட்டார். டாக்டர் ஜகன்னாதன் வசிப்பது நான்கே வீடுகள் தள்ளி. வெந்நீர் ஒத்தடம் கொடுப்பதற்காக சமையலறைக்குச் சென்றாள் மாலினி.

அவர் வெளியேறிய அடுத்தகணமே மங்கை, மேஜை மீது இருந்த செல் ஃபோனை கையில் எடுத்தாள். அதில் பாட்டரி சுத்தமாக சார்ஜ் இறங்கியிருந்தது. மாலினி எப்போது வருவாள் என்பதை அறிய அவளுக்கு ஃபோன் செய்யலாம் என்று மாலையில் எடுத்த போதும் சார்ஜ் இல்லாமல் இருந்தது. அப்படியானால் நடுவே இது சார்ஜ் செய்யப்படவில்லை. அதாவது யாரும் இதில் யாரையும் தொடர்பு கொண்டிருக்க வாய்ப்பு இல்லை. பின் மாடியிலிருந்து பேச்சுக் குரல் கேட்டதே?

'அவர் யாருக்கும் ஃபோன் பண்ணலைன்னு உங்க மனசை நம்ப வையுங்க' என்ற மாலினியின் யோசனை இப்போது வேறு கோணத்தில் மனத்தில் தைத்தது. உண்மையே அதுதானோ? மாடி அறையின் வாசலில் தான் மறைந்து நின்று கொண்டாலும் உள்ளே இருக்கும் ஒரு கண்ணாடியில் கோணம் காரணமாக தன்னை தன் கணவனால் பார்த்திருக்க முடியும் என்பது சட்டென நினைவுக்கு வந்தது. ஆக, அவர் தான் விரும்பியதை எல்லாம் பகிர்ந்து கொண்டது யாரோ மாயாவுடனல்ல. அது மாயை. தன்னுடன் தான் பேசியிருக்கிறார். ஏன்?

டாக்டர் வந்து ஊசி போட்டுவிட்டுச் சென்றார். மாலினியும் பிறகு சென்று விட்டாள். அருகில் மௌனமாக அமர்ந்திருந்த கணவரை நோக்கி, "உங்க கூட மனசு விட்டு பேசியே நாளாச்சு. நீங்க ஏன் மீசைக்கு டை அடிக்கிறதை நிறுத்திட்டீங்க? ஆனால் இப்படியே கூட அழகா இருக்கீங்கன்றது வேற விஷயம். உங்களுக்கு ஞாபகம் இருக்கா? ஒரு தடவை பழனி மலைக் கோவிலிலே கூட்டத்திலே நான் கீழே விழுந்துட்டேன். ஒரு சினிமா ஹீரோ கணக்கா என்னை அந்தக் கூட்டத்திலே இருந்து தூக்கிட்டு வந்தீங்களே... அப்புறம் இன்னொன்னு. நாளைக்குக் கடைக்குப் போய் உங்களுக்கு ரெண்டு செட் டிரஸ் எடுத்தே ஆகணும்?" உற்சாகமானக் குரலில் மங்கை பேச, வளவன் முகத்தில் இளமுறுவல்.

கடிகார முள்கள் அங்கேயேதான் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. வேறு சில முள்கள்தான் தொலைந்து போயிருந்தன.

அஹா 50!



இட்லிக்கு அரைக்க முழு உளுந்தம் பருப்பை அரைமணி நேரம் ஊற வைத்து, மேலும் அரை மணி நேரம் ஃப்ரிஜ்ஜில் வைத்து எடுத்து வைத்து அரைத்தால் இட்லி மிகவும் மிருதுவாகவும் இருக்கும். குறைந்த அளவு பருப்பே போதுமானது.

- மு. சாந்தி, போடி.

நீங்கள் நினைத்த காரியம் கைகூட வேண்டுமா?


இவரை ஒருமுறை சந்தியுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய திருப்பத்தை, வெற்றியை மிக விரைவில் அடைவீர்கள்.



நீங்கள் நினைத்த காரியம் கைகூட வேண்டுமா? கோவை மாவட்டம், அன்னூர் - பு. புளியம்பட்டிக்கு அருகில் உள்ள கணுவக்கரையில் வசிக்கும் அதிர்ஷ்ட நியூமராலஜி மாமேதை கே.ஆர்.பிரபாகர்ராஜ் அவர்களைச் சந்தித்து நியூமராலஜி, பெயர் வசியம், சைன், கையெழுத்து வசியம், தொழில் வசியம் செய்து கொண்டால் நீங்கள் நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றிபெறலாம்.

தொழில் முடக்கம், வியாபார மந்தம், உத்தியோகத்தில் தடை, வெளிநாடு செல்லத் தடை, கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு, தாம்பத்யக் கோளாறு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம் இல்லாமை, எதிர்ப்பு, கோர்ட் வழக்கு.

மேலும் புகழ் இல்லாமை, முன்னேற்றத் தடை, செய்வினை, மாந்திரீக பாதிப்பு, தீய சக்திகளால் பாதிப்பு, ஊழ்வினை கர்மா, முன் ஜென்மப் பாவம் மேலும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிகநல்ல முறையில் தீர்வு தருகிறார்.



இவரால் தொழில் வசியம் செய்யப்பட்ட அனைத்துத் தொழில் நிறுவனங்களும் இன்று முன்னணியில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவரிடம் பெயர் வசியம் செய்து கொண்டவர்கள் பலரும் இன்று கலைத் துறையிலும், அரசியலிலும் புகழ்பெற்று விளங்குகிறார்கள். இராஜவசிய உச்சாடனப்படி அதிர்ஷ்டப் பெயர் அமைத்துக் கொண்டவர்கள் பலரும் இன்று மிகப்பெரிய கோடீஸ்வரர்களாகவும், சாதனையாளர்களாகவும் திகழ்கிறார்கள்.

வெற்றியடைய முடியாத பல காரியங்களைச் சவால்விட்டுச் சாதித்துக் கொடுத்துள்ளார்.

ஆண்-பெண் எந்தத் தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண் (திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் எண்) 2, 4, 5, 7, 8 வரும் நாளில் கண்டிப்பாகத் திருமணம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதிலிருந்து விடுபட இவர் சொன்னபடி 'மறுமாங்கல்ய பூஜை' செய்து கொண்டவர்கள் அனைவரும் இன்று சிறப்புடனும், செல்வச் செழிப்புடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்களும் வாழ்வில் வளம்பெற, பணம், பதவி, புகழ் பெற உடனே (அதிர்ஷ்டக்கலை) அதிர்ஷ்ட நியூமராலஜி நிபுணரை இன்றே சந்தியுங்கள்.

விஞ்ஞான, மெய்ஞான, தெய்வீக ஆய்வு முறையில் நியூமராலஜி, நேமாலஜி, சைன், தொழில் வசியம், பெயர் வசியம், இராஜவசியம், சர்வ காரியசித்தி வசியம், ஜனவசியம், மேக்பவர், கையெழுத்து வசியம், பெயரெண் வசிய சக்திகள், மந்திர எண்கணிதம் போன்றவற்றின் மூலம் மிக நல்ல முறையில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு தருகிறார்.

இவரது புத்தகங்களை வாங்கிப் படியுங்கள்.

1. **அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்** (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு) ரூ. 300/-. 2. வெற்றிக்கு வழி ரூ. 1,050/-. 3. பணம், பதவி, புகழ் ரூ. 550/- தபால் மூலம் பெற M.O. செய்யுங்கள். வெளிநாடுகளிலும் கிடைக்கும்.

உலகப்புகழ் அதிர்ஷ்ட நியூமராலஜி மாமேதை கே.ஆர்.பிரபாகர் ராஜ் அவர்களைச் சந்தித்து வாழ்வில் வெற்றிமேல் வெற்றிகளைக் குவியுங்கள்.

வெளிநாட்டு அன்பர்கள் போன் (அல்லது) தபால் மூலம் தொடர்பு கொண்டு பயனடையுங்கள்.

வாழ்வில் முன்னேற வந்து சந்தியுங்கள்.

சென்னையில்
பிரதி மாதம் 6, 7
தேதிகளில் மட்டும்
ஹோட்டல் தாசப்பிரகாஷ்
செல்: 94430 56366

பெங்களூரில்
பிரதி மாதம் 21, 22
தேதிகளில் மட்டும்
ஹோட்டல் உட்லண்ட்ஸ்
செல்: 094430 56366



உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்
"நியூமராலஜி மாமேதை" - கே.ஆர். பிரபாகர் ராஜ்
நியூமராலஜி - பெயர் எண் வசிய சக்திகள் - தொழில் வசியம்

கே.ஆர். பிரபாகர் ராஜ்
நல்லாந் தோட்டம், கணுவக்கரை (P.O.) - 638 459.
பு. புளியம்பட்டி (Via), கோயமுத்தூர் (Dt.), TAMIL NADU - INDIA
Ph. : 04254 - 287258. Cell : (0) 94430 56366 Fax : 04254 - 287258



வார விடுமுறை : புதன், வியாழன்

வெற்றிக்கு வழி





ரொனால்டோ

– ரொனால்டினோ

போஸ்டர்

சிறுகதைப்
போட்டி
முடிவு



மேஜிக் மோடோவின் ரகசியங்கள்!

– சுவாரசியமான கதை

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

கோகுலம்

ஜீலை 2006 ரூ.6/-மட்டுமே

குழந்தைகளின் குதூகலம்!



ஒரு நாற்காலியின் கதை



ஐந்து வருடங்கள்! என்னவரின் மறைவுக்குப் பிறகு உலகத்தின் எல்லா சந்தோஷங்களிலிருந்தும் ஒதுங்கிவிட்ட என்னை, ஆசுவாசப்படுத்தி எழுப்ப முயல்கிறது மங்கையர் மலர். மூன்று அண்ணன்களுக்கிடையே, ஒரே செல்லத் தங்கையாய், உலகம் தெரியாமல் வளர்ந்த என்னை சிறந்ததொரு குடும்பத் தலைவியாய் உருவாக்கியது மங்கையர் மலர்தான். இன்று என்னுடைய நாலு குழந்தைகளும் மிக உயர்ந்த நிலையில் இருப்பதற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்து, என்னை வழிநடத்தியவள் இந்த அன்புத் தோழி. எழுத்தை மறந்து, எண்ணங்களை மறந்து, இவர்களை மறந்து துயரக் குகையில் பதுங்கிக் கொண்டேனே! இதில் யாருக்கென்ன லாபம்? இதோ மீண்டும் உங்களுடன் கைகோத்துக் கொண்டு விட்டேனே...

"இனி உன்னைக் கையில் பிடிக்க முடியாது" என்றார் என் கணவர். "ஏங்க, அவ்வளவு குண்டாகிட்டேனா என்ன?" என்றேன் நான். "இல்லே, ஆடிக்கொருமுறை, அமாவாசைக்கு ஒருமுறை ஏதாவது குட்டியா பிரசுரமானாலே உன் அலட்டல் தாங்காது. இப்பப் பெரிய பத்திரிகையிலே பரிசு, கேட்க வேண்டுமா?" என்றார் கிண்டலாக. பெருமையில் என் முகம் பிரகாசிப்பது எனக்கே தெரிந்தது. கையில் மங்கையர் மலரிலிருந்து வந்த கடிதம். மங்கையர் மலரும், ஒரு பிரபல ஃபர்னிச்சர் கம்பெனியும் இணைந்து நடத்திய போட்டியில், எனக்கு நாற்காலி பரிசு. பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இந்த சுபச் செய்தியை அறிவிப்பதில், எங்கள் டெலிஃபோன் மிகவும் பிஸியாக இருந்தது. "இந்த முறை வரும் ஃபோன் பில்லுக்கு நாலைந்து நாற்காலிகள் வாங்கி விடலாம்" என முணுமுணுத்துக் கொண்டிருந்தார் இவர்.

ஒரு சுபயோக சுபதினத்தில், நானும் என் கணவரும், கடிதத்தில் குறிப்பிட்டிருந்த ஃபர்னிச்சர் மார்ட்டுக்கு, எங்கள் 'டாடா சுமோ'வில் நாற்காலி வாங்கப் புறப்பட்டோம். நாங்கள் காரில் இறங்கிய பந்தாவையும், ஃபர்னிச்சர் கூட்டத்துக்குள் புகுந்து, அலசித் தேர்வு செய்கிற வேகத்தையும் பார்த்து, ஏகப்பட்ட விற்பனையை எதிர்பார்த்தார் கடைக்காரர்.

தனலக்ஷ்மி கருப்பையா

நாங்கள் ஒரேயொரு நாற்காலிதான் வாங்கப் போகிறோம் என்பது தெரிந்ததும், 'பொசுக்'கென்று போய் விட்டது.

இவர், கடைக்காரரிடம் கடிதத்தை நீட்டி, மங்கையர் மலர் பரிசு பற்றிய விவரத்தைச் சொன்னபோது, கடைக்காரர் பார்வையில் ஒரு மரியாதை தெரிந்தது. "சார்! இதை நீங்க முதலிலேயே கூற வேண்டாமோ. அந்த ஐட்டமெல்லாம் அங்கே இருக்கிறது'' என, கடையின் வேறொரு பகுதிக்கு அழைத்துச் சென்றார். கூடவே, எந்தெந்தப் பத்திரிகையில் எழுதுகிறேன்? என்ன பெயரில்? எப்போதிருந்து? என்பது போன்ற விசாரணைகளோடு, கடையிலிருந்த கூட்டமெல்லாம், எங்களை வியப்போடு பார்க்க, எனக்கு வானத்துக்கும், பூமிக்குமாய் உயர்வது போல் தோன்றியது. "உனக்கு நேரம்தான்'' என்று தள்ளிக் கொண்டு போனார் என் கணவர்.

அழகான பிங்க் கலர் நாற்காலி. சிம்மாசனம் போல. கடைப்பையன் நாற்காலியை காரில் கொண்டு வந்து வைத்தான். "பரிசு வாங்கியது யார் சார்?'' "அம்மாதான்'' என்று இவர் கூறியபோது, 'தரையில் கால்கள் பாவவில்லை. வானத்தில் மிதந்தேன், காற்றில் பறப்பது போல்' என்ற உவமைகள் என்முன் ஓடி மறைந்தன.

சாகித்ய அகாதமி பாராட்டுப் பெற்றவர்களுக்குக் கூட, என்னளவு கர்வம் இருந்திருக்குமா? சான்ஸே இல்லை.

நடுஹாலில், ஒரு ராணியின் மிடுக்கோடு என் நாற்காலி அமர்ந்து கொண்டது. வரும் நண்பர்கள், "என்னங்க? எல்லா நாற்காலியும் ஒரே கலராய் இருக்க, இது மட்டும் தனியா, வித்தியாசமா?'' என்று ஆரம்பிப்பதும், "அது மங்கையர் மலரில் நான் எழுதிய கட்டுரைக்குக் கிடைத்த பரிசு" என நான் தொடர்வதும் 'அது ஒரு தொடர்கதை'யாகியது. அப்படி யாரும் கவனிக்காத தருணங்களில், "இது என்னுடைய நாற்காலிங்க" என்று, நான் இழுத்துப் போட்டு அமர்வதும், "அது என்னங்க? சினிமா நட்சத்திரம் மாதிரி. உங்களுக்குத் தனி நாற்காலி?'' என்று அவர்கள் வினவ, ''அது மங்கையர் மலரில் நான்...'' என ஆரம்பிப்பது சகஜமாகியது. மனதை வெகுவாகக் கட்டுப்படுத்தி, தன்னடக்கம் கருதி, சில சமயங்களில் நான் பேசாதிருந்தால், "இந்த நாற்காலி கதை தெரியுமோ?'' என்று என் கணவர் குறும்பாக ஆரம்பிப்பது, பொதுக் கூட்டங்களில் கடவுள் வாழ்த்துப்பாடி, நிகழ்ச்சி ஆரம்பிப்பது போல், எங்கள் வரவேற்பு அறையின் தலைமை உரையாய் கலகலப்பூட்டியது.

மங்கையர் மலர் மூலம் பரிசாகக் கிடைத்த உடைகள் (ராசாத்தி நைட்டீஸ்) பழசாகி விட்டன. கதைக்குக் கிடைத்த சன்மானம், பாங்குக்குப் போய் விட்டது. கட்டுரைக்குப் பரிசாகக் கிடைத்த நாற்காலி, மட்டும் என்னுடன் இரண்டறக் கலந்து விட்டது. பழகிவிட்ட செல்ல நாய்க்குட்டியின், வாஞ்சை எனக்கு அதன் மேல்!



எந்த ஒரு விண்ணப்பப் படிவம் நிரப்பினாலும் நேரடியாக நிரப்பாமல், அதை ஜெராக்ஸ் எடுத்து, அதில் நிரப்பிய பின், சரிபார்த்து விட்டு, பின்பு ஒரிஜினல் விண்ணப்பப் படிவத்தில் நிரப்பினால் அடித்தல், திருத்தல் இல்லாமல் சுத்தமாக இருக்கும்.

- பி. கோமதி, பாளையங்கோட்டை.

ஒரு ராஜாவுக்கு நான்கு மனைவிகள். நால்வரில் அரசன் மிகவும் நேசித்தது நான்காமவளைத்தான். அவளுக்கு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் வாங்கிக் கொடுத்து அலங்கரித்து, கண்ணுக்குக் கண்ணாகப் பார்த்துக் கொண்டான்.

அடுத்தபடியாக அவன் நேசித்தது மூன்றாம் மனைவியை. அண்டை அயல்நாடுகளிடமெல்லாம் அவளைத் தன் மனைவி என்று அறிமுகப்படுத்துவதில் அவனுக்குப் பெருமை அதிகம். ஆனாலும் அடி மனதில் அவனுக்கு ஒரு பயம் - என்றேனும் ஒருநாள் அவள் தன்னை விட்டுச்



முதல் மனைவி!

சென்றிடுவாளோ என்று.

இரண்டாவது மனைவியிடம்தான் அவனுக்கு நம்பிக்கை அதிகம். அவள் மிக அன்பானவள், பொறுப்பும், பொறுமையும் மிகுந்தவள். கணவனது அந்தரங்கங்களை எல்லாம் பகிர்ந்து கொண்டு சோதனைக் காலங்களில் துணையாய் நின்று கைகொடுப்பவள்.

முதல் மனைவி அரசனிடம் மிகுந்த விசுவாசம் வைத்தவள். அவனது சொத்து, ராஜ்யம் அனைத்தையும் சரிவர நிர்வகித்து வருபவள். ஆயினும் அவனுக்கு அவளிடம் சிறிதும் பாசமில்லை. மிக அலட்சியத்துடன் அவளை நடத்தினான்.

ஒருநாள் அந்த ராஜா திடீரென்று நோய்வாய்ப்பட்டான். தனது முடிவு நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தவன் மரணத்துக்குப் பின் தனக்கு ஏற்படப் போகும் தனிமையை எண்ணி அஞ்சினான். ஆயினும் தனது மனைவியருள் யாராவது ஒருவர் நிச்சயம் தன்னுடன் வருவார்கள் என நம்பி முதலில் நாலாவது மனைவியை அழைத்துப் பேசினான்.

"உன்னைத்தான் நான் எல்லாரையும் விட உயர்வாக வைத்துக் கொண்டிருந்தேன். பொன்னும் மணியும் பூட்டி



அஹா 50!

கோவில் கட்டட நிதிக்கோ, அல்லது எளியவர்களின் தான தருமத்துக்கோ சமயத்தில் நமக்கு நிதி பற்றாக்குறை ஏற்படலாம். இதைச் சமாளிப்பதற்கு பழைய பேப்பர், புத்தகம், பிளாஸ்டிக் டப்பா முதலியவற்றை, காயலான் கடைக்குப் போட்டுக் கிடைக்கும் தொகை யைத் தனியாக எடுத்து வைத்தால் அவசரத்துக்கு உதவியாக இருக்கும். நம்மால் ஏதோ கொடுக்க முடிந்தது என்ற திருப்தியும் இருக்கும். இதை நான் இரண்டு வருடமாகக் கடைப்பிடிக்கிறேன். நீங்களும் பின்பற்றலாமே!

- வி. சுகுந்தா, கோயமுத்தூர்.

மகிழ்ந்தேன். நான் இறந்தால் நீயும் என்னுடன் வருவாயல்லவா?''

''அதெல்லாம் ஒருபோதும் நடக்காது'' ஒரே வார்த்தையில் தீர்மானமாக அவள் கூறிய பதில் அவனை நோகடித்தது.

அடுத்து மூன்றாம் மனைவியைக் கேட்க அவள் சொன்னாள், "வாழ்க்கை மிகவும் அழகானது. அதை விட்டு விட்டு உன்னுடன் நான் வர முடியாது. நீ இறந்தால் நான் மறுமணம் செய்து கொண்டு என் வாழ்க்கையைத் தொடருவேன்."

இரண்டாமவள், தனக்கு எப்பொழுதும் உதவிக்கரம் நீட்டியவள் கட்டாயம் தன்னுடன் கடைசி வரை வருவாள் என்று எதிர்பார்த்த அரசன் அவளிடமும் கேட்க, ''மன்னித்து விடுங்கள் மன்னா, இம்முறை என்னால் செய்ய முடிந்தது இடுகாடு வரை வந்து வழியனுப்புவது மட்டுமே'' என்று சொல்லி விட்டாள்.

அப்போது ஒரு குரல் அவன் அருகாமையில் கேட்டது. ''அரசே, நீங்கள் எங்கு சென்றாலும் உங்களைத் தொடர்ந்து வர நான் எப்பொழுதும் தயார்'' எலும்பும் தோலுமாக அவனது அலட்சியத்தாலும் அவமதிப்பாலும் சோர்ந்து போன முதல் மனைவிதான் இப்படிக் கூறினாள். அவளது நிலையைப் பார்த்து வருந்திய மன்னன் தனது இத்தனை நாளைய செயலுக்கு வெட்கித் தலைகுனிந்தான்.

நாம் அனைவருமே இப்படித்தான்! நமக்கு வாழ்க்கையில் நான்கு மனைவிகள். நாலாவது மனைவிதான் நமது உடல். எவ்வளவுதான் போஷாக்காக வைத்துக் கொண்டாலும் நாம் இறக்கும் போது நம் கூட வராது.

மூன்றாம் மனைவிதான் - நமது சொத்து சுகங்கள். நமக்குப் பிறகு பிறரிடம் போய்விடும்.

இரண்டாம் மனைவி - நமது சொந்தபந்தங்கள் - அதிகபட்சம் இடுகாடு வரை வருபவை.

முதல் மனைவிதான் நமது ஆன்மா. நம்மால் எவ்வளவு அலட்சியப்படுத்தப் பட்டாலும் கடைசிவரை உடன் வரும்.

- சுமித்ரா கல்யாணராமன்,
பெசன்ட்நகர்.



நான் ஸ்டிக்
என்றாலே
மரக்கரண்டிகள்
தானா ?
Unique 3 layer coating
enables scratch resistance
Metal spoons
இல்லை! இதோ வந்து விட்டது Premier Astral நான் ஸ்டிக் குக்வேர். மரக்கரண்டிகள் தான் உபயோகிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. 3 முறை கோட்டிங் செய்திருப்பதால் திடமான மேற்பூச்சு கொண்டது. ஸ்டீல் கரண்டிகளை தாராளமாக உபயோகிக்கலாம். கீறல் விழாது. நீடித்து உழைக்கும். அழகிய வடிவமைப்பு.
SS & premier are registered Trade Mark of S. Sivanesan &Co., Chennai, India
Premier
Astral Non-Stick Scratch Resistant Cookware
Marketed by
PREMIER MARKETING
289, P. H. Road, Chennai - 600 007.
CHENNAI Ph : 044-26421924
TRICHY Ph : 0431-2761355
MADURAI Ph : 0452-2632782
TIRUNELVELI Ph : 0462 - 2320740

பரதமும் பால்பாயசமும்!



• அப்துல்கலாமுடன்...

'**யா**தும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதை, பிரபல நடனக் கலைஞர் பத்மா சம்பத்குமாரன் விஷயத்தில், அப்படியே மாற்றி, 'யாதும் ஊரே; யாவரும் சிஷ்யைகள்' என்று சொல்லி விடலாம் போல! இவர் வசிப்பது டெல்லி ஜனக்புரியில் என்றாலும், இவருக்கு உலகம் முழுக்க மாணவிகள்!

அமெரிக்கா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மன், இஸ்ரேல், இத்தாலி, ஃபின்லேன்ட் போன்ற நாடுகளிலிருந்து பரதநாட்டியம் கற்க விரும்பி, மாணவிகள் இந்திய கலாசார அமைப்புக்கு விண்ணப்பித்தால், உடனே அவர்கள் அனுப்புவது பத்மா சம்பத் குமாரனின், நிருத்யம் நாட்டியம் மற்றும் கலாசார மையத்தைத்தான்!

"நான் பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை, நீலா பாலசுப்ரமணியம் ஆகியோரிடம் பரதம் கற்றேன். திருமணத்துக்கு முன் நிறைய நாட்டிய நிகழ்ச்சிகள் தந்திருக்கிறேன். என் கணவர்



மணக்கும் மல்லிகை!

என் வீட்டுத் தோட்டத்தில் மல்லிகைச் செடி முற்றிய இலைகளோடு பூச்சி அரித்து பார்க்கவே அருவருப்பாய் இருந்தது. அதன் இலைகளை உருவி, அதன் வேரில் போட்டு, வீட்டுக்குள் டப்பாவில் பூச்சி வந்து விட்ட மீல்மேக்கரை மல்லிகைச் செடிக்கு உரமாகப் போட்டு தண்ணீர் ஊற்றி வந்தேன். இப்போது செழுமையாய் வளர்ந்து வாசல் வரை மணக்கும் மல்லிகைப் பூக்கள் ஏராளமாய்ப் பூக்கிறதே!

- ஜி. ஜெயலெட்சுமி, சிட்லபாக்கம்.

ஆஹா 50!



சம்பத்குமாரன், சிவில் இன்ஜினியராக இருந்ததால், காஷ்மீர், உ.பி., ம.பி., பெங்கால், பீஹார் என அவ்வப்போது பணி மாற்றம் ஏற்படும். அவர் போகு மிடத்தில் எல்லாம் நடன வகுப்புகள் நடத்தத் தொடங்கியதில், கிட்டத்தட்ட முப்பது வருட நடனப் பயிற்சி அனுபவம் கிடைத்து விட்டது. விசாகப்பட்டினம் இரும்பாலையில், இவர் பணியாற்றிய போது, அங்கிருந்த ரஷ்யன் காலனிப் பெண்கள், நிறையப் பேர், பரதநாட்டியம் கற்க ஆர்வமாக இருந்தார்கள். அவர்களுக்கு நாட்டியம் சொல்லித் தர வேண்டும் என்பதற்காகவே, ரஷ்யன் கலாசார அமைப்புக்குச் சென்று, ரஷ்ய மொழியைக் கற்றுக் கொண்டேன்'' என்று சொல்லும் பத்மா சம்பத்குமாரனுக்கு நிறைய மொழிகள் அத்துபடி!

பாலசரஸ்வதி விருது, நாட்டிய ரத்னா, நிருத்ய சிரோண்மணி, நிருத்யஸ்ரீ என நிறைய விருதுகள் அள்ளியிருக்கும் இவர், குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் முன்னிலையில் நாட்டிய நிகழ்ச்சியொன்றை நடத்தியதை வாழ்வின் பெரும்பேறாக நினைக்கிறார்.

"'இறைவா, நல்வாழ்வு' என்ற அப்துல் கலாமின் தேசபக்தி கவிதை, விபீஷண சரணாகதி, பிலிப்பைன்ஸ் நாட்டு இசையும், இந்திய நாட்டுப்புறப் பாடலும் கலந்ததொரு ஃப்யூஷன் நடனம், என நான் அமைத்திருந்த நாட்டியத்துக்கு, என் மாணவிகள் ஆடியபோது, குடியரசுத் தலைவர் மிகவும் ரசித்தார்..." என்று பெருமைபொங்கச் சொல்கிறார் பத்மா.

இவருடைய பள்ளிக்கு என ஹாஸ்டல் விடுதி இல்லாததால், வெளிநாட்டு மாணவிகள் இவரது இல்லத்திலேயே தங்கி, குருகுலம் பாணியில் நடனம் கற்கிறார்கள்.

''பரதம் கற்க வரும் பெண்கள், நாளடைவில் தக்காளி ரசம் முதல் பால் பாயசம் வரை தமிழ் சமையலையும் சேர்த்துக் கற்றுக் கொண்டு விடுவார்கள். அழகாக ஆடிக் கொண்டே, கலையாகச் சமைக்கவும் தெரிந்த பெண்களுக்கு, வெளிநாட்டில் நல்ல டிமாண்டாம்!'' என்று சிரிக்கிறார் பத்மா சம்பத்குமாரன்.

- எம். ஜெயஸ்ரீ, நியூடெல்லி

என்னை விட்டுப் போகாதே!



"உனக்குக் கல்யாணம் ஆயிருச்சா, திலக்?"

மாதங்கியின் கேள்வி அவனை நிமிர்த்தியது.

"இல்ல" என்றான், திலகன்.

"ஏன் திலக்? பொம்பிளைங்கன்னாலே வெறுத்திருச்சா?"

அவன் கண்களைப் பார்க்காமல், பொய்யாகப் புன்னகை செய்தான்.

"அதைப் பத்திலாம் யோசிக்கிற அளவு நேரமில்லாத வேலையைத் தேடிக்கிட்டேன், மாதங்கி..."

அந்தப் பதில் அவளைச் சற்று நேரம் மௌனமாக வைத்திருந்தது. திடீர் சந்தேகத்துடன் அவள் கேட்டாள். "பூபதி பொழைச்சிருவார்னு டாக்டர் நெஜமாவே சொன்னாரா?"

"ஆமா, மாதங்கி."

"அவருக்கு உடம்பு சரியானதும், உன் கம்பெனில கரண்டி பிடிக்கற வேலை யாவது தருவியா, திலக்?" உதடுகளைக் கடித்து அழுகையை அடக்கியபடி கேட்டாள்.

திலகன் அவள் பார்வையைத் தவிர்த்தான்.

"போலாமா?" என்று பில்லுக்கான பணத்தை வைத்து விட்டு எழுந்தான்.

"மறுபடி என்னைப் பார்க்க வருவியா? இல்ல, பணம் மட்டும் கொடுத்தாப் போதும்னு நெனைச்சிருக்கியா?"

நம்பிக்கையில்லாமல் மாதங்கி கேட்ட போது, அந்தக் கண்களில் தெரிந்தது ஏக்கமா? சந்தேகமா? கவலையா? திலகனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சுபா 3

இரவு. கட்டிலில் திலகன் தூக்கமின்றி அமர்ந்திருந்தான். ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் பதித்திருந்தான்.

சாலையின் மறுபுறம் இருந்த நியான் விளம்பரத்தில், குழல் விளக்குகள் அவன் வாழ்க்கையைப் போல் எழுத்துகளை எழுதி அழித்து மீண்டும் எழுதின.

பூமிக்குள் புதைத்துவிட்டு மறந்தே விட்ட பிணத்தின் கை திடீரென்று பொத்துக்கொண்டு வெளியே நீள்வது போல், மாதங்கி இடறியிருக்கிறாள்.

"மறுபடி என்னைப் பார்க்க வருவியா?"

மாதங்கியின் குரல் அவன் காதோரம் கிசுகிசுப்பதைப் போல் இருந்தது.

வேண்டாம். மூடிவிட்ட கதவை நானாகத் தேடிப் போய்த் திறக்கப் போவதில்லை. அதற்காக அவளை நட்டாற்றில் கைவிடவும் போவதில்லை. அவள் கணவன் சிகிச்சைக்காகத் தேவைப்படும் பணத்தை, குறை வைக்காமல் கொடுக்கப் போகிறேன். என்னைப் பார்க்க வேண்டும் என்ற அவசியம் வந்தால், அவளாகத் தேடி வரட்டும்.

வெகு உறுதியாகத்தான் மனம் கட்டளையிட்டது.



ஆனால், இரண்டாவது நாள் கால்கள் தாமாக திசைமாறி அரசு மருத்துவமனைக்கு இழுத்துப் போயின.

நானொன்றும் அவளைப் பார்க்கப் போகவில்லை. என் பொறுப்பில் இருக்கும் ஒரு நோயாளியின் நிலைமை பற்றி டாக்டர் ரமணனைச் சந்தித்து விசாரிக்கப் போகிறேன். அவ்வளவுதான்.

அவன் சொல்லிக்கொண்ட சமாதானம் அவனையே கேலியாகப் பார்த்துச் சிரித்தது.

டாக்டர் ரமணன் திலகனைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

''பூபதியை ஸ்பெஷல் வார்டுக்கு மாத்தியிருக்கீங்கனு சொன்னாங்க... ரொம்ப தாங்க்ஸ். டாக்டர்...''

ஸ்பெஷல் வார்டில், ஐந்து படுக்கைகள்

போடப்பட்டிருந்தன. ஒரு படுக்கைக்கும் இன்னொரு படுக்கைக்கும் நடுவில் மெல்லியதாக ஒரு திரை. அங்கு தனிமையை யாரும் எதிர்பார்க்காததால், அந்தத் திரைகள் பெரும்பாலும் திறந்தே கிடந்தன.

முதல் படுக்கையில் மாதங்கியின் கணவன் பூபதி கிடத்தப்பட்டிருந்தான். எலும்புகள் துருத்தியிருந்த அவன் நெஞ்சுக்கூட்டை அவள் ஈரத்துணி



ஆடைகளில் படும் கறையைப் போக்க கடுகுப் பசையை, (கடுகை மிக்ஸியில் பொடி செய்து சிறிதளவு நீர் விட்டுக் கலந்து கொள்ளவும்) அவற்றின் மீது பூசி வைக்கவும். மறுநாள் குளிர்ந்த தண்ணீரில் அலசினால் கறைகள் காணாமல் போகும்.

- லக்ஷ்மிதேவி,
பவானி.

கொண்டு துடைத்துக் கொண்டிருந்தாள்.

மாதங்கி இப்போது அணிந்திருந்த புடைவை கண்ணியமாக இருந்தது. பூபதியின் தலை வாரப்பட்டிருந்தது. தாடி இருந்தாலும் முகத்தில் கொஞ்சம் தெளிவு கூடியிருந்தது.

திலகன் கொடுத்துவிட்டுப் போன பணம் பயன்பட்டிருக்கிறது என்று தோன்றியது.

மாதங்கி நிமிர்ந்தாள். திலகனைப் பார்த்ததும் கண்களில் ஒளி துள்ளித் திரும்பியது.

"திலக்... வா, வா"

மாதங்கியின் குரல் பூபதியிடம் சிறிய அசைவைக் கொண்டு வந்தது. மெல்லக் கண்களைத் திறந்தான்.

அவள் பூபதியிடம் திலகனைக் காட்டினாள். "கடவுள் மாதிரி ஒருத்தர் வந்து நமக்கு உதவறாருன்னு சொன்னேனே... இவர்தான்"

"திலகன்?" என்றான், பூபதி உடைந்த குரலில்.

"ஆமா... உங்களுக்கு இந்த ரூம் வாங்கிக் குடுத்தது, மருந்துச் செலவுக்கெல்லாம் பணம் கட்டிட்டிருக்கிறது எல்லாமே இவர்தான்."

கைகளைக் கஷ்டப்பட்டுத் தூக்கி மார்பின் மேல் வைத்து கும்பிட்டான், பூபதி.

திலகன் என்ன பேசுவது என்று புரியாதவனாக, கொண்டு வந்திருந்த பழங்களை மாதங்கியிடம் கொடுத்தான்.

"எதுக்கு திலகன், இவ்வளவு பழம்...?" என்று மாதங்கி ஆச்சரியமானாள்.

"ம்? எல்லாருக்கும் கொடேன்..." என்று வார்டிலிருக்கும் மற்றவர்கள் மீது திலகன் பார்வையை ஓட்டினான்.

மூன்றாவது கட்டிலில் கிடந்த பெண்ணுக்கு இருபது வயதிருக்கலாம். எலும்பு முறிவுக்கான கட்டு போட்டு அவள் கால் தொங்க விடப்பட்டிருந்தது.

அவள் அருகில் நின்றிருந்த குருக்கள் ஒருவர் அந்தப் பெண்ணின் நெற்றியில் திருநீறை இட்டார்.

மாதங்கி, திலகனிடம் இயல்பான குரலில் அறிமுகம் செய்தாள்.

"குருக்களோட பொண்ணுதான் இவ. பள்ளம் தோண்டி வச்சிருக்கிறதைப் பார்க்காம, ஸ்கூட்டரை விட்டு, வாரியடிச்சு விழுந்திருக்கா. மூட்டு எலும்பு புரண்டுடுச்சாம். அதனால ரெண்டு வாரம் டிராக்ஷன்ல இருக்கணும்னு சொல்லிட்டாங்க..."

குருக்கள் கையில் இருக்கும் விபூதிப் பொட்டலத்தை ஒவ்வொரு கட்டிலாகக் கொண்டு சென்று காட்ட, விருப்பமான

வர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

மாதங்கி கொஞ்சம் எடுத்து பூபதியின் நெற்றியில் இட்டு விட்டாள்.

அந்த அறையில் கட்டிலில் முழங்காலிட்டு தொழுகை முடித்திருந்த ஒரு முஸ்லிம் பெரியவரிடம் குருக்கள் தயங்கி நின்றார். மற்றவர்களுக்குக் கொடுத்து விட்டு, அவரை எப்படிப் புறக்கணிப்பது என்ற தயக்கம். பெரியவர் தாடியைத் தடவிக் கொண்டார். அன்பாகப் புன்னகை காட்டி விட்டு, குருக்கள் கையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீறை அவர் தன் கையில் எடுத்தார்.

"இவர் மெத்தை தெச்சு விக்கிற ஒரு கடை வெச்சிருக்கார். ஊருக்கெல்லாம் மெத்தை தெச்சு குடுத்திட்டிருக்காரு. இங்க ஆஸ்பத்திரியில இந்தப் படுக்கையில படுக்கும்படியா இருக்கு..." என்றாள், மாதங்கி.

"என்ன ப்ராப்ளம்?" என்று திலகன் கேட்டான்.

அந்தப் பெரியவர் பேச முயற்சி செய்த போது, இருமல் தாக்கியது. குரல் பலவீனமாக வெளிவந்தது.

"லங்ஸ் போயிடுச்சுங்க... தெனம் பஞ்சை சுவாசம் பண்ணிட்டிருக்கோமில்ல?"



பாகற்காய் கசப்பு நீங்க : அரிசி களைந்த நீரில் வேகவைத்தாலும், உப்புப் போட்டுக் குலுக்கிப் பிழிந்து எடுத்து விட்டு சமைத்தாலோ கசப்பு நீங்கிவிடும்.

- ஜானு,
சென்னை - 23.

அடுத்த கட்டிலில் படுத்திருந்தவருக்கு நாற்பத்தைந்து வயதிருக்கலாம். ஒரே கோணத்தில் படுத்திருந்தார். பக்கத்தில் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தவள் அவருடைய மனைவியாக இருக்க வேண்டும்.

"இவர் கட்பீஸ் வியாபாரம் பண்றவரு. திடீர்னு பக்கவாதம் வந்து விழுந்துட்டாரு... இருபத்து நாலு மணி நேரமும் இவங்கதான் பொறுப்பா, புருஷனைப் பார்த்துக்கறாங்க..."

மனைவி என்றால், கணவனைப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவளுடைய கடமை என்று மாதங்கி அடுத்தவளைக் காட்டி, தன்னிலை விளக்கம் கொடுக்கிறாளா?

ஒவ்வொருவரிடமும் திலகன் ஆறுதலாகப் புன்னகைத்தான்.

புதிதாக வந்து சேர்ந்த கிழவி அவனைக் குறுகுறுப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இவங்களுக்கு இருதயத்துல பிரச்னை. ரெண்டு ஆபரேஷன் ஆயிடுச்சு."

"ஆமா தம்பி... எப்ப இங்க இருப்பேன், எப்ப ஐசியுவுக்குத் தூக்கிட்டுப் போவாங்கன்னு எனக்கே தெரியாது..." என்று கிழவி நிர்மலமாகச் சிரித்தாள்.

"பசங்கல்லாம் பாரின்ல நல்லா சம்பாதிக்கறாங்களே... ஏதாவது பிரைவேட் ஹாஸ்பிடலுக்குப் போக வேண்டியதுதானேன்னு கூடக் கேக்கறாங்க... அங்கல்லாம், தனியா ஒரு ரூமைப் போட்டு, டீவியை ஓட விட்டுருவாங்க. பேச்சுத் துணைக்கு ஆளு இல்லாம, அநாதையா உக்காந்திருக்கணும். அது எனக்கு ஒத்து வராது."

கிழவியின் முகத்தில் நூறு சுருக்கங்கள் சேர்ந்து விட்டாலும், அவளிடம் ஏதோ ஒரு வசீகரம் இருந்தது.

எல்லோரையும் பார்த்துப் பொதுவாகப் புன்னகை செய்து விட்டு, இலகன் "நான் புறப்படவா?" என்று கேட்டான்.

மாதங்கி மனமேயில்லாதது போல்



அழுக்கடைந்த காலணிகளின் மீது இரவில் டிங்சரை தடவி வைத்து, மறுநாள் காலையில அழுந்தத் துடைத்து விட்டால் அவை பளிச்சென்று புத்தம் புதிது போல ஆகிவிடும்.

- சு. கலாவதிமணியன், பெரணமல்லூர்.

தலையை அசைத்தான். வாசல் வரை அவனுடன் நடந்தாள்.

"இந்த ரூம்ல இருக்கறவங்க எல்லாம் என்கிட்ட ரொம்ப அன்பா இருக்காங்க, திலக். அதென்னவோ தெரியல... உன்னைப் பார்க்கற வரைக்கும் எல்லாருமே என் கண்ணுல கெட்டவங்களாத் தெரிஞ்சாங்க. இப்ப எல்லாருமே நல்லவங்களாத் தெரியறாங்க..."

கண்களில் திரண்டிருந்த நீர்முத்துக்கள் வெளியே சிந்தி விடாமல், அவள் கவனமாக இருந்தாள்.

திலகன் அந்த விழிகளைத் தொட்டுத் துடைக்கும் தைரியமின்றி, மெல்ல பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

"வரேன்."

"பார்த்தா நல்ல புள்ள மாதிரி தெரியுது. அதுதான் எல்லா உதவியும் செய்யுதா, கண்ணு?" என்று ஒழவி குரல் கொடுத்தாள்.

திலகன் காரிடாரில் நடந்து செல்வதைக் கனத்த மனத்துடன் பார்த்துக்கொண்டிருந்த மாதங்கி திகைத்துத் திரும்பினாள்.

பூபதி அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். 'இங்கே வா' என்பது போல் தலையை அசைத்துக் கூப்பிட்டான்.

மாதங்கி அவனை நெருங்கினாள். பூபதி அடிக்கண்ணால் அவளை நோண்டுவது போலப் பார்த்துக் கேட்டான் :

"வந்திட்டுப் போறவனை உனக்கு எப்படிப் பழக்கம்னு சொன்னே?"

மாதங்கி சற்றுத் தடுமாறினாள். "தெரிஞ்சவர்..." என்றாள்.

புரிந்து விட்டது போல் பூபதி தலையை ஆட்டினான். இரண்டு கைகளின் விரல்களையும் நெருக்கமாகக் கோத்துக் காட்டினான்.

"இந்த அளவுக்குத் தெரியும்னு வச்சுக்கலாமா?"

(தொடரும்)

குருமாவிற்கு தேங்காய் அரைக்கும் போது தேங்காயுடன் இரண்டு முந்திரியையும் சேர்த்து அரையுங்கள். குழம்பின் ருசியும் மணமும் பிரமாதமாய் இருக்கும்.

- கே. ரேகா, தேனி.



“கணவன் மனைவி இருவருக்கும் ஒரேவிதமான ரசனை, ஆர்வம் இருந்தால் இல்லறம் இனிக்குமா அல்லது போரடிக்குமா?”

பட்டிமன்றத் தலைப்பல்ல... நான் கேட்ட கேள்விதான் இது.

“அவரவர் ரசனை அவர்களுக்கு... அதை மதித்து நடந்தாலோ கண்டுக் காமல் போனாலோ நோ பிராப்ளம்...” என்கிறார்கள் ஒருமித்த குரலில் இந்த இளைய தம்பதி.

“ரசனைகளின் இணைப்பு என்பதை எல்லாம் விட இதயங்களின் இணைப்பு இருந்து விட்டால் போதும். இனிய இசையாய் இல்லறம் ஒலிக்கும்...” என்று சொல்லும் இந்த இனிய தம்பதி, முன்னணி இசைக் கலைஞர் கலைமாமணி ஓ.எஸ். அருண், ஹேமா அருண் இருவரும்தான்....

டெல்லியில் பிறந்து வளர்ந்து, இசையையே பாடமாய் எடுத்து, டெல்லி பல்கலைக்கழகத்தில் படித்தவர் ஓ.எஸ். அருண்...

சென்னையில் பிறந்து வளர்ந்து, இங்கே சென்னை பல்கலைக்கழகத்தில் இசைப்பாடம் படித்தவர் ஹேமலதா அருண்...

“எங்களுடைய திருமணம் முறைப்படி ஜாதகம், பெண், பார்த்து பெரியவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதுதான்” என் கிறார் அருண்

“ஒருமுறை ஒரு மருத்துவர் சொன்னார் :

நிறைய பெற்றோர்கள் தம் குழந்தைகள் அறிவில், விளையாட்டில், படிப்பில் முதலாவதாக இருக்க வேண்டும், பெருமைப்பட வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர,



“இதயங்கள் இணையணும்!”

ஆரோக்கியமாக வளர்கிறார்களா என்று பார்ப்பதில்லை...” என்றார். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையாவது சிலர் கவனிப்பார்கள். ஆனால் மன ஆரோக்கியம்....?

பெரியவர்கள் வாழ்த்தும் போது, “தீர்க்காயுசா இரு” என்பார்கள்...

“தீர்க்காயுசின் அடிப்படை ஆரோக்கியமான மனசு அல்லவா...?”

“மன ஆரோக்கியத்தின் அடிப்படை.... பிறந்து வளரும் சூழ்நிலையில்தான் இருக்கிறது” நாங்கள் இருவருமே கூட்டுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் கள்தான்... மனிதர்களின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்கள்... குறை நிறைகளை அனுசரித்துப் பழகியவர்கள்... பெரியோரின் ஆசி, அவர்களின் அன்பு இவற்றை முழுமையாக உணர்ந்தவர்கள்... இவைதான் எங்கள் இனிய இல்லறத்தின் அடித்தளம்” என்கிறார்கள் அருணும், ஹேமாவும்...

இசைக் கலைஞர் ஓ.வி. சுப்பிரமணியத்தின் மகன் அருண்... ஆறு சகோதரர்

கன், ஒரு சகோதரி, அருண்தான் கடைக் குட்டி. குடும்பத்தில் அனைவருமே இசைக் கலைஞர்கள்.

இவரது சகோதரர் ஓ.எஸ். தியாகராஜனின் இசை சாதனைகள் நாம் அறிந்ததே!

"எங்கள் குடும்பமே பெரிசு... தவிர வந்து போகும் உறவினர்கள், நண்பர்கள் என எப்போதுமே எங்கள் வீட்டில் கல்யாணக் களைதான்... இந்தப் பெருமை முழுவதும் என் அம்மாவையே சேரும். எந்தப் பிரச்னையையும் பெரிசு பண்ணாமல் கேஷுவலாக எடுத்துக் கொண்டு, வீம்பு வளர்க்காமல் கலகலப்பாக வாழ்வதற்கு எனக்குக் கற்றுத் தந்தது என் குடும்பம்தான்...'' என்கிறார்.

இனிய தம்பதி -6




• ஓ.எஸ். அருண்-ஹேமா அருண் மகள் ஹர்ஷிணியுடன்...

ஒரு நகைச்சுவைக் கதை... இசைக் கலைஞர் ஒருவர் இருந்தார்... அவர் மிக நன்றாகப் பாடுவார்... அவரது மனைவிக்கு ஏதாவது இசைக்கருவி கற்பிக்கும் ஆசை அவருக்கு வந்தது... ஒரு நண்பர் மூலம் மனைவிக்கு வீணை வாங்கித் தந்தார்.

ஒரு வருடம் கழித்து, நண்பர், அந்த இசைக் கலைஞரை சந்தித்தார்...

''என்னப்பா... உன் மனைவியின் வீணைத் திறன் எவ்வளவு தூரம் இருக்கு?''

"நான் இப்ப அவளுக்கு புல்லாங்குழல் வாங்கிக் கொடுத்துட்டேன்!"



அழகுக்காகவும், சொகுசுக்காகவும் வீட்டு பாத்ரூமில் கிரானைட், டைல்ஸ், மார்பிள் போன்றவற்றால் தரையைப் போட்டு விடுகிறார்கள். நான் சமீபத்தில் ஒரு ஆர்த்தோ டாக்டரைப் பார்க்கச் சென்ற பொழுது, சிறிய குழந்தைகள் முதல் மிக வயதானவர்கள் கூட பலர், இப்படிப்பட்ட பாத்ரூமில் சறுக்கி விழுந்து பல இடங்களில் அடிபட்டு, எலும்பு முறிவு சிகிச்சைக்காக வந்தவர்கள்தான். இப்படிப்பட்ட பாத்ரூமில் பெரிய, பெரிய கோடு போட்ட ரப்பர் ஷீட் மேட்டைப் (கார்களில் போடும் தடிமனானவை) போட்டு வைத்தால் பாதுகாப்பாக இருக்கும்.

- ஜானகி வெங்கடேஸ்வரன், மைலாப்பூர்.

"அட! ஏம்ப்பா...?"

"புல்லாங்குழல் வாசிக்கும் போது அவன் பாட மாட்டான் அல்லவா...?"

இந்தக் கதையில் வரும் மனைவி போலன்றி, அருணின் மனைவி ஹேமாவும் மிகச் சிறந்த பாடகி...

அருண், நாடு நாடாகப் பறந்து உலக மேடைகளில் எல்லாம் பாடி புகழ் சேர்த்து, வெற்றிகளைக் குவிக்க, ஹேமா ஓர் இசைப் பள்ளி நடத்துகிறார்... கணவருக்குத் தேவையானவற்றை முழுவதும் கவனிக்கிறார். சங்கீதக் குறிப்புகள் எடுத்துத் தருவதில் இருந்து சமையல் வரை...

ஹேமா, மிகச் சிறந்த விமர்சகரும் கூட... கச்சேரிகளில் சிறிதளவு சுருதி பேதமானாலும் சுட்டிக்காட்ட இவர் தவறுவதே இல்லை. சுப்புடு அவர்களால் பலமுறை பாராட்டுப் பெற்ற ஓ.எஸ். அருண்... அந்த மாபெரும் இசை விமர்சகரால் 'ஜுவல் ஆஃப் டெல்லி' என்று பாராட்டும் பெற்ற அருண்...

"சங்கராபரணத்தில் இந்த இடத்தில் ஒரு ஸ்வரம் பிசகின மாதிரி இருந்ததே..." என்று ஹேமா கேட்டு விடக்கூடாதே என்று அலாதி கவனத்துடன் ஒவ்வொரு முறையும் கச்சேரி செய்கிறார்...

அருண் மிகவும் கலகலப்பானவர்...

மனைவி ஹேமாவிடமும் ஐந்து வயது மகள் ஹர்ஷிணியிடமும் மட்டும் அல்ல அவரது கலகலப்பு. தனது உதவியாளர், வீட்டில் வேலை செய்வோர் என்று அனைவரையுமே சமமாகப் பாவித்து எல்லோரிடமும் ஜோவியலாக வளைய வருபவர் அருண்.

"ஆமாம்! ஈகோ வளர்த்துக் கொண்டு, சிடுமூஞ்சித்தனமாக யாருடனும் பேசாமல், யாரோடும் மனசு விட்டுப் பழகாமல், உம்மென்று இருந்து நாம் இறுதியில் எதை எடுத்துச் செல்லப் போகிறோம்? அன்புதான் மிகச் சிறந்த உற்சாக டானிக். என் தாயார் இன்று இல்லை என்றாலும் எங்களது குடும்பத்தின் அன்புப் பிணைப்பு இன்னும் இறுக்கமாகத் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. இந்த ஒற்றுமைப் பின்னணியில் வளரும் என் மகள் ஹர்ஷிணியும் ஆரோக்கியமான மனசுடன்தான் வாழ்க்கையை எதிர்கொள்வாள்..."

அருண் சொல்வதும் சரிதானே!

லியோ டால்ஸ்டாய் தமது அன்னா கரீனினா நாவலில் முதல் அத்தியாயத்தில்

முதல் வரியில் கூறுகிறார்...

"உலகில் சந்தோஷமான குடும்பங்கள் எல்லாமே ஒரே மாதிரிதான் இருக்கின்றன... சந்தோஷம் இல்லாத குடும்பங்களுக்குத்தான் பல காரணங்கள்..."

சந்தோஷத்தைக் கெடுக்கிற மனக் கோணல்கள் பலவிதம்தானே!

விபத்து, நோய்கள் என்றெல்லாம் மனித வாழ்வில் பிரச்னைகள் வரும்.... தவிர்க்க முடியாதவைதாம்... ஆனால் ஒரே வீட்டுக்குள் இருந்து கொண்டு, "நீ அப்படிச் சொன்னே... இப்படிச் சொன்னே... கிழக்கு பார்த்து நின்னே..." என்றோ,

"உன் பொண்ணு இப்படி இருக்கான்னா எல்லாம் நீ வளர்த்த லட்சணம் அப்படி...' என்றோ, குதர்க்கமாய்க் குத்திக் காட்டி பேசுவது, வீடு தேடி வருபவர்களை முகத்திலடித்தாற்போல நடத்துவது,

"உங்க வீட்டு மனுஷாதானே... நீயே கவனிச்சுக்க..." என்று அலட்சியப் படுத்துவது...

"இதெல்லாம் அல்பத்தனம்தான்; நல்ல குடும்பத்தில் நல்ல மனநிலையில் வளர்ந்தவர்கள் நிச்சயமாய் அல்பத்தனமாய் நடக்க மாட்டார்கள்... பெருந்தன்மையாகத்தான் இருப்பார்கள். ஒருவர் குணக்கேடாய் நடந்தால் அவர்கள் வளர்ப்பில்தான் கோளாறு" என்கிறார் ஹேமா.

"சங்கீதம் எங்களை இணைத்தது என்றால் சந்தோஷம் எங்கள் வாழ்க்கையை இணைத்திருக்கிறது. அதற்கு முக்கியக் காரணமே அடிப்படையான நகைச்சுவை உணர்வுதான். எத்தனை பெரிய பிரச்னை வந்தாலும் அதை எளிதில் எதிர்கொள்ள முடிகிறது" என்று கூறுகிறார்கள் ஓ.எஸ். அருண் தம்பதி...

அவர்களுக்கு சங்கீதமாய் ஒரு 'ஓ' போடலாமா...?

- பத்மினி பட்டாபிராமன்

படம் : ஸ்ரீஹரி


Somnath

மெஜஸ்டிக் டூர்

பஞ்ச துவாரகா யாத்ரா



Dwaraka



2006 Gujarat Tourism Year

GUJARAT TOURISM

GUJARAT TOURISM

(A Govt. of Gujarat Undertaking)

Tourism Complex, Wallajah Road, Chennai - 600 002.

Tel No. 25366613 Res : 24794159 E-mail : gujarattourism@vsnl.net

பஞ்சதுவாரகா யாத்ரா (14 நாட்கள்)

சென்னையிலிருந்து புறப்படும் நாட்கள் : 12.8.06, 28.8.06

பார்க்கும் இடங்கள் : தாகோர், துவாரகா, பெய்ட் துவாரகா, கங்கரோலி, நாத் துவாரகா (அனைத்து துவாரகை), சோம்நாத் ஜோதிர்லிங்கம், உதய்ப்பூர், புஷ்கர், மவுண்ட் அபு, அம்பாஜி மற்றும் அகமதாபாத்.

கட்டணம் : நபர் ஒருவருக்கு ரூ.9,800/- (ஏசி பஸ், தங்கும் வசதி, உணவு, II Sleeper Train Fare) (சென்னை - பரோடா, அகமதாபாத் - சென்னை நவஜீவன் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதியுடன், Non-A/c Deluxe பேருந்து, டீலக்ஸ் டபுள் ரூம் (இரண்டு நபருக்கு), தென்னிந்திய சைவ உணவு, கைடு சர்வீஸ், நுழைவு கட்டணம் ஆகியவை இதில் அடங்கும்.

இதர விவரங்களுக்கு Deputy Manager (Marketing)-ஐ மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

Amar Tours, Salem : Ph.2416647 or Cell : 9842713222 ★ Sree Sudha Travels, Bangalore : Ph.26529289, 94481 19290 ★ Manohar Travels, Erode : 2223580, 9443380154 Majestic Tours, Coimbatore : 0422-2553955 ★ Metro Travels, Madurai : 0452-2643640, 9841136563 ★ Travel Times, Chennai : Ph. 28461579, 31150567, 28461213

புற்றுநோய்க்கு தெய்வீக

பத்தியம் இல்லை!

இயற்கை மூலிகை மருத்துவம்

பக்கவிளைவு இல்லை!



புற்றுநோய்க்கு காரணம்!

நமது உடலில் பழைய செல்கள் அழிந்து, புதிய செல்கள் இயற்கையாகவே ஒரு கட்டுப்பாட்டில் உருவாகின்றன. ஆனால் சில செல்கள் எவ்வித கட்டுப்பாடுகளின்றி உடலில் எந்த இடத்திலும் வளர ஆரம்பித்து, பின்னர் கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். நமது தவறான பழக்க வழக்கங்கள் மற்றும் அதிகமான ரசாயண உரங்கள் மூலம் கிடைக்கும் உணவு பண்டங்களை உண்பதாலும், பலவிதமான புற்றுநோய்கள் வருகின்றன. இதற்கு என்று தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. ஆகவே ஏதாவது உபாதை தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால் புற்றுநோய் இருக்க வாய்ப்புகள் அதிகம். எங்களது தெய்வீக மூலிகை மையம் மூலமாக புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

Dr. M.குருபரன் & Dr. M.சபாபதி S/o Dr. M.மாணிக்கவாசகம்

CKM தெய்வீக மூலிகை மையம்

தலைமை முகவரி : PB No.30, 1, திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர்-635 601

✆ 04179-222769 செல் : 94441 61670, 94444 07638

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை-600 010.

✆ 044-26424285, 26427638, செல் : 94440 01447

டாக்டரை முகாமில் நேரில் சந்திக்க ஒவ்வொரு மாதமும் 2ந் தேதி - வேலூர், காஞ்சிபுரம், 4ந் தேதி - கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, 7, 8ந் தேதி - மும்பை, 9ந் தேதி - பெங்களூர், 12ந் தேதி - சேலம், ஈரோடு, திருப்பூர், 13ந் தேதி - கோவை, உடுமலைபேட்டை, 14ந் தேதி - மதுரை, திருநெல்வேலி, 15ந் தேதி - விருதுநகர், தஞ்சாவூர், 16ந் தேதி - திருச்சி, கரூர், 20, 21ந் தேதி - புதுடெல்லி, 26ந் தேதி - சிதம்பரம்.


வண்ணக் கோலங்கள்!

21 - 1 வரை
(நேர்ப் புள்ளி)




- உஷா நாராயணன்,
சென்னை- 44.

12 புள்ளி 4 வரிசை
4 புள்ளி 4 வரிசை



எஸ். ஜானகி,
திருப்பூர்.

9 புள்ளி 9 வரிசை



- வே. சித்ரா,
கும்மிடிப்பூண்டி.



பனீர் தவா டிக்கா

தேவையானவை :

பனீர் - 180 கிராம்,
தயிர் - 250 மி.லி.
புதினா இலை - சிறிது
உப்பு, மிளகுத் தூள் - தேவைக்கேற்ப,
தந்தூரி மசாலா - 20 கிராம்,
வட்டமாக நறுக்கிய
வெங்காயம் - 10 கிராம்,
வட்டமாக நறுக்கிய
குடை மிளகாய் - 10 கிராம்.

செய்முறை :

தயிரை மெல்லியத் துணியில் சிறிது நேரம் வடிகட்டி, கெட்டியாக எடுத்துக் கொள்ளவும். அதில் உப்பு, மிளகுத் தூள், மசாலா சேர்க்கவும். பனீரை சிறிய துண்டுகளாக்கி இதில் அரை மணி நேரம் ஊறவைக்கவும். பின்னர் தோசைக்கல்லில் போட்டு பிரட்டி எடுக்கவும். நறுக்கிய




நட்சத்திர சுவை!

நளபாகம்

சென்னை, செயின்ட்மேரீஸ் சாலையில் உள்ள தி ரெயின் ட்ரீ,' ஒரு இகோ ஃப்ரெண்டலி நட்சத்திர ஹோட்டல். இதன் தலைமை செஃப் ஆர். வினோத்குமாரைச் சந்தித்தபோது, "சுற்றுப்புறச் சூழலை பாதிக்காதவிதத்தில் நடத்தப்படும் ஹோட்டல் இது... பிளாஸ்டிக், பாலிதீன் போன்றவற்றை உபயோகிப்பதில்லை. இச்சிறப்போடு, என்றென்றும் நாவில் ருசிக்கும் தனிச் சுவையும் எங்கள் சிறப்பம்சம்" என்றவர், மங்கையர் மலர் வாசகிகளுக்காக, சில ருசியான ஐட்டங்களைக் கற்றுத் தருகிறார்.





வட்ட வெங்காயம், குடை மிளகாய் வைத்து அலங்கரித்துப் பரிமாற வும்.

மட்டர், பனீர் புர்ஜி

தேவையானவை :

பனீர் - 120 கிராம்,
மட்டர் (பட்டாணி) - 60 கிராம்,
வெங்காயம் -50 கிராம்,
தக்காளி - 50 கிராம்,
பச்சை மிளகாய் - 5 கிராம்,
துருவிய இஞ்சி - சிறிதளவு,
சீரகம் - 5 கிராம்,
கொத்துமல்லி இலை - 5 கிராம்,
மஞ்சள் பொடி - சிறிது,
எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

செய்முறை :


அடுப்பில் வாணலியில் எண்ணெய் ஊற்றி, சீரகம், வெங்காயம், இஞ்சி, தக்காளி, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். பட்டாணியையும் வதக்கவும். பனீரைத் துருவிக் கொள்ளவும். துருவிய பனீரையும் சேர்த்து வதக்கவும். கொத்துமல்லித் தழை தூவி அலங்கரித்துப் பரிமாறவும்.

க்ரில்டு வெஜிடபிள்ஸ்

தேவையானவை :

ஸீச்சினி - 30 கிராம்,
மஞ்சள், சிவப்பு குடை மிளகாய் - 30 கிராம்,
ரோஸ்மேரி (ஒரு வகை மூலிகை, நறுக்கியது) - 2 கிராம்,
தைம் (இதுவும் ஒருவகை மூலிகை) - 2 கிராம்,
பேஸில் (இதுவும் ஒருவகை மூலிகை) - 2 கிராம்

(மேற்கூறியவை எல்லாம் ஊட்டி காய்கறி விற்கும்





கடைகளில் கிடைக்கும்).

இவை தவிர, கேரட் - 30 கிராம்,
பேபிகார்ன் - 30 கிராம்,
ஆலிவ் ஆயில் - 10 மி.லி.,
மிளகுத் தூள்,
உப்பு - தேவையான அளவு,
துருவிய பூண்டு - 2 கிராம்.

செய்முறை :

கறிகாய்களை நறுக்கவும். ஆலிவ் ஆயில் கலக்கவும். நறுக்கிய மூலிகைகள், துருவிய பூண்டு, உப்பு, மிளகு சேர்த்து எல்லாவற்றையும் சிறிது நேரம் ஊறவைக்கவும். நான்-ஸ்டிக் பாத்திரத்தில் எல்லாவற்றையும் போட்டு, மிதமான தீயில் நன்கு வதக்கவும். சுவையான, சத்தான சாலட் தயார்!

வெண்டைக்காய் மோர்க்குழம்பு

தேவையானவை :


வெண்டைக்காய் - 100 கிராம், தயிர் - 200 மி.லி., இறிய பச்சை மிளகாய் - 2, கறிவேப்பிலை - சிறிது, தாளிக்க எண்ணெய் - 50 மி.லி., தேங்காய் எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன், வற்றல் மிளகாய் - 4, மஞ்சள் பொடி - சிறிது, கடுகு - தாளிக்க, உப்பு - தேவையான அளவு.

செய்முறை : வெண்டைக்காயை நறுக்கிக் கொள்ளவும். மஞ்சள் பொடி, தயிர் சேர்த்துக் கடையவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, மிளகாய் வற்றல், (முழு வற்றலாக) கறிவேப்பிலை தாளித்து, இறிய பச்சை மிளகாய், வெண்டைக்காய் சேர்த்து வதக்கவும். கடைசியில் கடைந்த தயிரை ஊற்றி அடுப்பை சின்னதாக ஒரு நிமிடம் வைக்கவும். தேங்காய் எண்ணெய் மேலாக ஊற்றி, பரிமாறவும்.


- பத்மினி பட்டாபிராமன்

படங்கள் : ஸ்ரீஹரி

சொர்க்கம் தந்த



அமெரிக்காவில் நான் பார்த்த இடங்களிலேயே என்னை மிகவும் கவர்ந்த மாநிலம் மிச்சிகன்தான். 'தி லாண்ட் ஆஃப் கிரேட் லேக்ஸ்' என்று இதைக் குறிப்பிடுவதற்கேற்ப எங்கு திரும்பினாலும் ஏரிகளும், நதிகளும், நீர்வீழ்ச்சிகளும் அவற்றோடு இணைந்த பசுமையும்தான். சாலையோரங்களில் வரிசை கட்டி நின்று பச்சைக் குடைபிடிக்கும் மரங்கள். வேலியோரங்களில் கூட விழித்துப் பார்க்கும் பூச் செடிகள். இந்த மாநில மக்கள் கவனத்துடன் பசுமையைப் பார்த்துப் பார்த்துப் பராமரிக்கும் விதம் மெச்சத் தகுந்தது!



• மெக்கினக் தீவுக்கு... படகுப் பயணம்

அது மட்டுமா... அளவான ஜனத் தொகை, போக்குவரத்து மென்னியைப் பிடிக்காத சுத்தமான சாலைகள், மாசற்ற காற்று... அமைதியான சூழ்நிலை... மே மாதம் இங்கே சுற்றுலா சீசன்.

வாரக் கடைசி விடுமுறை நாட்களைக் குடும்பத்துடன் கழிக்க வாடகைக் கார்களில் சுற்றுலா கிளம்பி விடுகிறவர்களை அதிகம் பார்க்கலாம்.

ஹைவேக்களை நிரப்பிக் கொண்டு நகரும் போக்குவரத்துக்கள் இதை நன்றாகவே விளக்கும். ஏரிகளில் 'போட்டிங்' போக விரும்பி தங்கள் சொந்தப் படகுகளையே காரின் பின்னாலும் மேலும் கட்டிக் கொண்டு போகிற அபூர்வ சாட்சிகளையும் பார்க்கலாம். வாடகைக் கார் எடுத்துக் கொண்டு போவதில் ஒரு அனுகூலம். வழியில் கார் மக்கர் செய்தால், 'ரெஸ்ட் ஏரியாவில்' தள்ளி நிறுத்திவிட்டு டீலருக்கு ஃபோன் செய்தால் மாற்றுக்



அல்வா!



கார் கிடைத்து விடும்.

ஆன் ஆர்பர் என்கிற நகரிலிருந்து நெடுந்தூரப் பயணம் செய்தாலும் கண்ணுக்கு இதம் தரும் பசுமை, மனசுக்குள் புகுந்து உற்சாகமூட்டுகிறது.

'ஸூலாக்ஸ்' என்னும் இடத்தை நெருங்குகையில் ஏரிக்காற்றின் சிலுசிலுப்பு நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. இங்கே ஹ்யூரான் ஏரியும் அதைவிட இருபத்தியோரு அடி அதிக நீர் மட்டம் கொண்ட லேக் சுப்பீரியரையும் இரண்டு பக்கமும் பார்க்க முடிகிறது. பின்னதிலுள்ள நீர் மட்டத்தைக் குறைத்து சம அளவாக்கி கப்பல்கள் கடந்து வர ஏதுவாக்குகிற முஸ்தீபுகள் பார்க்க சுவாரஸ்யமானது. இந்த ஊரில் விடுதிகளில் அறை எடுத்துக்கொண்டு தங்குகிறவர்களுக்குக் கிடைப்பது இலவச சிற்றுண்டி என்கிற போனஸ்!

'இட்லி, பூரி, தோசை' என்று சப்புக் கொட்டாதீர்கள். கார்ன்ஃப்ளேக்ஸ், பிரெட், பீகல் எனப்படும் வடை வடிவிலுள்ள



டீத்தூள் போட்டு கொதிக்க வைக்கும் போது அதனுடன் ஒரு ஸ்பூன் சர்க்கரை சேர்த்துக் கொதிக்க வைத்தால் பாத்திரத்தில் கறை படியாது. தேநீரின் சுவையும் மணமும் நிறமும் கூடும்.

- சி. கலைச்செல்வி,
புதுக்கோட்டை.

மசாலா பன், காப்பி, குளிர்பானங்கள் போன்றவை.

மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து சொர்க்கத்துக்குப் போகலாம். ஆம் அடுத்து வரும் ஊரின் பெயர் பாரடைஸ்! இங்கே டாக்வாமேனன் நீர்வீழ்ச்சி சுமார் 200 அடி அகலத்துக்குப் பாறை மீது பரவி மேட்டிலிருந்து சரிகிறது தனி அழகுடன். அடர்ந்த காடு; மரங்களை யாரும் வெட்டுவதில்லை. அதுவாகச் சரிந்தால்தான் உண்டு!

காட்டுக்குள்ளிருந்து நதியாய்ப் பாய்ந்து வருகையில் வழியெங்கும் கரையும் கந்தகம் இந்த நீருக்கு பழுப்பு நிறத்தைக் கொடுத்து வித்தியாசமாக்குகிறது. அத்தனை நீரும் உபயோகமற்றது என்று தெரியும்போது நமக்கு ஏற்படுவது வருத்தம். அடுத்து மெக்கினக் சிட்டியிலிருந்து ஹ்யூரன் ஏரியிலுள்ள மெக்கினக் தீவுக்கு 'ஃபெர்ரி' என்னும் மோட்டார் படகில் ஏறிப் போகலாம்.

இங்கே சாலைகளில் கார், பேருந்து எதையுமே பார்க்க முடியாது!

நல்ல புஷ்டியான இரு குதிரைகள் பூட்டிய நாகரிகக் குதிரை வண்டியில் ஏறி உட்காரும்போது, சந்திரனில் காலடி எடுத்து வைத்த அமெரிக்கா ஒரு பகுதியில் இருக்கிறோமா என்று ஆச்சரியப்பட வைக்கிறது. அடுக்கடுக்கான வீடுகள். ஏரி அலைகளின் ஆர்ப்பரிப்பு. தீவுக்கு மத்தியில் தெரியும் கம்பீரமான கோட்டை. பிரெஞ்ச், ஆங்கிலேயர் என்று கைமாறி கடைசியில் அமெரிக்கர்களின் பிடிக்குள் சிக்கிய தீவின் சரித்திரத்தைக் கூறும் அருங்காட்சியகம் அங்குள்ளது.

கடை வீதிகளை ஃபட்ஜ் எனப்படும் இனிப்பு வகையின் மணம் ஆக்கிரமிக்கிறது. கடைக்காரர்களை விட 'காரிகள்' அதிகம். மற்றவருக்கு 'அல்வா' கொடுப்பது எப்படி என்று தெரியாத வெகுளித்தனத்துடன் கடைக்காரர்கள் இந்த அல்வா வகையைத் தயாரித்து, தட்டில் கொட்டி துண்டு போடுவது எப்படி என்று 'டெமோ' கொடுக்கிறார்கள். கலைப்பது எப்படி என நாம் செய்து காட்டலாம்!

- லக்ஷ்மி ரமணன்,
சென்னை - 4.



இஞ்சியை, ஈரத்துணியில் சுற்றித் தண்ணீர்க்குடத்தின் மேல் வைத்திருந்தால் பத்து நாள் வரை புதிதாகவே இருக்கும்.

- சாந்தி சேகர், திருவள்ளூர்.

அரிசி களையும் கழுநீரை, கறிவேப்பிலைச் செடிக்கு ஊற்றினால் நன்கு வளரும்.

- கே.ஆர். மோகனா பரிதாபாத்,
ஹரியாணா.





மொட்டுக்கள் மெல்ல
மலர்வதைப் பார்ப்பதும் சந்தோஷம்
- இனிய
மெட்டுக்களில் பாடல்கள்
கேட்பதும் சந்தோஷம்!

வெட்ட வெளியிலே சாய்ந்திருந்து
வெண்ணிலாவைப் பார்ப்பதிலும்...
கொட்டும் மழையிலே
குடைபிடிக்காமல்..
சொட்டச் சொட்ட நனைவதிலும்
சந்தோஷம்... சந்தோஷம்.... சந்தோஷம்

மத்தாப்புப் பொறிகளைப் பார்ப்பது
மழலையின் - சந்தோஷம்
மயங்கிச் சுழலும் பம்பரமும், மேலே
பறக்கும் பட்டமும்
கண்ணாமுச்சி விளையாட்டும்
சந்தோஷம்... சந்தோஷம்...
சந்தோஷம்!



வானவில்லின் வண்ணங்களை
எண்ணிப் பார்ப்பதும்- சந்தோஷம்!
வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளில்
வாழ்க்கையைப் படிப்பதும்...
சந்தோஷம்!
வானம்பாடிகள் போலே வானில்
பறந்திடும் சந்தோஷம்!
சந்தோஷம்... சந்தோஷம்...
சந்தோஷம்!

பிரபா ராஜ்

அழகுக்கலை நிபுணர் வசுந்தரா

நான் ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் வரவேற்பாளராக வேலை பார்க்கிறேன். அதனால் தினமும் மேக்-அப் போட வேண்டியிருக்கிறது. அதனால், என் சருமத்தில் ஒருவித முதிர்ச்சியும் தெரிகிறது. ஏதேனும் தீர்வு இருந்தால் சொல்லவும்.

எம். உமாராணி, பெங்களூர்.

இப்போது 'ஸ்பா' எனப்படுகிற பிரத்யேக சிகிச்சை ரொம்பவும் பிரபலமாகி வருகிறது. ஒவ்வொருவரின் சருமத்துக்கும், பிரச்னைக்கும் ஏற்ப செய்யப்படுகிற ஸ்பெஷல் ஃபேஷியல் இது. குறிப்பாக உங்கள் பிரச்னைக்கு சாக்லேட் ஃபேஷியல் அருமையாக உதவும். இதில் சருமத்தை கிளென்ஸ் செய்வதிலிருந்து, அதாவது சுத்தப்படுத்துவதிலிருந்து, அதையடுத்த மசாஜ், சீரம் மாஸ்க் என எல்லாமே உயர்ரக சாக்லேட் கொண்டு தயாரிக்கப்பட்டவை. சருமத்துக்கு ரொம்பவும் நட்பானத் தயாரிப்புகளும் கூட. வறண்ட சருமத்துக்கும்; முதிர்ச்சியடைந்த சருமத்துக்கும் உடனடியாக பொலிவையும், போஷாக்கையும் தரக் கூடியது இந்த ஃபேஷியல். அடிக்கடி மேக்-அப் போட்டு பாதிக்கப்பட்ட சருமத்துக்கும் இது ரொம்பவும் அருமையாக வேலை செய்யும்.

ஸ்பா ஃபேஷியலில் நிறைய வகை உண்டு. உதாரணத்துக்கு சரும நிறத்தை அதிகரிக்க, குங்குமப்பூ ஃபேஷியல், அலர்ஜி உள்ள சருமத்துக்கும், சென்சிட்டிவான சருமத்துக்கும் காய்கறி மற்றும் பழங்களால் செய்யப்படுகிற ஃபேஷியல் என நிறைய உண்டு.

எனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் திருமணம். என் உடல் எடை 80 கிலோ. வயிறு, தொடை ஆகிய பகுதிகளில் பருமன் அதிகமிருக்கிறது. திருமணத்துக்குள் அதைச் சரிசெய்யவும், இளைக்கவும் அழகு சிகிச்சைகள் ஏதேனும் உண்டா?

எஸ். வசுதாரெட்டி, ஐதராபாத் - 1.

உடலை இளைக்கச் செய்யவும், உடலின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் இளைக்கச் செய்யவும் இப்போது நிறைய சிகிச்சைகள் வந்திருக்கின்றன. எலக்ட்ரானிக் ஸ்லிம்மர் என்கிற ஒரு கருவி இதற்கென்றே பயன்படுத்தப்படுகிறது. இதை உடலில் ஊளைச் சதைகள் கரைய வேண்டிய இடங்களில் வைத்து அழுத்தும் போது அந்த இடத்தில் உள்ள கொழுப்புத் திசுக்கள் நகர்ந்து அந்த இடம் இளைக்கும். இதை உடல் பருமனைப் பொறுத்து, குறிப்பிட்ட இடைவேளைகளில், குறிப்பிட்ட மணி நேரம் தொடர்ந்து செய்யலாம்.

'பாடி ஸ்பா' என்ற சிகிச்சையும் இப் பிரச்னையை சரியாக்கும். 'ஆன்டி செலுலைட் ஸ்பா' என்றே இதற்குப் பெயர். இதில் உடல் எடையைக் குறைக்க உதவும் அரோமா ஆயில் கலந்திருக்கும். முதலில் ஸ்கரப் உபயோகித்து மசாஜ் கொடுத்துத் துடைத்து, பிறகு ஸ்லிம்மிங் ஜெல் உபயோகித்து இருபது நிமிடங்கள் வைத்திருப்போம். பிறகு அதன் மேல் சுத்திகரிக்கப்பட்ட உயர்ரக கடல் பாசியால் ஆன ஸ்லிம்மிங் மாஸ்க் போடப்படும். பருமனின் தீவிரத்தைப் பொறுத்து வாரம் இரண்டு அல்லது மூன்று முறைகள் கூட இதைச் செய்து கொள்ளலாம். இந்த முறையில் உடல் இளைக்கிற போது உடலுக்கு அழகான, உறுதியான ஷேப்பும் கிடைக்கும். சருமம் தொய்வடையாது.



எனக்கு சில மாதங்களாகப் பொடுகு தொல்லை இருக்கிறது. ஷாம்பூவை மாற்றிப் பார்த்தும் பயனில்லை. சீயக்காய் உபயோ



ஜித்துப் பார்த்தேன். அப்படியும் பொடுகு குறைவதாய் இல்லை. பொடுகு வந்தால் போகாது என்பது உண்மையா?

பொடுகு வந்தால் அதைப் போக்கவே முடியாது என்பது தவறான நம்பிக்கை. ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து, சரியான சிகிச்சை அளிக்கப்பட்டால் கட்டாயம் முழுமையாகக் குணப்படுத்தலாம். பொடுகு நீக்கவென்றே பிரத்யேகமாகக் கிடைக்கிற ஆன்ட்டி டான்டிராஃப் ஷாம்பூவையே உபயோகிக்க வேண்டும். சிலருக்கு இந்த ஷாம்பூக்களை உபயோகித்த உடனேயே பொடுகு மறைந்தது போலத் தெரியும். மீண்டும் சில நாட்களில் மறுபடி வந்த மாதிரி இருக்கும். பொடுகுக்கான எந்தச் சிகிச்சையும் ஒரே நாளில் பலன் தராது. பொடுகு நீக்கும் ஷாம்பூக்களில் உள்ள ஸிங்க் பைரிதியோன் என்கிற ரசாயனம்தான் பொடுகை விரட்டப் போராடக்கூடியது. பொடுகு நீக்கும் ஷாம்பூக்களில் எண்ணெய்ப் பசையான மண்டைப் பகுதி உள்ளவர்களுக்கு, வறண்ட மண்டைப் பகுதி உள்ளவர்களுக்கு எனத் தனித்தனியே கிடைக்கிறது. அதைப் பார்த்து சரியான ஷாம்பூவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பியூட்டி பார்லர்களில் பொடுகை நீக்க ஆன்ட்டி டான்டிராஃப் சிகிச்சைகள் நிறைய உள்ளன. அவற்றையும் செய்து கொள்ளலாம்.

பொடுகு வந்தால் போகாதா?

சரணம் ஷீரடி சாயி

அனுராதா சேகர்

அன்புமிக்க தோழிகளே...

'சரணம் ஷீரடி சாயி' தொடரை ஆரம்பித்து இரண்டு மாதங்களே ஆகின்றன. அதற்குள் இரண்டு கோப்புகள் நிறைந்து விட்டன. எல்லாமே நீங்கள் எழுதி அனுப்பும் பக்தி அனுபவங்கள்தாம்!

தெய்விகக் கட்டுரைகளோடு, குங்குமம், விபூதி, சர்க்கரை மிட்டாய், பாபாவின் புகைப்படங்கள் என அன்புடன் அனுப்பி வைக்கும் வாசகிகளுக்கு மிக்க நன்றி! சாயி பிரசாதத்துக்கு என்றே, பிரம்புத் தட்டு ஒன்று மங்கையர் மலர் அலுவலகத்தில் பிரத்யேகமாக வைக்கப்பட்டு, அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒன்றிரண்டு வாசகியரின் கட்டுரைகள் மட்டுமே இடம்பெற முடியும் என்பது உங்களுக்கே தெரிந்ததுதான்! எனவே, 'குறிப்பிட்ட இதழில் வெளியிடுங்கள்' தயவுசெய்து எடிட் செய்து விடாதீர்கள்' போன்ற உங்களுடைய கோரிக்கைகளை ஏற்பது சாத்தியமில்லை.

சுவாரஸ்யமான, அபூர்வமான நிகழ்ச்சிகளும், சாயி தரிசனம் அனுபவங்களும் இங்கே தொடர்ந்து பிரசுரமாகும். எல்லாம்வல்ல ஷீரடிநாதன் நம்மை வழிநடத்துவாராக!

(கட்டுரையாசிரியர்)

தாம் இறந்த பிறகு, சிறுவன் பாபாவை, சேலு கிராமத்து ஜமீன்தாரான ஸ்ரீகோபால்ராவ் தேஷ்முக்கிடம் ஒப்படைத்து விடுமாறு முஸ்லிம் பக்கிரி, தமது மனைவியிடம் சொன்னாரல்லவா?


கோபால்ராவ் தேஷ்முக் ஓர் அந்தணர். பக்திமான். திருப்பதி ஏழுமலையானை ஆராதித்துப் பேறு பெற்ற மகான். கோபால்ராவைப் பற்றியும் நிறையக் கதைகள் சொல்லப்படுகின்றன.

ஒரு சமயம், தேவலோகக் கன்னிகையைப் போன்ற அழகி ஒருத்தியைப் பார்த்து ஒருகணம், சபலப்பட்ட குற்றத்துக்காக, வருந்திய கோபால்ராவ், தமது இரு கண்களையும் குத்திக் கொண்டதாகவும், பின்னர் தெய்வ அருளால் மீண்டும் பார்வையைப் பெற்றதாகவும் வரலாறு சொல்கிறது.

பாபா, அவரை 'வெங்குசா' என்ற பெயராலேயே பக்தர்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தார். ஒழுக்கச்சீலரான அவரிடம் பாபா, அளவற்ற அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். எப்போதும் குருவின் திருவடி அருகிலேயே இருப்பார். இருவரும் ஒன்றாகவே இருந்தாலும், வாய் விட்டு எதையும் பேசிக் கொள்வதில்லை. ஆனால், அவர்களிடையே எந்நேரமும் ஆன்மிக சம்பாஷணை நடந்து கொண்டே இருந்திருக்க வேண்டும்.

எங்கிருந்தோ வந்த ஒரு முகம்மதிய பொடியனிடம் வெங்குசா காட்டிய அதீத பாசத்தினால், ஒருசிலருக்கு எரிச்சலும் பொறாமையும் ஏற்பட்டது.

ஒருநாள் குருவும் சிஷ்யனும் தனிமையில் உட்கார்ந்து, மௌன வேள்வி நடத்திக்



ஆசீர்வாதத் தொடர்-3

கொண்டிருந்தபோது, மதவெறி கொண்ட சேலு கிராமத்துவாசிகள் சிலர், அவர்கள் மீது கற்களை வீசினர். முதல் கல், பாபாவின் தலையில் பட்டு, காயம் ஏற்பட்டது.

இரண்டாவது கல் பறந்து வந்ததும், அருகிலிருந்த வெங்குசா, தமது தலையில் தாங்கிக் கொண்டார். வெங்குசாவின் தலையில் ரத்தம் பெருகியதைக் கண்டு,

பாபா துடித்தார்.

"ஐயோ... குருவே! என்னால்தானே உங்களுக்கு இப்படியொரு சோதனை. நான் உங்களை விட்டுப் போய்விடு கிறேன். சேலு கிராமம் அமைதியாக இருக்கட்டும்" என்று வேண்டினார்.

"மகனே... நீ உலகுக்கே ஒளி தர வந்திருப்பவன். நீ யார் என்று தெரியாமல், இந்த அறிவிலிகள் உன்னிடம் கடுமையாக நடந்து கொள்கிறார்கள். அவர்களை நீ மன்னித்து விடு. நான் விரைவில் மறையப் போகிறேன். என்னுடைய எல்லா சக்திகளையும் உன்னிடம் ஒப்படைக்கப் போகிறேன். அதுவரை நீ குருவின் சொல் படி நட!" என்று பாபாவை சமா தானப்படுத்தினார் வெங்குசா.

அதே போல, தாம் உயிர்நீக்குமுன், பாபாவை அழைத்து, ஆசீர்வதித்து, மேற்குத் திசையை ஜாடை காட்டினார்.

குருவின் சொல், அமிர்தம் ஆயிற்றே! குருவை வணங்கிவிட்டு, கிழிந்த கோணிப் பையைத் தூக்கிக் கொண்டு, கால் போன போக்கில், குருவருள் இருக்கும் துணிவில் மேற்குத் திசைநோக்கி நடந்து கொண்டே யிருந்தார்.

எத்தனைக் காலம் நடந்தாரோ, எங் கெல்லாம் திரிந்தாரோ, காட்டு மரங்கள் பூத்து, காய்த்து, இலை உதிர்த்து, மீண்டும்

சீரடி சாயிக்கு சிறப்பான ஆலயம்

சமீபத்தில் நான் சென்னை சென்ற சமயம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு சாயி மந்திருக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அற்புதமான, அழகு மிளிரும், அமைதியான சூழலில் ஐயனின் தரிசனம் கண்களுடன் மனத்தையும் அள்ளிக்கொண்டு சென்றது.

தொழிலதிபரான கே.வி. ரமணி, சீரடி பாபாவின் சிறந்த பக்தர். அவரது முயற்சியால் எம்பெருமானுக்கு 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்டது. 'சீரடி சாயி ட்ரஸ்ட்' என்ற அறக்கட்டளை யினால் சீராகப் பரா மரிக்கப்படும் இவ்வால யம், சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் கிருஷ்ணன் கரணை கிராமத்தில் அமைந்துள் ளது.

முதலில் நமக்குக் கிடைப்பது ஆனைமுகன் தரிசனம். ராஜகண பதியை வணங்கி, பின் சீரடி பாபாவின் சன்னிதிக்குச் செல்வோம்.

கடலை நோக்கியவாறு அமர்ந்திருக் கும் பாபாவைக் காணும் போது, சீரடியில் இருக்கிறோமா என்ற ஐயம் ஏற்படுகிறது. ஆம்! நம் சந்தேகம் பொய்யில்லை. சீரடியி லுள்ள பாபாவின் சிலாரூபத்தை உருவாக் கிய அதே அச்சில், அச் சிற்பியின் பேரனால் உருவாக்கப்பட்டதாம் இச் சிலாரூபம்! அவரது கருணை பொங்கும் விழிகள் நம்முடன் பேசுவது போல் தோன்றுகிறது. 'உன் கவலைகளை,

• சாயி மந்திர் - கிழக்குக் கடற்கரைச் சாலை



துளிர்த்து வசந்த கோலம் பூண்ட போது. பாபாவும் வளர்ந்திருந்தார். இளம் காளையாக, உயரமான வாலிப னாக, மீசை, தாடி அடர்ந்து மண்டிய முகத்தோடு, அலைந்துக் கொண்டிருந் தார்.

அந்தச் சமயத்தில்தான் பாபாவின் வாழ்க்கையில், ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது. ஒரே ஒரு க்ஷணம் நினைத்துக் கொள்ளும் பக்தர்களின் வாழ்வில் கூட மிக நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும் பாபா வின் வாழ்க்கையிலும் ஒரு திருப்பம்!




அவுரங்கபாத் மாவட்டத்தில் 'தூப்' என்று ஒரு சிற்றூர். சின்ன ஊர்தான் என்றாலும் கழனியும் கறவையுமாக செல்வம் கொழிக்கும் கிராமம். அந்த ஊரின் பெருந்தனக்காரர் சாந்த் படீல். ரொம்ப வசதியான அவர், அவுரங்க பாதுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது, தமது அருமையான பெண் குதிரையைத் தொலைத்து விடுகிறார். அவருடைய குடும்பத்துக்கே பெரிய பூஷணமாக இருந்த குதிரையின் இழப்பை, அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

பைத்தியம் பிடித்தது போல, அலைந்து திரிந்து, கால்கள் தேயத் தேடியும் பார்க்கிறார். இரண்டு மாதங்கள் ஓடியே விட்டன. குதிரை கிடைக்கவேயில்லை.

நெஞ்சைத் துளைக்கும் வேதனை யோடு குதிரையின் சேணத்தைத் தோளில் போட்டுக் கொண்டு, ஊர் திரும்பிக் கொண்டிருந்தார் சாந்த் படீல்.

"இறைவா... என் குதிரையை எனக்குத்

இன்னல்களை நான் களைகிறேன்' என்று கூறுவது போல் உள்ளது. சில படிகள் ஏறிச் சென்று இறைவனை வணங்கி, வலம்வந்து, நம் வேண்டு தல்களை விண்ணப்பித்து கீழே இறங்கி வந்து நமஸ்கரித்து தியானம் செய்தால், நம் மனம் நிச்சலனமாவதை அனைவரும் உணரலாம். தியான மண்டபம் தாண்டி எதிரில் அம்பிகை வடிவமாக மகாமேரு அமைந்துள்ளது. சாயி சன்னதியை வலம்வரும்போது குருஸ்தான், துவாரகமாயி, 'துனி' என்கிற அவர் ஏற்றிய அணையா ஜோதி இவற்றைத் தரிசனம் செய்து, அவரது பிரசாதமான 'உதி' என்கிற திருநீறை அணிந்தால் நம் பாவங்கள் அகலும்.



ஆலயத்தைச் சுற்றிலும் விதவிதமான, வண்ண வண்ணப் பூக்கள் அமைதியான சூழ்நிலை! இதமான கடற்காற்று! அங்கிருந்து வருவதற்கே மனமில்லை!

- ராதா பாலு,
நவி மும்பை.

"திரும்பத் தா!" மூச்சு விடக்கூட மறந்திருப்பாரோ, என்னவோ... இந்தப் பிரார்த்தனையை மட்டும் மனம் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

ஒரு மாமரம். அந்த மரத்தில் சாய்ந்தவாறு அழுக்கு ஆடை அணிந்த பக்கிரி ஒருவர், பலத்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். சாந்த்பாடீல் தம்மைக் கடந்த போது, அந்தப் பக்கிரி, கண் விழித்துப் பார்த்து, உற்றுநோக்கினார்.

"பாவமூட்டையைச் சுமந்து செல்வது போல, குதிரையின் சேணங்களைச் சுமந்து சொல்கிறீரே... என்ன நடந்தது?" என்று கேட்டார்.

சாந்த்பாடீல் தொலைந்து போன குதிரையைப் பற்றி, வருத்தமாகச் சொன்னார்.

பக்கிரி, புன்னகை செய்தார்.

"நல்லவர்களின் நியாயமான உடைமைகளை, இறைவன் என்றைக்கும் கவர்ந்து கொள்ள மாட்டான். இதோ, பக்கத்தில் உள்ள சோலையில் இறங்கிப் பாரும். உங்கள் குதிரை அங்கேதான் மேய்ந்து கொண்டிருக்கும்" என்றார் உறுதியான குரலில்.

என்ன ஆச்சரியம்! பக்கிரி சொன்னது நிஜம்தான்! வியப்பில் மெய்சிலிர்த்துப் போன, சாந்த்பாடீல்... 'தடால்' என பக்கிரியின் காலில் விழுந்தார். ஆனந்த அலை அடித்த அவரது உள்ளம் நெக்குருகி விம்மியது.

"ஐயோ... அருளாளரே! என் பிரச்னையை நொடியில் தீர்த்து வைத்த மகானே... இந்தக் குதிரை எங்கள் வம்சத்தின் கௌரவம். இது கைவிட்டுப் போயிருந்தால், எங்கள் குடும்பமே துக்கத்தில் ஆழ்ந்திருக்கும்... இனி, நீங்கள்தான் எங்கள் குலதெய்வம்" என்று அழுது தொழுதார். குதிரையுடன் சாந்த்பாடீல், திரும்பிய போது, பக்கிரியான பாபா, ஹுக்கா புகைக்கத் தயாராகிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவரும் ஹுக்கா புகைக்கத் தொடங்கினார்.

ஹுக்கா புகைக்க இரண்டு உபகரணங்கள் தேவைப்பட்டன. ஒன்று, குழாயைப் பற்றவைக்க நெருப்பு... இன்னொன்று சாபியை (துண்டுத் துணி) நனைப்பதற்கு வேண்டிய தண்ணீர். பாபா, தம்மிடம் இருந்த கத்தியை எடுத்து, அதை, காய்ந்து போயிருந்த நிலத்தில் குத்தினார். அதிலிருந்து 'தணதண' என எரியும் நிலக்கரித் துண்டம் வெளிவந்தது. அதை அவர் குழாயிலிட்டார். தண்ணீர் வேண்டுமே! தமது சட்காவை (குட்டையான தடி) தரையில் அடித்தார். அவ்விடத்திலிருந்து நீர் கசிந்தது. அப்படியே ஆச்சரியத்தில் உறைந்து போனார் சாந்த்பட்டீல்!

"ஆஹா! இவர் வழிப்போக்கர் போலத் தெரிந்தாலும், சாதாரண மனிதர் அல்ல; மாபெரும் ஞானி!" என்று உணர்ந்தார்.

ஹுக்கா குடித்துவிட்டு, சாந்த்பட்டீலுக்கும் புகைக்கக் கொடுத்தார்.

"ஐயா... இனி உங்களை விட்டு ஒரு நிமிஷமும் பிரிந்திருக்க மாட்டேன். என்னோடு கிராமத்துக்கு வாருங்கள். எங்களது இல்லம் உங்கள் வருகையால் புனிதமாகட்டும்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

நெடுநேர யோசனைக்குப் பிறகு, சாந்த்பட்டீலுடன் தூப் கிராமம் செல்ல இசைவு தந்தார் பாபா!

(பக்தி பெருகும்)



கல்வி ஞானம் வளர..

பிரதோஷ தினத்தன்று தேங்காய் துருவி, சர்க்கரைக் கலந்து சிவனுக்கு தேங்காய்ப் பூ அபிஷேகம் செய்தால், குழந்தைகளுக்கு கல்வி ஞானம் வளரும். படிப்பில் ஆர்வம் ஏற்படும். செய்து பாருங்கள்.

- ஆர். தங்கராஜ்,
திருப்பூர்.



Estd. in 1978

EVP TOWN-II[ND] Phase

NEAR INTERNATIONAL AIRPORT

MEGA TOWNSHIP IN CHENNAI

AT THARAPPAKKAM

CMDA APPROVED

PLOTS FOR SALE

WITH ALL AMENITIES

Rs. 1,049/- per sq.ft.

Plot sizes : 800, 1200, 1500 & above

EVP TOWN - I[ST] Phase

CMDA APPROVED

Buildings as per Vastu



Actual photograph of the model house

INDEPENDENT BUNGALOW Rs. 1896/- per sq.ft.

Site visit on all days between 9.30 am and 4.00 pm

Amenities: • Landscaped Gardens • Gymnasium • Club • All around Compound • 24 Hrs. Security • Black Top Roads • Sewage Treatment Plant • Street Lights • Avenue Plantations • Children Parks • Shopping Center • School • Hospital • Swimming Pool • .... All of International Standard.

Project approved by HDFC HOME LOANS SBI Canara Bank

EVP HOUSING CHENNAI PVT. LTD.

No. 23, Thiyagaraya Road, Pondy Bazaar, T.Nagar, Chennai-17.

☎ 45506262, 45506272, 32000102, 32000061

Website: www.evpgroupchennai.com E-mail: sales@evpgroupchennai.com

விடியல்



உடம்பு முழுக்க முறுக்கிப் பிழிகிற மாதிரி வலி. 'இன்னும் கொஞ்சம் படுத்துக் கொள்' என்று பரமுவின் ஒவ்வொரு அணுவும் கெஞ்சினாலும் எழுந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம். இப்ப எழுந்து வேலை செய்யத் தொடங்கினால்தான் நேரம் சரியாக இருக்கும்.

என்னதான் வேலைவெட்டி இல்லாதவனாக இருந்தாலும், தன் புருஷன் மீது பரமேஸ்வரிக்கு பாசம் நிறைய. தான் வேலைக்குச் சென்றாலும் தன் ஒரு வயதுப் பிள்ளையை கணவன், பொறுமையுடன் பார்த்துக் கொள்கிறான் என்ற நன்றி உணர்ச்சி. அவன் கொண்டு வரும் சம்பளப் பணத்தை பிச்சைக்காரன் மாதிரி கெஞ்சிக் கேட்டு வாங்கிச் செல்லும் அவனிடம் 'சள்' என்று எரிந்து விழ மாட்டாள். இவன் ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்தவுடன் அவன் ஊர் சுற்றக் கிளம்பி விடுவான். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் தலைகால் புரியாமல் தண்ணி அடித்து விட்டு ஒரே ரகளைதான். அப்பப்ப அடிதடியும் கூட. பரமுவுக்குப் பழகி விட்டது. எல்லா ஏழைகளின் வாழ்க்கையிலும் ஏன் இந்த அதிகப்படி சோகம் என்று புரியவில்லை.

பரமேஸ்வரி வேலை செய்யும் வீட்டு அம்மா மனக தங்கம். நாள் முழுவதும் தொட்டுத் தொட்டு வேலை என்றாலும்



அன்பாக நடத்துவதால் சிரமம் தெரியாது. பக்கவாதம் வந்து ஐயா படுத்த படுக்கையாகி விட்ட பின் அம்மா பரமு உதவியை அதிகம் எதிர்பார்ப்பாள். அம்மாவிடம் பரமுவுக்கு மிகவும் பிடித்தது அவள் தைரியம்தான். ஐயா இப்படி கை கால் விளங்காமல், பேசவும் முடியாமல் ஆன பிறகு கொஞ்சமும் மனம் தளராமல் அவருக்குப் பணிவிடை செய்யும் பாங்கு.

நல்லவர்களுக்கு ஏன் ஆண்டவன் அதிகப்படி சோதனை தருகிறார் என்பது பரமுவுக்குப் புரியவில்லை.

வேலை செய்யும் வீட்டை நெருங்கிய போதுதான் அது பூட்டிக் கிடந்தது தெரிந்தது. ஐயாவுக்கு சீரியஸ் ஆனதால் அம்மா, டாக்ஸி பிடித்து இரவே ஆஸ்பத்திரிக்குச் சென்று அட்மிட் செய்து விட்டாராம்.

காலையில் வேலைக்குச் சென்ற பரமுவிடம் வீட்டுச்சாவி தந்த பக்கத்து ஃப்ளாட் மாமி விவரம் சொன்னாள்.



முதல் பரிசுக் கதை

பானுகுமார்



பரமு வீட்டு வேலைகளை பரபரப்பாகச் செய்து முடித்தாள். பத்து மணிக்கு அம்மா ஃபோன் செய்தாள். ஐயாவுக்குத் தேவலை, தான் கிளம்பி ஒரு மணி நேரத்தில் வருவதாகச் சொன்னாள்.

சொன்னபடி அம்மா வந்ததும் குளித்து விட்டு சமைத்து, ஐயாவுக்கு டிபன் காரியர் நிரப்பினாள். பரமுவிடம், "நீ சாப்பிட்டு சுத்தம் செய்துவிட்டு வீட்டுக்குப் போ; நான் ஆஸ்பத்திரியில் தங்கி விட்டு காலைலே வருவேன்" என்றாள்.

"அம்மா இருங்க. நானும் உங்ககூட வரேன். நீங்க தனியாப் போக வேண்டாம்" என்றாள் பரமு.

ரயிலில் சென்றால் சீக்கிரம் போயிடலாம் என்று கிளம்பினார்கள். ஒரே கூட்ட நெரிசல்.

ரயிலில் சென்று அதிக பழக்கமில்லாததால் பரமுவுக்கு மூச்சடைக்கிற மாதிரி இருந்தது. அம்மாவுக்கு உட்கார இடம் கிடைத்தது. பரமு பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள். ஸ்டிக்கர் பொட்டு விற்கும் பெண் ஒருத்தி மூக்குக்கு எதிரே நீட்டினாள். பாவம். தோளில் பெரிய ஜோல்னா பை. இன்னொரு தோளில் தொங்கிய ஏணை; அதில் உறங்கும் குழந்தை. தலைதொங்கியவாறு தூங்கிக் கொண்டிருந்தது. பார்த்தால் அசப்பில் தன் பிள்ளை சின்னராசு போலத் தோன்றியது பரமுவுக்கு.

'எல்லாம் பிரமை. குழந்தையை வீட்டில் விட்டு வந்ததால் அப்படித் தோன்றுகிறது. சின்னப்பயல் என்ன சேட்டை பண்ணுகிறானோ தெரியவில்லை!'

அம்மாவுடன் ஆஸ்பத்திரி சென்று ஐயாவைப் பார்த்து விட்டுக் கிளம்புகையில் அம்மா, ஸ்டேஷனுக்கு வழியும் சொல்லி கைச்செலவுக்கு பணம் தந்தாள்.

"உங்க பசங்களுக்குத் தகவல்..."

"அதெல்லாம் வேண்டாம். வீணா கவலைப்படுவாங்க. ஐயா சரியாயிடுவார்... நான் பார்த்துக்கறேன்."

அம்மாவின் தைரியத்தை வியந்தவாறு பரமு ரயில் பிடித்தாள். இடம் வசதியாக கிடைத்து உட்கார்ந்ததில் சற்று கண் அயர்ந்தாள். திடீரென்று கூச்சல்! அடுத்த பெட்டியில் ஒரு பெண்ணின் பர்ஸைக் காணவில்லையாம்! குய்யோ முறையோ என்று கத்தல்.

"கூட்டத்தில் யாரோ ப்ளேடு போட்டு ஹேண்ட்பேக் கட் பண்ணிட்டாங்க. ஐந்நூறு ரூபாய் போயிடுச்சாம்! இதுல, சாமான் விற்கிற பெண்கள் பாதி பேர் கூட்டாளிங்க" யாரோ பேசினார்கள்.

"சீ, சீ, பாவம்! 'சின்னக் குழந்தைகளை கங்காரு மாதிரி மடியில் கட்டிக்கிட்டு ஏதோ மானமா அஞ்சு பத்துன்னு சம்பாதிக்கிறாங்க. அநியாயமாக பழி பேசக் கூடாது."

"இல்லை, இந்தக் குழந்தை எல்லாம் ஊரை ஏமாத்தற விஷயம். வெறும் வேஷம். இந்த குழந்தைங்க கூட அவங்க சொந்தக் குழந்தை இல்லையாம். இருபது ரூபா வாடகைக்குக் குழந்தை கிடைக்குமாம். அட, இடுப்பில் சுமந்துக்கிட்டு வந்தால் சந்தேகம் வராது. ஐயோ பாவம்னு பொருள்கள் வாங்குவாங்க. அப்ப கூட்டாளிப் பெண் ஒருத்தி ப்ளேடு போட்டு பர்ஸ் அபேஸ் செஞ்சுடுவாளாம். இதெல்லாம் விவரமா பேப்பர்லே வந்திருக்கே பார்க்கலியா?"

"ஆமாம். பேப்பர்ல என்னென்லாமோ வருது. நாமதான் பத்திரமா இருக்கணும்."

இப்படி எல்லோரும் தலைக்குத் தலை பேசினார்கள். பரமேஸ்வரி பத்து ரூபாய் மட்டுமே இருந்த தன் பர்ஸை நெஞ்சோடு இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

வீட்டு வாசற்கதவு சாத்தியிருந்தது. உள்ளே யாருமில்லை. வெளியே வந்து வீதியைப் பார்த்தாள் பரமு. தெரு முக்கு டீக்கடையில் உட்கார்ந்திருப்பது யாரு...? புருஷன் வேலாயுதமா... கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்தாள். அதற்குள் அவனே பதற்றமாக ஓடி வந்தான்.

"என்ன பரமு, அதுக்குள்ள வந்துட்ட... வேலை ஆயிடுச்சா.. மணி நாலுதானே ஆவுது...?"

"அது சரி மச்சான். சின்னராசு எங்கே?"

"அதுவா?" மென்று விழுங்கினான். "இப்பத்தான் மத்தியானம் பெரியப்பா மவ முத்துப்பேச்சி வந்திருந்தா. கூட அவ பொண்ணு. ஆசையாயிருக்குன்னு சின்னப் பயலை தூக்கிட்டுப் போனா. ஆறு மணிக்குள்ள வந்துடுவா. நீ வீட்டுக்குப் போ. நான் போய் இட்டாறேன்..." என்று அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

வீட்டுக்கு சீக்கிரம் வந்ததும் பிரயோசனப்படலை. தளர்ந்த நடையுடன் வீடு நோக்கி நடக்கையில் எதிர் வீட்டு அஞ்சலை அக்கா எதிர்பட்டாள்.

"என்ன பரமு, இன்னிக்கு நேரத்தே வந்துட்ட...?"

"ஆமாக்கா. ஆனா பாரேன், இன்னிக்குன்னு பார்த்து என் நாத்தனார்க்காரி குழந்தையைத் தூக்கிட்டுப் போயிருக்கா. இவரு போயிருக்காரு கூட்டியார.."

அஞ்சலை ஏதோ சொல்ல வந்து விழுங்கிய மாதிரி தெரிந்தது. வீட்டுக்கு வந்ததும் களைப்பு கண்ணை இழுக்க... தூங்கி விட்டாள். கண் விழிக்கையில் இருட்டு 'மசமச' என்று மண்டியது. பாயில் பக்கத்தில் விரல் சூப்பியவாறு சின்னப்பயல். 'என் தங்கமே' என்று கட்டிக் கொண்டாள்.

ஒருநாள் மதியம் வேலை முடித்து விட்டு பரமு ஹால் தரையில் சற்று படுத்தாள். வாசல் மணி ஒலித்தது. கதவைத் திறந்தால், பரமுவின் பக்கத்து வீட்டுப் பையன்.

"என்ன மாரி என்ன விஷயம்?"

"அக்கா.. உங்களை உடனே கூட்டியாரச் சொன்னாங்க. சின்னராசுவுக்கு முடியலையாம்..."

"என்னடா சின்னராசுக்கு என்னாச்சு...?"

"மயக்கமா இருக்கான். உடனே வரச் சொன்னாங்க..." பரமுவுக்கு ஓரே பதற்றம். 'ஐயோ கடவுளே' என்று பொங்கிய



கெட்டித் தயிரில் உப்பு போட்டு வில்லைக் கருவடாம் இரண்டை வறுத்து கையால் நொறுக்கிப் போடவும். கடுகு, பெருங்காயம் தாளித்து, கொத்துமல்லியைக் கிள்ளிப் போடவும். இது அவசரப் பச்சடி. திடீரென விருந்தாளிகள் வந்துவிட்டால் சுலபமாக செய்து அசத்தலாம்.

- விமலா தியாகராஜன்,
விருகம்பாக்கம்.



குளிப்பதற்கு முன் தலையில் தயிர் தடவிக் கொண்டு குளித்தால் தலைமுடியில் உள்ள பொடுகு போய்விடும்.

- ஆர். லட்சுமி, மதுரை - 16.

கண்ணீரை அடக்கியவாறு புறப்பட்டாள்.

"குழந்தைக்கு ஒண்ணும் இருக்காது. பயப்படாம போ. இந்தா செலவுக்கு வெச்சுக்கோ" என்று ஐந்நூறு ரூபாய் தந்தாள்.

கேட்காமலேயே உதவி செய்யும் அம்மா. இருந்த பதைபதைப்பில் நன்றி சொல்லக்கூடத் தோன்றவில்லை. ஆட்டோவில் செல்கையில் ஒரே குழப்பம். வீட்டு வாசலில் இதென்ன கூட்டம்? 'கடவுளே கடவுளே' என்று அழுதவாறு இறங்கினாள். அங்கே கண்ட காட்சி அவள் அடிவயிற்றில் நெருப்பாக இறங்கியது.

கீழே சின்னராசு துணியில் சுற்றிய பிணமாக இருக்க, சுற்றி கும்பல். தலையில் கைவைத்து கவிழ்ந்து அழும் வேலாயுதம். பரமுவைக் கண்டவுடன் 'ஓ' என்ற ஒப்பாரி அழுகை. பரமு அழக்கூட முடியாமல் கீழே விழுந்து விட்டாள்.

"என்ன ஆச்சு என் பிள்ளைக்கு... என்னாச்சு... யாராச்சும் சொல்லுங்களேன்..." என்ற கண்ணீர் கேள்விக்கு வந்த பதில்... பரமுவால் நம்ப முடியவில்லை!

தினமும் கணவன் வேலாயுதம் சின்னராசுவை ரயிலில் விற்பனை செய்யும் திருட்டுக் கும்பலுக்கு வாடகைக்குத் தருவானாம். இன்று காலையில் ஒரு பயணியிடம் கைவரிசையைக் காட்டி இறங்க முயற்சி செய்த போது வசமாக மாட்டிக் கொள்ளவே, எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்ற பரபரப்பில் அந்தப் பெண் சின்னராசுவை ரயிலுக்கு வெளியே வீசி எறிந்து விட்டாள். தப்பி ஓட முயன்று முடிவில் பிடிபட்டாள். கீழே விழுந்த குழந்தையின் மண்டையில் அடிபட்டு உயிர் போய் விட்டது.

போலீஸார் அந்தப் பெண்ணை அடித்து, விசாரித்து, விலாசம் கேட்டு வேலாயுதத்துக்குத் தகவல் அனுப்பினர். அதற்குப் பிறகு அங்குமிங்கும் அலைந்து, போலீஸிடம் அடியும் வாங்கி, ஆஸ்பத்திரியில் நூறு கேள்விகளுக்குப் பதில் சொல்லி பிள்ளையின் பிணத்துடன் அவன் முற்றிலும் தோற்ற மனிதனாக வீடு திரும்ப பிற்பகலுக்கு மேல் ஆகிவிட்டது.



காரட், வெள்ளரி தயிர்ப்பச்சடி செய்யும் போது காரட், வெள்ளரியைத் துருவிக் கொண்டு மிக்ஸியில் இலேசாக ஒரு சுற்றுச் சுற்றி, பிறகு தயிரில் கலந்தால் நன்றாக, வெண்ணெய் போல் மிருதுவாக இருக்கும். 'நறுக்'கென்று பல்லில் கடிபடாமல் இருக்கும்.

- உஷா நாராயணன்,
சென்னை.

அரிசி களைந்த இரண்டாவது நீரில் சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு முதலியவற்றை வேகவைத்து எடுக்கும் போது அதன் அரிப்புத் தன்மை நீங்கி விடும்.

- ஜானு, சென்னை -23.



உறவினர்கள் பரமுவை பலவாறு தேற்ற முயன்றனர். துக்கம், எல்லை மீறிய துக்கம். அதையும் மீறி மனதில் வெறுப்பு வேர்விட்டது. இருபது ரூபாய், கேவலம் இருபது ரூபாய் காசுக்காக... கேட்டிருந்தால் கடன் வாங்கியாவது தந்திருப்பேன். இப்படி என் குழந்தையைத் தினமும் தூக்க மருந்து கொடுத்து, திருட்டுக்குத் துணையாக ஒருத்தி தூக்கிச் சென்று, முடிவில் மீளா தூக்கத்துக்கு அனுப்பி விட்டாளே. பச்சைக் குழந்தை, என்ன பாவம் செய்தது...?

பிள்ளையைப் புதைத்த பின் பல இரவுகள் பரமு தூங்கவில்லை.

"உனக்கு சின்ன வயசு... குறிப்புள்ளை மடியிலேனு சீக்கிரமே இன்னொரு குழந்தை பிறக்கும்..." என்று தேற்றினாள் கோடி வீட்டுக் கிழவி. ஏற்கெனவே பரமு இரண்டு மாதக் கருவை வயிற்றில் சுமப்பது யாருக்கும் தெரியாது. இரண்டாவது குழந்தை பிறக்கப் போகிறது என்று முதல் குழந்தையை இழக்க எந்த தாயின் மனம் சம்மதிக்கும்?

காலம்தான் அவள் காயத்துக்கு மருந்து போடும் என்று உறவினர்கள், உபதேசப் படி காத்திருந்தான் வேலாயுதம். இன்று ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. இலேசான குடி மயக்கம். அவனுக்கு அவள் அருகாமை தேவைப்பட்டது. மெதுவாக அவளை ஆக்கிரமிக்க முயன்ற அவனை பரமு பிடித்துத் தள்ளி விட்டாள். அவனைப் பார்த்தால் கணவனாகத் தெரியவில்லை. ஏதோ பெரிய விஷப் பாம்பு தன்னைக் கடித்து தின்று முழுதாக விழுங்கப் போவதாகத் தோன்றியது. பரமுவின் ஒவ்வொரு நரம்பிலும் ரத்தநாளத்திலும் ரௌத்திரம் பாய்ந்தது.

"அடச்சீ, கொலைகாரப் பாவி. இனியும் உன்னுடன் வாழ்வதா? புருஷனா, அப்பனா இருக்க லாயக்கில்லாத நீ முதல்ல மனுஷனே இல்லை. தொடாதே என்னை..." என்று அழுதவாறு குடிசை மூலைக்குச் சென்று காலைக் கட்டியவாறு உட்கார்ந்து யோசித்தாள்.

'வயிற்றில் வளரும் அரும்புக்கு என்ன வழி காட்டப் போகிறேன்?'

இந்த ஈன ஜன்மத்தைப் பிரிந்து அந்த சிசுவைத் தானே தனியாளாக வளர்ப்பது என்ற முடிவுக்கு வந்தாள். இத்தனை வயதுக்கு மேல் கை-கால் விளங்காத கணவனைப் பாதுகாக்க அம்மாவால் முடிகிறது. நான் சிறு வயசுக்காரி. என்னால் முடியும்' என்ற நம்பிக்கையுடன் விடியலில் வாசற்கதவைத் திறந்தாள்.

சூரியனின் வெளிச்சக் கரங்கள் அவளை 'வா' என்று ஆசீர்வதித்தன. ●

நீங்கள் வத்தல், வடாம் வகையை, கடையில் வாங்கிப் பயன்படுத்துவீர்களா? அப்படியானால், மிதமான வெயிலில் உலர்த்தி விட்டு, பின் பொரித்துப் பாருங்கள். எண்ணெய் குடிக்காது.

- வி.எஸ்., பெங்களூர்.



சே. ராஜேஸ்வரி, கடலூர்.

தற்போது சில பிரபலமான கடைகளில் கூட அச்சடித்த பில்களுக்கு பதிலாக வெள்ளைக் காகிதத்தில் கம்ப்யூட்டர் பில்கள் கொடுக்கிறார்கள். சில நகைக்கடைகளில் கடையின் பெயர் கூட இல்லாமல் ஒரு துண்டுக் காகிதத்தில் விலையை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். விற்ற பொருள்களில் பழுதிருந்து நுகர்வோர் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நாம் பொருள்கள் வாங்கிய அத்தாட்சிக்கு இந்த பில்கள் ஏற்றுக் கொள்ளப்படுமா? இல்லாவிட்டால் இதற்குத் தீர்வு என்ன?

படித்தவர்கள் கூட விலைக்குறைவாக இருக்கிறது என்று பில் இல்லாமல் வாங்குவது வேதனையானது. பில் இல்லாமல் வாங்கும் போது விற்பனை வரி செலுத்த வேண்டி வராது. அதனால்தான் யாரும் பில் பற்றி கவலைப்படுவதில்லை. இதனால் அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பற்றியும் அக்கறை கொள்வதில்லை. சில பொருள்களுக்கு இரண்டாவது விற்பனை என்றால் விற்பனை வரியிலிருந்து விலக்கு உண்டு. அதனால்தான் வெள்ளைக் காகிதத்தில் கம்ப்யூட்டர் பில்கள் கொடுக்கப்படுகின்றன. நீங்கள் கவனித்துப் பார்த்தால் பல நகைக்கடைகளில் கையால் எழுதி 'எஸ்டிமேட்' என்றுதான் கொடுப்பார்கள். அதைத்தான் நாம் பில்லாக பாவித்துக் கொள்ள வேண்டும். வெள்ளைக் காகித கம்ப்யூட்டர் பில்லாக இருந்தாலும் அதை பொருள்களைப் பணம் கொடுத்து வாங்கியதற்கு ஆதாரமாக கோர்ட்டில் தாக்கல் செய்யலாம். நகையைப் பொறுத்த வரை அந்த நகையிலேயே கடையின் பெயர் மிகச் சிறியதாக அச்சிடப்பட்டிருக்கும். இதை ஆதாரமாகக் காண்பிக்கலாம்.

ஏ. இராணி, சங்கரன்கோவில்.

திருமணமாகாத நான், என் தாயுடன் வசித்து வருகிறேன். எனது 2ஆவது வயதில் என் தந்தை இறந்து விட்டார். தற்போது எனது வயது 45. என் தந்தைக்குச் சேர வேண்டிய தாத்தா சொத்து மற்றும் தந்தையின் சுய வருமானத்தில் வாங்கிய சொத்துக்களை, என் தாய், கடன் பாக்கிக்காக என் பெரியப்பாவுக்கு எழுதிக் கொடுத்து விட்டார். ஆனால் என் அப்பாவுக்குக் கடன் இருந்ததாகத் தெரியவில்லை. மேலும் என் பெரியப்பா இறந்து, அவரது வாரிசுகள் இருக்கிறார்கள். என் தாத்தா சொத்தும், என் அப்பா சொத்தும் எனக்குக் கிடைக்க வழி இருக்கிறதா?

தங்களுக்கு தாத்தா சொத்திலும் தந்தையின் சொத்திலும் கண்டிப்பாக பங்கு உண்டு. தாத்தா சொத்தில் தங்களது பங்கை மற்றவர்களுக்கு எழுதிக் கொடுக்க தங்களது தாய்க்கு உரிமை கிடையாது. எழுதிக் கொடுத்ததும் செல்லாது. தங்களது பெரியப்பாவின் வாரிசுகளிடம் பேசி, சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியுமா என்று முயற்சி செய்யவும். இல்லையென்றால் பெரியப்பாவின் வாரிசுகள் மீது நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்குத் தொடரலாம். தங்களது பங்கு சொத்து நிச்சயமாகக் கிடைக்கும்.

என் குழந்தை எனக்குக் கிடைக்குமா?

சி. கோமதி, நெல்லை.

எனக்குத் திருமணமாகி 12 வருடமாகின்றன. எங்களுக்கு ஓர் ஆண் வாரிசு. என் கணவருக்கு எல்லாவித கெட்டப் பழக்கங்களும் உண்டு. மேலும் என் கணவரது கெட்டப் பழக்கங்களைப் பயன்படுத்திக் கொண்டு என் மாமியார் வீட்டில் உள்ளவர்கள் அவரை ஏமாற்றிப் பணம் பறித்து வருகிறார்கள். என் மீது சந்தேகம் வேறு. என்னை உடல்ரீதியாகவும் கொடுமைப் படுத்துகிறார்கள். நான் என்ன முடிவு எடுப்பது?

தங்களது கணவரின் பழக்கவழக்கங்களை மாற்றுவதற்காக, மனோதத்துவ மருத்துவரையோ அல்லது மனநல ஆலோசகரையோ பார்த்து சிகிச்சைக்கு முயற்சித்தீர்களா? அல்லது குடும்பநல ஆலோசகரை சந்தித்துப் பேசினீர்களா? முயன்று பார்க்கவும். முயற்சித்தும் பலன் இல்லாவிட்டாலோ அல்லது விருப்பமில்லாவிட்டாலோ தாங்கள் குடும்பநல நீதிமன்றத்தில் வழக்குத்தான் பதிவுசெய்ய வேண்டும். விவாகரத்து வழக்குத் தொடர்ந்து, விவாகரத்துடன் மொத்தமாக ஒரு தொகை வேண்டும் என்று கேட்கலாம். அல்லது விவாகரத்து செய்ய விருப்பமில்லையென்றால் ஜீவனாம்சம் கேட்டு வழக்குத் தொடரலாம்.

பி. விஜயா, சென்னை.

என் கணவர் இறந்து விட்டார். நான் இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் 2 குழந்தைகள் மீதும் அதிகமாக நான் பாசம் வைத்திருந்ததால் நான் குழந்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. கணவர் இறந்த பிறகு உருவான சூழ்நிலைப் பிடிக்காமல் என் பிறந்த வீட்டுக்குச் சென்று விட்டேன். 3 வருடங்களுக்குப் பிறகு என் நாத்தனார் அழைத்ததால் வந்தேன். என் கணவர் நான் குழந்தைகளுடன் கடைசி வரை இருந்தால்தான் எனக்கு சொத்தில் பங்கு உண்டு என்று உயில் எழுதி வைத்திருப்பதால் எனக்கு சொத்தில் பங்கு கிடையாது என்கிறார்கள். என்னிடம் உயிலைக் காண்பிக்கவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்து என் கணவர் உயில் எழுதியதாகத் தெரியவில்லை. இதற்கு சட்டத் தீர்வு என்ன?

தாங்கள், தங்களது கணவரின் முதல் மனைவி மகன்கள் மீது பாகப்பிரிவினை வழக்குத் தொடரலாம். அந்த வழக்கின் போது உயில் தாக்கல் செய்யப்பட்டால் அந்த உயில் உண்மையானதுதானா என்பதை அறிய கையெழுத்துப் பரிசோதனைக்கு அனுப்பித் தெரிந்து கொள்ளலாம். சென்னையில் உயர்நீதிமன்ற வளாகத்தில் இலவச சட்ட ஆலோசனை மையம் உள்ளது. அங்கு சென்றால் வழக்குத் தொடுப்பதற்கு உதவி செய்வார்கள்.

ஆர். வசந்தா, கோயமுத்தூர்.

எனக்கு விவாகரத்து ஆகி விட்டது. அப்பொழுது (2 வருடங்களுக்கு முன்) வேலை இல்லாததால் 5 வயது ஆண்



வழக்கறிஞர் புஷ்பா ரமணி



என் தோழி தன்னுடைய கைக் குழந்தைக்கு ஐஸ்க்ரீம் ஸ்டிக்கினால் கூழ் ஊட்டிக் கொண்டிருந்தாள்.

"எவர்சில்வர் ஸ்பூனால் ஊட்டினால் அது குழந்தையின் ஈறுகளைக் காயப்படுத்தி விடலாம். அதனால் இந்த ஐடியா!" என்றாள்.

"அழகான பாப்பா! அற்புதமான யோசனை!" என்றேன் நான்.

- வி. எஸ்., பெங்களூர்.

குழந்தை, என் கணவர் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று தீர்ப்பாகி விட்டது. இப்பொழுது எனக்கு நல்ல வேலை கிடைத்து விட்டது. என் குழந்தையை என் பொறுப்பில் வைத்துக் கொள்ள நான் மனுதாக்கல் செய்ய முடியுமா?

குழந்தையின் நலத்தைத்தான் நீதிமன்றம் முக்கியமாகக் கருதும். தங்களுக்கு வேலையில்லை என்ற காரணம் சொல்லி குழந்தை தங்களது கணவரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தால் மறுபடியும் அந்த நீதிமன்றத்திலேயே மனுதாக்கல் செய்யலாம். அல்லது வேறு காரணத்தினால் இருந்தால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு (அப்பீல்) செய்யலாம்.

ஜே. லட்சுமி, பெரம்பூர்.

நான் காதல் திருமணம் செய்து கொண்டதால் என் வீட்டில் என்னை 11 வருடமாகியும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னுடன் கூடப் பிறந்தவர்கள் 5 அண்ணன் 1 அக்கா. காதல் திருமணம் செய்து கொண்ட என் அண்ணன் ஒருவரை குடும்பத்தில் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். என் தந்தையின் சொத்தையும் அதில் வரும் வருமானத்தையும் என்னைத் தவிர எல்லோரும் அனுபவிக்கிறார்கள். நான் சட்டப்படி என்ன செய்யலாம்?

தங்களது சகோதரர்களையும் சகோதரியையும் எதிர் மனுதாரர்களாக சேர்த்து அவர்கள் மீது நீதிமன்றத்தில் பாகப் பிரிவினை வழக்குத் தொடரலாம். தங்களது பங்கு சொத்து நிச்சயமாகக் கிடைக்கும். தங்களது அண்ணன் காவல் நிலையத்தில் எழுதி வாங்கிக் கொண்டது சட்டபூர்வமாக செல்லாது.



ஆஹா
50!

மின் விசிறியில் அழுக்கா? ஒரு துணியை மண்ணெண்ணெயில் நனைத்து அழுத்தித் துடைத்தால், பளிச்சென்றாகி விடும்.

- சி. இராசலட்சுமி, தாத்தனூர்.



அடிச்சாங்க பரிசு!

ஜூன் மாத மங்கையர் மலரில் இடம் பெற்றிருந்த ஆஹா 50! டிப்ஸ்களில், சிறந்ததைத் தேர்ந்தெடுக்கச் சொல்லியிருந் தோம்! தபால் நிலையத்தில் ஏதாவது அஞ்சலட்டை மிச்சம் மீதி இருக்குமா என்ற சந்தேகமே வந்துவிட்டது. அவ்வளவு போஸ்ட் கார்டுகள்! அதில் ஒரு ஆச்சர்யம் என்னவென்றால், இடம் பெற்ற எல்லாமே சிறப்பாக இருந்திருக்கும் போல.... நம்முடைய வாசகிகள் ஆளுக்கொன்றாக தேர்ந்தெடுத்திருந்த னர்.

''ஜூன் ஆர் சேமிப்பு', 'பப்பு மம்மு ஸ்டால்', 'பொரித்த எண்ணெய் வீணாகாமலிருக்க', 'தோட்டக் கனவு நனவாக', 'புடைவையில் ஓட்டை விழாமல் பின் செய்ய' இந்த ஐந்து குறிப்புகளுக்கும் மிகமிக அதிக அளவில் வோட்டுகள் விழுந்திருந்தன.


என்றாலும் ஒரு சில வாக்குகள் வித்தியாசத்தில் 'ஜூன் ஆர் சேமிப்பு' டிப்ஸ் முந்திக் கொண்டது. ஆசிரியர் குழுவின் வாக்கும் அதற்கே கிடைத்தது.

ஜூன் மாத ஆஹா பரிசு போட்டியில் 'வித்தியாச மான ஜூன் ஆர் சேமிப்பு' எழுதி 3 டயர் ஸ்டீமர் பரிசு பெறுகிறார் பி.எல்.எஸ். அய்யம்பாளையம். அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியர்களில், குலுக்கல் முறையில் 3 டயர் ஸ்டீமர் பரிசு பெறுகிறார் கே.லெக்ஷ்மி, திருக்காட்டுப் பள்ளி, தஞ்சாவூர்.

நன்றி வாசகிகளே! இந்த இதழிலும் 'ஆஹா பரிசு' போட்டித் தொடர்கிறது. தொடர்ந்து எழுதி தூள் கிளப்புங்க!

நியூஸ் சாலட்





• இலங்கையின் சோகம்!

• இலங்கையில் அறிவிக்கப்படாத போர் நடந்து கொண்டிருக்கிறது என்றே கூறலாம். கடற்படையினருக்கும் விடுதலைப் புலி அமைப்பினருக்குமிடையே கடும் மோதல் நடக்க, எட்டுப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. அமைதிப் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை என்று புலியினர் கைவிரிக்க, இலங்கை அரசு புலிகள் தலைமை அலுவலகம் உள்ள கிளிநோச்சியில் வான்வழித் தாக்குதல் நடத்தியது. விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யப்பட்ட இயக்கமாக ஐரோப்பிய யூனியன் அறிவித்ததால், அந்த நாடுகளிலிருந்து புலிகள் அமைப்புக்கு அதிகாரபூர்வமாக நிதி உதவி வர முடியாத நிலை. மொத்தத்தில் இலங்கையின் பொருளாதாரமும், மன அமைதியும் மேலும் நசிந்து கொண்டு வருகின்றன.

• கஞ்சா வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டிருந்த செரினா பானுவை மதுரை நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல் அவர் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட நோட்டுகளில் கள்ள நோட்டுகளும் இருந்ததாக வருமான வரித்துறை அதிகாரிகள் போலீஸில் புகார் செய்துள்ளனர்.

• கவர்ச்சி நடிகையாக இருக்கலாம். உடைகள் ஏதோ ஒப்புக்கு அணிந்திருக்கலாம். அதற்காக முத்தம் கொடுத்துவிட முடியுமா? மும்பையில் பாடகர் மைகா சிங்கின் பிறந்த நாள் விழாவுக்கு வந்திருந்த இந்தி கவர்ச்சி நடிகை ராக்கி சௌந்த் என்பவரை முத்தமிட்டதால் கோபமடைந்த நடிகை போலீஸில் புகார் கொடுக்க, பாடகரைக் கைது செய்தது காவல் நிலையம். ஜாமீனில் வெளிவந்திருக்கும் தவறிழைத்த பாடகர் பாடம் கற்றதாகத் தெரியவில்லை. "நான் எந்தத் தப்பும் செய்யவில்லை" என்றார். இது ஒருபுறமிருக்க விரும்பத்தகாத விளைவுகளுக்குக் காரணமாக அமையக்கூடிய அளவுக்கு மிகக் கவர்ச்சியாக உடை அணிவது தேவையா என்ற

• புதிய சிக்கல்!



கேள்வியும் எழுகிறது.

• 2004ல் இந்தியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புக்கள் அதற்கு முந்தைய ஆண்டை விட 13.6 சதவீதம் குறைந்திருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

• "ஆரம்பப் பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள், ரேஷன் கடைகள் போன்றவற்றை நிர்வகிக்கும் அதிகாரம் பஞ்சாயத்துகளுக்குத் தரப்பட வேண்டும். மாநிலத்தின் வருவாயில் 24 சதவீதம் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட வேண்டும்" என்று திருச்சியில் நடைபெற்ற தமிழக பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

• பெட்ரோலின் விலை லிட்டருக்கு நான்கு ரூபாயும், டீசலின் விலை லிட்டருக்கு இரண்டு ரூபாயும் அதிகரிக்கப்பட்டது. "இரண்டே வருடங்களில் ஐந்து முறை விலை அதிகரிப்பு என்பது மனசாட்சியற்ற செயல்" என்றது மார்க்சிஸ்ட் கட்சி. "பணவீக்கத்துக்கு இது வழிவகுக்கும்" என்றது கம்யூனிஸ்ட் கட்சி. நாடெங்கும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து அடங்கின.

- ஜி.எஸ்.எஸ்.



• பெட்ரோல் எதிர்ப்பு


World Cup Soccer
OFFER
இந்தியாவின் No.1 டீலர்
வசந்த் & கோ
தரம் • நம்பிக்கை
வசந்த் & கோ
வசந்த் & கோவின் சிறப்பு சலுகை ◇ ஸ்க்ராட்ச் கார்டின் மூலமாக பரிசுகள் மற்றும் ரொக்க தள்ளுபடி*
◇ Split A/C ரூ. 12,990/- முதல்
◇ 400 வாட்ஸ் 21" (53cms) ப்ளாட் ஸ்டீரியோ டிவி ரூ. 7490/-
29"(73cms) ப்ளாட்
700 வாட்ஸ் ஸ்டீரியோ டிவி
ரூ. 12,990 முதல்
21"(53cms) ஸ்டீரியோ டிவி
ரூ. 5990/- முதல்
◇ SAMSUNG ப்ளாட் டிவிகளுக்கு அழகிய டிராவல் பேக் முதல் ஹூண்டாய் கார் வரை இலவசம்
◇ LG 20" மற்றும் அதற்கு மேற்பட்ட அளவுகளில் உள்ள கலர் டிவி வாங்குபவர்களுக்கு கால்பந்து முதல் DVD ப்ளேயர் வரை
◇ ONIDA குறிப்பிட்ட மாடல் கலர் டிவிகளுக்கு 4 வருட வாரண்டி LCD டிவிகளுக்கு ஹோம் தியேட்டர் ஸ்பீக்கர் & DVD ப்ளேயர் இலவசம்
◇ PHILIPS குறிப்பிட்ட மாடல் கலர் டிவிகளுக்கு Philips அயர்ன் பாக்ஸ் மற்றும் டிராவல் பேக் இலவசம்
◇ TCL அனைத்து மாடல் ஏசிகளுக்கு Cordless Head Phone இலவசம்
◇ HAIER ப்ளாட் டிவிகளுக்கு 4வருட வாரண்டி
◇ SANSUI தயாரிப்புகளுக்கு Sports Bag முதல் LCD டிவி வரை இலவசம்
◇ VIDEOCON குறிப்பிட்ட மாடல் கலர்டிவிகளுக்கு டிராவல் பேக் முதல் ரூ. 1000/– வரை தள்ளுபடி
SAMSUNG | LG | Carrier | ONIDA |
Godrej | HITACHI | VOLTAS | PHILIPS |
Electrolux | GENERAL |
TCL | Haier | HYUNDAI | SHARP |
சென்னை : தி.நகர் – 52010572, 52029797, 52010573 கோடம்பாக்கம் – 52010576 அடையார் – 52010579 சூளைமேடு – 52010582 புரசைவாக்கம் – 52010571 மயிலாப்பூர் – 52010578 ராயபுரம் – 52010584 வண்ணாரப்பேட்டை – 52010583 பாடி – 52010577 நங்கநல்லூர் – 52056514 ஆலப்பாக்கம்– போரூர் – 52010581 தாம்பரம் – 52010575 செங்கல்பட்டு – 226241 விழுப்புரம் – 226088, 221422 வேலூர் – 2222162, 2252064 மதுரை – 2331775, 2347262 திண்டுக்கல் – 2433970 திருச்சிராப்பள்ளி – 2700457 தஞ்சாவூர் – 236231, பட்டுக்கோட்டை – 224107 திருநெல்வேலி ஜங்ஷன் – 2334043 பாளையங்கோட்டை – 2502234 தூத்துக்குடி – 2337599 கோவில்பட்டி – 230054 நாகர்கோவில் – 235929 கோயம்புத்தூர் – 2396928, 2495271 சேலம் – 2266525 ஈரோடு – 2266123 திருப்பூர் – 2246224 ஓசூர் – 223145 பெங்களூர் – 22236633 பாண்டிச்சேரி – 2337755

Registered with the Registrar of Newspaper of India under N
30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licen
to post without prepayment under PMG's Licence No. WPP 1
CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilan




என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
ஜுலை 2006
புத்தகம்–2
திருமண மலர்
கல்யாணம், கச்சேரி,
கொண்டாட்டம்!

மங்கையர் மலர்

திருமண மலர்

பயனடைந்தவர்கள் பாராட்டு!





லாவண்யா - மகாதேவன்



டி.வி.ராஜாமணி,
வடசேரி,
நாகர்கோயில்

எனது மூத்த மகளின் திருமணம், மங்கையர் மலரின் திருமண விளம்பரம் மூலமாகத்தான் நடைபெற்றது. நான் கொடுத்திருந்த விளம்பரத்திற்கு, நிறையவே வரன்கள் வந்தன. அவற்றுள் எங்களுக்கு ஏற்ற வரனை தேர்ந்தெடுத்து, திருமணத்தையும் விமரிசையாக நடத்தினோம். இல்லங்களில் 'திருமணம்' என்ற 'ஒளிவிளக்கை' ஏற்ற, ஒரு தூண்டுகோலாக **'மங்கையர் மலர்'** அமைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தங்களின் நற்பணி தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம். **திருமணங்கள் மங்கையர் மலரால் நிச்சயிக்கப்படுகின்றன** என்பது எங்கள் நேரடியான அனுபவம்.

இப்படிக்கு,
டி.வி. ராஜாமணி,
வடசேரி, நாகர்கோயில்

மங்கையர் மலரின்

திருமண மலர்

இணைப்பிதழ்

திருமண மலர் புதிய விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு	ரூ. 500/-
30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா	ரூ. 15/-
வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய கூடுதல் கட்டணம்	ரூ. 100/-

1"X1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/-

(அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-)

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-

வாசகர்களும், விளம்பரதாரர்களும், இந்தப் புதிய மாற்றங்களைப் பயன்படுத்திக் கொண்டு பலனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர், மங்கையர் மலர்.

திருமணங்களில் கருத்தில் கொள்ள வேண்டியவை :

நல்லதையே பேசுங்க!

நம் இந்து கலாசாரத்தின்படி திருமண நாள் அன்று மணமகன் 'ஸ்ரீநிவாசனாகவும்' மணமகள் 'ஸ்ரீ'யாக வும் கருதப்படுகிறார்கள். ஆகையால், அன்றைய தினம் அவர்கள் மனம் நோகாதபடி நடந்து கொள்ள வேண் டும். மணமகனின் படிப்பு, வேலை, புற அழகு இவற்றைப் பற்றிப் பிரஸ்தாபிக் கக் கூடாது. அதே போல், மணப் பெண்ணைப் பார்த்து, 'மத்த நாள்ல அழகா இருப்பா; இன்னைக்கு ஏன் இப்படி ஒரு மாதிரியா டல்லா தெரியறா?' 'இந்தக் கலர் எடுப்பாவேயில்லை' போன்ற விமர்சனங்களை அறவே தவிர்த்து விடுங்கள். நம்மால் முடிந்தவரை அவர் களுக்கு நல்ல, சந்தோஷமான நினைவு களை மட்டுமே கொடுப்போம்.



எனக்கும் உங்களுக்கும் வேண்டுமா னால் முழங்கை அளவு ஜரிகையுள்ள பட்டுப் புடைவை அழகாகத் தெரிய லாம். அதற்காக, மணமகள் விரலளவு ஜரிகையுள்ள பட்டுப் புடைவை உடுத்தி யிருந்தால், ஜரிகையைக் குறை சொல் லும் பல்லவி பாட வேண்டாம். ஒவ் வொருத்தர் ரசனை ஒவ்வொரு மாதிரி. அவளுக்குப் பிடித்ததை அவள் தேர்வு செய்துள்ளாள். நம் அபிப்பிராயம் அங்கு தேவையில்லை!

சத்திரம், சாப்பாட்டு விஷயமும் அப்படியே. நன்றாக இருந்தால் மனதா ரப் பாராட்டுங்கள். நிறைகளை, நல் லதை, மட்டுமே பேசுங்கள். சின்னச் சின்ன குறைகளை கண்டுகொள்ள வேண்டாம்!

- சங்கீதா சதீஷ், மதுரை.

படம் : **யோகா**

கல்யாணவரம் தரும்
காமாட்சி!

கல்யாணமாகாத காளையரும், கன்னியரும், கையில் பூத்தட்டுகளுடனும், எலுமிச்சை பழ மாலைகளுடனும், கோடைக்கால வெப்பத்தையும் பொருட்படுத்தாமல் மாங்காடு காமாட்சியைத் தரிசிப்பதற்கு நின்று கொண்டிருந்தனர். தேவியைத் தரிசிக்க வந்த பக்தர்கள், வெயிலில் வாடக்கூடாதே என்ற அக்கறையினால், கோயில் வாசலில் இருக்கும் இரண்டு பெரிய மரங்கள் நிழற்குடை பிடிக்கின்றன.

நுழைவுவாயிலில் உள்ள துவாரபாலகிகள் இருவரும் நம்மை முறைத்துப் பார்த்து, "உஷ், சத்தம் போடாதீர்கள். உள்ளே தேவி தவம் செய்கிறார். அதற்கு குந்தகம் விளைவிக்காதீர்" என்று வலது கை ஆள்காட்டி விரலை உயர்த்தி, எச்சரிக்கிறார்கள். நாம் பவ்யமாக சந்நிதியில் நுழைந்தால் கண்முன் காட்சி தருகிறது ஒரு சிறு குன்று போல் 'மேரு'.

'அர்த்தமேரு ஸ்ரீசக்ரம்' என்று பிரசித்தி பெற்றதும், ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், எட்டுவிதமான கந்தக மூலிகையின் கலவையால் உருவாக்கப்பட்டதுமான 'ஸ்ரீசக்ரம்' பார்ப்பதற்கு கோயில் கொடி மரத்தின் முன்னே அமைக்கப்பட்டிருக்கும் 'பலிபீடம்' போல் காட்சி அளிக்கிறது.

ஒரு சமயம் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் பிராட்டியுடன் வீற்றிருந்த பொழுது, ஈஸ்வரி விளையாட்டாக ஈசனின் கண்களைப் பொத்த, சூர்ய சந்திரர்களாகக் கருதப்படும் ஈசனின் கண்கள் மறைக்கப்பட, ஸர்வலோகங்களும் இருளில் மூழ்குகின்றன. உலகின் அனைத்து செயல்களும் ஸ்தம்பிக்கின்றன. தவறு ஒன்றைச் செய்தால், அதற்குண்டான தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தும்வண்ணம், ஈசனின் ஆக்ஞைப்படி, தேவி, தமது தோழிகளான நவ கன்னிகைகளுடன் பூலோகம் வந்து மாங்காட்டில் சிவபூஜை செய்து வருகிறார். (ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயிலுக்கு மேற்புறம் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் கோயில் உள்ளது. தேவி காமாட்சி இங்கு வந்து ஈசனை பூஜை செய்ததாக ஐதீகம்).

வெகுகாலமாகியும், அழைத்துப் போக ஈஸ்வரன் வராததால், தேவி கடும்தவம் மேற்கொள்ள விழைகிறாள். ஐந்து ஹோமகுண்டங்களை உருவாக்கி, அதில் வேள்வித்தீயை மூட்டி (பஞ்சாக்னி) நடு குண்டத்தின் மீது ஒற்றைக் காலில் நின்று, ஈசனுடன் இணைய கடுந்தவம் புரிகிறார். இந்தத் தவநிலை, ஸர்வலோகத்தையும் உலுக்கிவிட, சிவபெருமான்



வெள்ளீஸ்வரர் என்ற திருநாமத்துடன், மாங்காட்டுக்கு வந்து அசரீரியாக, கல்யாணத்திற்காக, காஞ்சி செல்லும் படி காமாட்சிக்குக் கட்டளையிடுகிறார். (அம்மையும் அவ்வாறே சென்று, காஞ்சியில் மணலால் லிங்க வடிவத் தைப் பிடித்து, பூஜித்து, பின்னர் மணம் செய்து கொள்கிறார்).

